# Government of Tamil Nadu

## Department of Employment and Training

Course : Competitive Exam

Subject : Current Affairs

Topic : Current Affairs(Tamil) – May 2021

© **Copyright**

The Department of Employment and Training has prepared the Competitive Exams study material in the form of e-content for the benefit of Competitive Exam aspirants and it is being uploaded in this Virtual Learning Portal. This e-content study material is the sole property of the Department of Employment and Training. No one (either an individual or an institution) is allowed to make copy or reproduce the matter in any form. The trespassers will be prosecuted under the Indian Copyright Act.

It is a cost-free service provided to the job seekers who are preparing for the Competitive Exams.

**Director,**
**Department of Employment and Training.**

# பொருளடக்கம்


வரலாறு 01






அரசியல் அறிவியல் 20


புவியியல் 23






பொருளாதாரம் 25

அறிவியல் 30

தினசரி
தேசிய நிகழ்வு 39





47 சர்வதேச நிகழ்வு

தமிழ்நாடு 51



# 1. வரலாறு






## 1.1 முக்கிய தினங்கள்

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| ஏப்ரல் 30 | **உப்பு சத்தியாகிரக நினைவு தினம்** | ▪ நாகை மாவட்டம், வேதராண்யத்தில் உப்பு சத்தியாகிரகப் போராட்டத்தின் 91ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி, அகத்தியம்பள்ளியில் அமைந்துள்ள நினைவுத் தூண் வளாகத்தில் உப்பு அள்ளி தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.<br>▪ ஆங்கிலேய அரசு உப்புக்கு வரி விதித்ததைக் கண்டித்தும், சுதந்திரப் போராட்டத்தின் ஒரு பகுதியாகவும், 1930 ஆம் ஆண்டு ஏப்ரல் 30–ஆம் தேதி ராஜாஜி தலைமையில் வேதராண்யத்தில் உப்பு சத்தியாகிரகப் போராட்டம் நடைபெற்றது. சர்தார் வேதரத்னம் உள்ளிட்டோர் இப்போராட்டம் வெற்றி பெற பெரும் பங்காற்றினர்.<br>▪ இந்த சம்பவம் நினைவுகூரும் வகையில், ஆண்டுதோறும் ஏப்ரல் 30ஆம் தேதி உப்பு அள்ளி, மறைந்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது.<br>▪ சத்தியாகிரகப் பேராட்டத்தில் பங்கேற்று தண்டனை பெற்ற சர்தார் வேதரத்தினத்தின் பெயரன்களான கஸ்தூர்பா காந்தி கன்யா குருகுலம் நிர்வாகிகள் அ.வேதரத்தினம், அ.கேடிலியப்பன், பாத யாத்திரைக் குழுத் தலைவர் சக்தி செல்வகணபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| ஏப்ரல் 30 | ஆயுஷ்மான் பாரத் திவாஸ் | ▪ இரண்டு முக்கியமான நோக்கங்களை கருத்தில் கொண்டு ஆயுஷ்மான் பாரத் திவாஸ் ஆண்டுதோறும் ஏப்ரல் 30ல் கடைப்பிடிக்கப்படுகிறது.<br>▪ ஏழை எளிய மக்களுக்கான சிறந்த உடல்நலன் மற்றும் மருத்துவ காப்பீடு வழங்கல்.<br>▪ கிராமப்புற பகுதிகளில் எடுக்கப்பட்ட சமூக பொருளதார சாதிய கணக்கீடுகளின் அடிப்படையில் குறைந்த விலையிலான மருத்துவ சேவைகள் வழங்குதலை நோக்கமாகக் கொண்டது. |
| மே 1 | சர்வதேச தொழிலாளர் தினம் | ▪ 1919ம் ஆண்டு முதல் முதல் சர்வதேச தொழிலாளர் ஆணையத்தால் மே தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.<br>▪ இந்தியாவில் முதன் முதலில் 1913ம் ஆண்டில் கொண்டாடப்பட்டது. |
| | மகாராஷ்டிரம், குஜராத் மாநிலங்கள் தினம்: பிரதமர் வாழ்த்து | ▪ 1960ம் ஆண்டு மே 1ம் தேதி குஜராத்தி மொழி பேசும் மக்கள் அதிகம் உள்ள பகுதியை குஜராத் எனவும் மராத்திய மொழி பேசும் மக்கள் அதிகம் உள்ள பகுதியை மகாராஷ்டிரா என்றும் மும்பை மாகாணத்திலிருந்து பிரித்து தனித்தனி மாநிலமாக உருவாக்கப்பட்டது. |
| மே 3 | உலக பத்திரிகை சுதந்திர தினம் | ▪ 2021ம் ஆண்டு மையக்கருத்து – "Information as a Public Good".<br>▪ 1993ம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் கடைப்பிடிக்கப்படுகிறது. |
| மே 4 | சர்வதேச தீ விபத்து படை தினம் | ▪ 1999 ம் ஆண்டு முதல் அவர்களின் சமூக மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்காக செயின் புளோரியன்ஸ் தினம் என்ற பெயரில் கடைப்பிடிக்கப்படுகிறது. |
| மே 4 | உலக ஆஸ்துமா தினம் 2021 | ▪ 2021ம் ஆண்டிற்கான மையக்கருத்து – "Uncovering Asthma Misconceptions". |
| மே 5 | உலக கை சுத்தம் தினம் | |
| மே 7 | 61வது எல்லை சாலை அமைப்பு தோற்றுவித்த தினம் | ▪ 1960–மே 7ல் தோற்றுவிக்கப்பட்டது.<br>▪ உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.<br>▪ லெப்டினன் ஜெனரல் ராஜீவ் சவுத்ரி தூதல் இயக்குநராக உள்ளார். |
| மே 8 | உலக ரெட் கிராஸ் மற்றும் ரெட் கிரஸன்ட் தினம் | ▪ மையக்கருத்து – 'Unstoppable'. |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| மே 8, 9 | **இரண்டாம் உலகப்போர் நினைவு தினம்** | ▪ ஐக்கிய நாடுகள் பொதுச்சபை 2004ம் ஆண்டு முதல் மே 8, 9 ல் இரண்டாம் உலகப்போரில் இறந்தவர்களின் நினைவை போற்றும் வகையில் இந்த நாளை கடைப்பிடிக்கிறது.<br>▪ இரண்டாம் உலகப்போர் – 1941–1945. |
| மே 11 | **தேசிய தொழில்நுட்ப தினம்** | ▪ 1998ம் ஆண்டு முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் அவர்களால் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்ட பொக்ரான் அணுகுண்டு சோதனை வெற்றியின் நினைவாக ஆண்டுதோறும் மே 11, 1999ம் ஆண்டு முதல் தேசிய தொழில்நுட்ப தினமாக கொண்டாடப்படுகிறது. |
| மே 12 | **சர்வதேச செவிலியர் தினம்** | ▪ மையக்கருத்து – 'Nurses: A Voice to Lead – A vision for future healthcare'. |
| மே 15 | **சர்வதேச குடும்பங்கள் தினம்** | ▪ மையக்கருத்து – "Families and New Technologies". |
| மே 16 | **தேசிய டெங்கு தினம்** | ▪ மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் இந்த தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.<br>▪ ஏடிஸ் வகை கொசுக்களால் டெங்கு காய்ச்சல் பரவுகிறது. |
| மே 18 | **உலக எய்ட்ஸ் தடுப்பூசி தினம்** | ▪ HIV தடுப்பூசி விழிப்புணர்வு தினம் ஆண்டுதோறும் மே 18ல் கடைப்பிடிக்கப்படுகிறது.<br>▪ அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் 1997ல் இந்த நாளை முன்னெடுத்தார். 1998 முதல் இந்த தினம் ஆண்டுதோறும் கடைப்பிடிக்கப்படுகிறது. |
| மே 18 | **சர்வதேச அருங்காட்சியக தினம்** | ▪ மையக்கருத்து – "The Future of Museums: Recover and Reimagine". |
| மே 17–23 | **ஐக்கிய நாடுகள் உலக பாதுகாப்பு வாரம் 2021** | ▪ மையக்கருத்து – "Streets for Life #Love30". |
| மே 21 | **தேசிய தீவிரவாதத்திற்கு எதிரான தினம்** | ▪ முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தி படுகொலை செய்யப்பட்ட நாளான மே–21 ஆண்டுதோறும் தேசிய தீவிரவாதத்திற்கு எதிரான தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.<br>▪ இந்தியாவின் மிக இளம் வயது பிரதமராக 1984முதல் 1989 வரை பதவி வகித்தவர். |
| மே 22 | **சர்வதேச உயிர்கோள பன்முக தன்மை தினம் (World Biodiversity Day)** | ▪ மையக்கருத்து – "We're part of the solution". |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| | **தேசிய மிகவும் பாதிப்பிற்குள்ளான உயிரினங்கள் தினம்** | ▪ ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தின் 3வது வெள்ளிக்கிழமை மிகவும் பாதிப்பிற்குள்ளாகும் உயிரினங்களின் தேசிய தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. |
| **மே 29** | **உலக செறிமான சுகாதார தினம்** | ▪ 2021ன் மையக்கருத்து – "Obesity: An Ongoing Pandemic." |
| **மே 29** | **சர்வதேச எவரெஸ்ட் தினம்** | ▪ 1953ல் நேபாளத்தின் டென்சிங் நார்கே மற்றும் நியூசிலாந்தின் எட்மட் ஹிலாரி போன்றோர் முதல் முறையாக எவரெஸ்டை அடைந்தனர். ▪ 2008 முதல் சர்வதேச எவரெஸ்ட் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. |

# 1.2 பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்

### நாட்டோ இராணுவ பயிற்சி

- நாட்டோ அமைப்பின் "DEFENDER Europe 21" என்ற இராணுவ பயிற்சி அல்பினியாவில் துவங்கப்பட்டுள்ளது.

NATO

- இது ஒரு அரசுகளுக்கிடையேயான கூட்டு குழுவாகும். வாஷிங்டன் ஒப்பந்தம் 1949, ஏப்ரல் 19 ன் கீழ் உருவாக்கப்பட்டது.
- தலைமையிடம் – புருஸல்லஸ், பெல்ஜியம்

### சமுத்ரா சோது–II

- இந்திய கடற்படை சமூகத்தில் இந்தியாவின் ஆக்ஸிஜன் தேவையை சரிசெய்ய இந்த சமுத்ர சேது IIஐ துவங்கியுள்ளது.
- இந்த திட்டத்தில் INS தல்வார் INS கொல்கத்தா போன்ற போர்க்கப்பல்கள் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு ஆகிஸிஜன் கொண்டு செல்ல உறுதுணை புரிகின்றது.
- INS ஐராவத், INS ஜலாஷ்வா போன்ற போர்க்கப்பல்களும் இந்த திட்டத்திற்கு திருப்பி விடப்பட்டுள்ளது.

### ஜம்மு எல்லைப் பகுதியில் ராணுவ தலைமை தளபதி

- எல்லைக் கோட்டு பகுதியில் மேற்கொள்ளப் பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை ராணுவ தலைமைத் தளபதி எம்.எம்.நரவணே ஆய்வு செய்தார்.
- இந்திய ராணுவ தலைமைத் தளபதி எம்.எம். நரவணே, அமெரிக்க ராணுவ தலைமைத் தளபதி ஜேம்ஸ் சி மெக்கான்விலேவுடன் தொலைபேசியில் உரையாடினார்.
- இந்திய முப்படைகளின் தலைவர் (Chief of Defence Staff) – பிபின் ராவத்
- இந்திய கடற்படை தளபதி – அட்மைரல் கரம்பிர் சிங்
- இந்திய விமானப்படை தளபதி – ராகேஷ் குமார் சிங் பதௌரியா

### ராஜ்புத் போர்க்கப்பல் கடற்படையில் இருந்து விடுவிப்பு

- இந்திய கடற்படையில் 41 ஆண்டுகள் பணியாற்றிய ஐஎன்எஸ் ராஜ்புத் என்ற போர்க்கப்பல் கடற்படையிலிருந்து (மே 21) விடுவிக்கப்படுகிறது.
- ரஷியாவில் தயாரிக்கப்பட்ட கஷின் ரகத்தைச் சேர்ந்த இந்த போர்க்கப்பல், இந்திய கடற்படையில் கடந்த 1980 மே 4–ஆம் தேதி சேர்க்கப்பட்டது. அதை அப்போதைய ரஷியாவுக்கான இந்திய தூதர் ஐ.கே.குஜ்ரால் கடற்படையில் இணைத்து வைத்தார்.

### இந்திய விமானப்படையின் சூரியகிரன் விமான சாகசம்

- 1971ம் ஆண்டு வங்கதேச போரில் வெற்றி பெற்றதன் நினைவை கொண்டாடும் வகையில் சென்னையில் இந்திய விமானப்படையின் சாகச நிகழ்ச்சி சூர்யாகிரன் என்ற பெயரில் நடைபெறுகிறது.
- இந்தியாவிலும் தெற்கு ஆசியாவிலும் 600க்கும் மேற்பட்ட காட்சிகளை இந்த அமைப்பு ஏற்படுத்தியுள்ளது.
- 75வது சுதந்திர தினத்தை முன்னிட்டு சிறப்பு காட்சியும் அமைக்கப்பட்டது.
- சூர்யகிரன் என்பது சூரியனின் கதிர்கள் ஆகும் 9 ஹெலிகாப்டர்கள் இணைந்து ஒருங்கிணைக்கப்பட்ட சாதனையை நிகழ்த்துவது இதுவே முதல்முறையாகும்.

### இந்திய கடலோர காவல் கப்பல் – சஜக்

- தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித்தோவல் கோவா கப்பல் தளத்தில் கட்டி முடிக்கப்பட்ட கடலோர காவல் கப்பல் சஜக்–ஐ நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

## 1.3 உலக அமைப்புகள் உடன்படிக்கைகள் மற்றும் மாநாடுகள்

### ஈரான் அணுசக்தி பேச்சுவார்த்தை

- ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்தைப் பாதுகாப்பதற்கான பேச்சுவார்த்தையை ஐந்து நாடுகளின் பிரதிநிதிகள் ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் மீண்டும் தொடங்கினார்.
- ஈரானுடனான 2015–ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக வியன்னாவில் நடைபெற்று வரும் மாநாடு மீண்டும் தொடங்கியது.
- ரஷியா, பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ், சீனா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்றனர்.
- அணுசக்தி ஒப்பந்தத்தில் மீண்டும் அமெரிக்காவை இணைப்பது குறித்து அவர்கள் விவாதித்தனர் என்று அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.
- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் நிரந்தர உறுப்பு நாடுகள் மற்றும் ஜெர்மனிக்கும் இடையே கடந்த 2015–ஆம் ஆண்டில் அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது.
- அதற்குப் பதிலாக, ஈரான் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளை நீக்குவதாக வல்லரசு நாடுகள் ஒப்புக் கொண்டன. ஒபாமா ஆட்சிக் காலத்தின் போது கையெழுத்தான இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக, அடுத்து வந்த அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்தார். அத்துடன், ஒப்பந்தம் காரணமாக விலக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளை ஈரான் மீது இவர் மீண்டும் விதித்தார்.
- அமெரிக்காவின் புதிய அதிபராகப் பொறுப்பேற்றுள்ள ஜோ பைடன், ஈரான் அணுசக்தி ஒப்பந்தத்தில் மீண்டும் இணைவதற்கான தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

### ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா கவலை

- ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி T.S. திருமூர்த்தி தனது சுட்டுரைப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "இஸ்ரேல் படையினர் மற்றும் பாலஸ்தீனத்தின் ஹமாஸ் இயக்கத்தினர் ஆகிய இரு தரப்பினருக்கும் இடையே நடைபெற்று வரும் மோதல் குறித்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் இந்தியா மிகுந்த கவலை தெரிவித்தது.
- ஐ.நா.பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸும் மிகுந்த கவலை தெரிவித்தார்.

**ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை**

- துவக்கம் – 1945
- தலைமையிடம் – நியுயார்க், அமெரிக்கா
- நிரந்தர உறுப்பினர்கள் – 5 (US, UK, ரஷ்யா, பிரான்ஸ், சீனா)
- 2021, 2022ம் ஆண்டிற்கான தற்காலிக உறுப்பினர் பதவிக்கு இந்தியா தேர்வு (10 தற்காலிக உறுப்பினர்கள்).

### பிரிக்ஸ் வேலைவாய்ப்பு கூட்டம்

- மெய்நிகர் முறையில் பிரிக்ஸ் நாடுகள் வேலை செயல்கூட்டம் நடைபெற்றது.

- இந்த கூட்டத்திற்கு இந்தியா தலைமை தாங்கியுள்ளது.
- 2021ம் ஆண்டிற்கான பிரிக்ஸ் நாடுகள் கூட்டமைவிற்கு இந்தியா தலைமையேற்றுள்ளது.

பிரிக்ஸ் (BRICS)

- துவக்கம் – 2006
- உறுப்பு நாடுகள் – பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்ஆப்பிரிக்கா
- தலைமையிடம் – ஷாங்காய், சீனா
- துவங்கிய நாடுகள் – சீனா, பிரேசில், ரஷ்யா, இந்தியா. 2010ல் தென்ஆப்பிரிக்கா இணைந்து.

### ஐக்கிய நாடுகள் அமைதியாளர்களுக்கான UNITE AWARE தளம்

- இந்தியா 2021 ஆகஸ்டில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபைக்கு தலைமையேற்க உள்ளது. அந்த சமயத்தில் ஒற்றுமையை வலுப்படுத்தவும் அமைதியை மேம்படுத்தவும் UNITE AWARE என்ற தளத்தினை உருவாக்கி வெளியிட திட்டமிட்டுள்ளது.
- இந்த திட்டத்திற்காக இந்திய அரசு 1.64 மில்லியன் டாலர் ரூபாய் செலவழித்துள்ளது.
- இந்த தகவல்களை ஐக்கிய நாடுகள் சபைக்கான துணை நிரந்தர பிரதிநிதி K.நாகராஜ் நாயுடு தெரிவித்தார்.

### பிரிக்ஸ் ஷெர்பாக்கள் கூட்டம்

- பிரிக்ஸ் நாடுகளின் ஷெர்பாக்கள் 2வது கூட்டம் இந்தியா தலைமையில் நடைபெற்றது.
- 2021ம் ஆண்டிற்கான பிரிக்ஸ் அனைத்து கூட்டத்திற்கும் இந்தியா தலைமை தாங்குவதால் இந்த கூட்டமும் இந்தியாவின் தலைமையில் கீழ் நடைபெற்றது.

பிரிக்ஸ்:

- துவக்கம் – 2006
- உருவாக்கிய உறுப்பினர்கள் – பிரேசில், இந்தியா, சீனா, ரஷ்யா, 2010ல் தென்ஆப்பிரிக்கா இணைந்தது.

## 1.4 சிறந்த நபர்கள்

### முன்னாள் அட்டர்னி ஜெனரல் சொராப்ஜி மறைவு

- மும்பையில் 1930–ஆம் ஆண்டு பிறந்த சோலி சொராப்ஜி, கடந்த 1953–இல் வழக்குரைஞரானார். மும்பை உயர்நீதிமன்றத்தில் மூத்த வழக்குரைஞராக 1971–இல் நியமிக்கப்பட்டார்.
- மனிதஉரிமைவழக்குரைஞராகஅறியப்பட்டசோலி சொராப்ஜி, கடந்த 1989–90ஆம் ஆண்டுகளிலும், 1998–2004–ஆம் ஆண்டுகளிலும், அட்டர்னி ஜெனரலாகப் பணியாற்றினார். நாட்டின் இரண்டாவது உயரிய விருதான பத்ம விபூஷண் விருதைப் பெற்றுள்ளார்.
- நீதித் துறை சார்ந்த நூல்கள், ஊடக தணிக்கை–அவசர நிலை, மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் ஆகியவை தொடர்பான நூல்களை சோலி சொராப்ஜி எழுதியுள்ளார்.
- கேசவானந்தபாரதி வழக்கு, எஸ்.ஆர்.பொம்மை வழக்கு போன்ற முக்கிய வழக்குகளில் ஆஜராகி வாதாடினார். அரசமைப்புச் சட்டத்தின் 66ஏ பிரிவு கருத்து சுதந்திரத்துக்கு எதிரானது என்று உச்சநீதிமன்றம் கடந்த 2015–ஆம் ஆண்டு தீர்ப்பளித்தது. இதை முன்மொழிந்தவர் சோலி சொராப்ஜி.
- கடந்த 1999–இல் கார்கில் போரின்போது கடற்படை ரோந்து கப்பலை சேதப்படுத்தியதாகக் கூறி இந்தியாவிடம் இழப்பீடு கோரி சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தது பாகிஸ்தான். அந்த வழக்கில் இந்திய அரசு சார்பில் ஆஜராகி வாதாடி, வெற்றியைத் தேடித் தந்தார். இந்தியாவுக்கு ஆதரவாக தீர்ப்பளித்த சர்வதேச நீதிமன்றம், பாகிஸ்தானின் கோரிக்கையை நிராகரித்து விட்டது.

### ஜம்மு காஷ்மீர் முன்னாள் ஆளுநர் ஜக்மோகன் மறைவு

- ஜம்மு காஷ்மீர் மாநில முன்னாள் ஆளுநர், தில்லி துணைநிலை ஆளுநர், நாடாளுமன்றவாதி, மத்திய அமைச்சர், அரசு அதிகாரி என பல்வேறு பதவிகளை வகித்து வந்தவரும் பல்வேறு சர்ச்சைகளுக்காளானவருமான ஜக்மோகன் மல்ஹோத்ரா தில்லியில் காலமானார்.

### விமான விஞ்ஞானி மணாஸ் பிகாரி வெர்மா

- இலகுரக விமானமான தேஜஸ் விமானங்கள் உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றிய மனாஸ் பிஹாரி வெர்மி காலமானார். DRDOவில் 35 ஆண்டுகாலம் விஞ்ஞானியாக பங்காற்றியவர். 2018ம் ஆண்டில் இவருக்கு இந்திய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவித்துள்ளது.

### துப்பாக்கி சுடும் வீரர் "சந்திரோ தோமார்"

- துப்பாக்கி சூடு தாடி என அழைக்கப்பட்ட சந்திரோ தோமர் சமீபத்தில் காலமானார். இவர் உத்திரபிரதேச மாநிலத்தை சேர்ந்தவர்.

### கேரளம்: சிரியன் தேவாலய பிஷப் பிலிப்போஸ் மார் கிரைஸ்டோம் மறைவு

- கேரளத்தின் மலங்கரா மார்தோமா சிரியன் தேவாலய பிஷப்பாக நீண்ட காலம் சேவையாற்றி வந்த பிலிப்போஸ் மார் கிரைஸ்டோம் காலமானார்.

### பாரதி இலக்கியப் பயிலக இயக்குநர் வெ.கோபாலன் காலமானார்

- தஞ்சாவூரில் வரலாற்று ஆய்வாளரும் பாரதி அன்பரும், பாரதி இலக்கியப் பயிலக இயக்குநருமான தஞ்சை வெ.கோபாலன் மாரடைப்பால் காலமானார்.
- திருவையாறு வரலாறு, தஞ்சை மராட்டியர் வரலாறு, தஞ்சை நாயக்க மன்னர்கள் வரலாறு, வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகம், திருக்கோயில்களில் நாட்டியாஞ்சலி உள்பட 15 நூல்களை எழுதியுள்ளார்.

### மகாத்மா காந்தியின் தனிச்செயலர் V.கல்யானம்

- 1943 முதல் 1948 வரையிலான காலகட்டத்தில் மகாத்மாக காந்தியின் தனிச்செயலராக பணியாற்றிய V.கல்யாணம் காலமானார்.
- 1960களில் ராஜாஜியுடன் பணியாற்றியவர்.

### குச்சிபுடி நடன கலைஞர்: பசுமர்தி கேசவர்

- ஆந்திர பிரதேச மாநிலம் கிருஷ்ணா மாவட்டத்தைச் சேர்ந்த குச்சிபுடி நடன கலைஞர் பசுமர்தி கேசவர் காலமானார்.

**இந்திய பாரம்பரிய நடனங்கள்:**

- பரதநாட்டியம் – தமிழ்நாடு
- கதக் – உத்திரபிரதேசம்
- கதகளி – கேரளா
- குச்சிபுடி – ஆந்திர பிரதேசம்
- மணிப்புரி – மணிப்பூர்
- ஒடிசி – ஒடிசா

### மகாராஜா கிருஷன் கௌஷிக் & ரவீந்தர் பால் சிங்

- இந்திய ஹாக்கி அணியின் முன்னாள் வீரர்கள் மகாராஜ் கிருஷன் கௌஷிக் மற்றும் ரவீந்தர் பால் சிங் ஆகியோர் சமீபத்தில் காலமானார்.

### 25வது முறை இமயமலை ஏறிய காமி ரிதா

- நேபாள நாட்டைச் சேர்ந்த மலையேற்ற வீரர் காமி ரிதா எவரெஸ்ட் சிகரத்தை 25வது முறையாக ஏறி சாதனை படைத்தார். நூற்றுக்கணக்கான மலையேற்ற வீரர்களுக்கு இவர் வழிகாட்டியாகவும் பணிபுரிந்துள்ளார்.

### கேரள "இரும்புப் பெண்மனி" கே.ஆர். கௌரி

- கேரளத்தில் "இரும்புப் பெண்மணி" என்று அறியப்பட்டவரும் முதுபெரும் கம்யூனிஸ்ட் தலைவருமான கே.ஆர்.கௌரி திருவனந்தபுரத்தில் காலமானார். அவருக்கு வயது 102. "கௌரியம்மா" என்று அனைவராலும் அழைக்கப்பட்டவர்.

### சந்திரசேகர்

- மூன்று முறை தேசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் வென்றவரும் சர்வதேச படகு போட்டியாளருமான சந்திரசேகர் சமீபத்தில் காலமானார்.
- இவர் இந்திய அரசின் அர்ஜுனா விருது வென்றவர்.

### இலக்கியவாதி ஹோமென் போர்கோஹெய்ன்

- அஸ்ஸாமிய புகழ்பெற்ற இலக்கியவாதி ஹோமென் போர்கோஹெய்ன் காலமானார்.
- அவர் வாழ்நாளில் 11க்கும் மேற்பட்ட நாவல்களை எழுதியுள்ளார்.

- 1978ம் ஆண்டு அவர் எழுதிய "பித புத்ரா" சாகித்ய அகாடமி விருது பெற்றுள்ளது.
- அஸ்ஸாமின் நியோமிய பாரதா பத்திரிகையின் தலைமை ஆசிரியராக பணியாற்றியவர்.

## டைம்ஸ் குழும தலைவர் இந்து ஜெயின் காலமானார்

- டைம்ஸ் குழுமத் தலைவர் இந்து ஜெயின் கரோனா தொற்று பாதிப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட உடல்நல குறைவால் புது தில்லியில் காலமானார்.
- டைம்ஸ் ஆஃப் இந்தியா உள்ளிட்ட நாளிதழ்கள், டைம்ஸ் நௌ தொலைக்காட்சி சேனல் உள்ளிட்டவற்றை வெளியிட்டு வரும் டைம்ஸ் குழுமத்தின் தலைவராக கடந்த 1999–இல் பொறுப்பேற்றார். அவரது தனித்துவமான தலைமை, அனைவரையும் அரவணைத்துச் செல்லும் குணம் போன்றவற்றால் அந்தக் குழுமத்தின் வளர்ச்சி புதிய உச்சத்தை எட்டியது.

## பார்சூன் உலகின் 50 சிறந்த தலைவர்கள்

- பார்சூன் இதழ் உலகின் தலைசிறந்த 50 தலைவர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- இந்த பட்டியலில் நியுசிலாந்து பிரதமர் ஜசிந்தா ஆர்டர்மின் முதலிடம் பெற்றுள்ளார்.
- இந்தியாவின் சீரம் நிறுவன தலைமைச் செயல் அதிகாரி அதர் பூனாவாலா 10வது இடம் பெற்றுள்ளார்.

## M.S.நரசிம்மன்

- புகழ்பெற்ற கணிதவியலாளர் M.S.நரசிம்மன் சமீபத்தில் காலமானார்.
- கிங்பைசல் சர்வதேச விருது பெற்ற ஒரே இந்தியர் அவராவர்.

## எழுத்தாளர் கி.ராஜநாராயணன் மறைவு

- இவரது முதல் சிறுகதையான "மாயமான்" 1958–இல் "சரஸ்வதி" இதழில் வெளியானது. அது வாசகர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றதால், தொடர்ந்து பல சிறுகதைகளை எழுதி வந்தார்.
- இவரது எழுத்துகள் கரிசல் பூமி மக்களின் வாழ்க்கை, துன்பங்கள், நம்பிக்கைகள், ஏமாற்றங்களை விவரித்ததால் "கரிசல் இலக்கியத்தின் தந்தை" எனப் போற்றப்பட்டார்.
- இவரது கதைகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு 944 பக்கங்கள் கொண்ட "நாட்டுப்புறக்கதைக் களஞ்சியம்" என்ற படைப்பாக 2007–இல் வெளியானது. இவரது சில கதைகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. "கிடை" என்ற இவரது குறுநாவல் "ஒருத்தி" என்ற திரைப்படமாகத் தயாரிக்கப்பட்டது.
- "கோமதி", "கண்ணீர்", "கரிசல் கதைகள்", "கி.ரா.பக்கங்கள்", "கிராமியக் கதைகள்", "கொத்தைபருத்தி", "புதுவை வட்டார நாட்டுப்புறக் கதைகள்", "கோபல்ல கிராமம்", "புதுமைப்பித்தன்", "மாமலை ஜீவா" ஆகியவை இவரது படைப்புகளில் குறிப்பிடத்தக்கவை.
- 1980களில் புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நாட்டார் வழக்காற்றியல் துறையில் கௌரவ பேராசியராகப் பணியாற்றியவர். சிறந்த இசை ஞானம் கொண்டவர்.
- கரிசல் வட்டார அகராதியை உருவாக்கி முன்னோடி என்ற பெருமைக்குரியவர். "கோபல்லபுரத்து மக்கள்" நாவலுக்காக 1991–இல் சாகித்ய அகாதெமி விருது பெற்றார். இலக்கியச் சிந்தனை விருது, தமிழக அரசு விருது, கனடா இலக்கியத் தோட்டத்தின் தமிழ் இலக்கியச் சாதனை விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்றவர். கடந்த 2016–17–ஆம் ஆண்டுக்கான மனோன்மணீயம் சுந்தரனார் விருதும் கி.ராஜநாராயணனுக்கு வழங்கப்பட்டது.
- "வட்டார இலக்கியத்தின் முன்னத்தி ஏர்", "தமிழ் எழுத்துலகின் பீஷ்மர்", "தலைசிறந்த கதைசொல்லி" என்றெல்லாம் போற்றப்பட்டவர். சாகித்ய அகாதெமியின் ஆலோசனைக் குழு உறுப்பினராக 1998 முதல் 2002 வரை செயல்பட்டார்.

## இந்திய மருத்துவ கூட்டமைவின் தலைவர் K.K.அகர்வால்

- புகழ்பெற்ற இருதய நிபுணர் மற்றும் முன்னாள் இந்திய மருத்துவ கூட்டமைவின் தலைவராக பணியாற்றிய K.K.அகர்வால் சமீபத்தில் காலமானார்.

## என்எஸ்ஜி முன்னாள் இயக்குநர் ஜோதி கிருஷ்ணன் தத் காலமானார்

- தேசிய பாதுகாப்புப் படை (என்எஸ்ஜி) முன்னாள் இயக்குநர் ஜோதி கிருஷ்ணன் தத் கரோனா தொற்று மற்றும் அது சார்ந்த பாதிப்புகளால் உயிரிழந்தார். அவருக்கு வயது 72.
- கடந்த 2008–ஆம் ஆண்டு பாகிஸ்தான் பயங்கரவாதிகள் மும்பையில் புகுந்து தாக்குதல்

நடத்தியபோது ஜெ.கே.தத் தலைமையிலான கமாண்டோ படைப்பிரிவினர்தான் அவர்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு முறியடித்தார்.

## பிரபல சுற்றுச்சூழல் ஆர்வலர் சுந்தர்லால் பகுகுணா கரோனாவல் உயிரிழப்பு

- உத்தரகாண்ட் மாநிலத்தைச் சேர்ந்த பிரபல சுற்றுச்சூழல் ஆர்வலர் சுந்தர்லால் பகுகுணா கரோனா தொற்றால் உயிரிழந்தார். அவருக்கு வயது 94.
- மகாத்மா காந்தியின் கொள்கைகளில் தீவிர ஈடுபாடு கொண்ட சுந்தர்லால் பகுகுணா இமயமலைப் பகுதியில் வனங்கள், மரங்களை அழிப்பதற்கு எதிராக 1970–ஆம் ஆண்டுகளில் சிப்கோ இயக்கத்தை முன்னெடுத்தார். இதன்படி, இந்த அமைப்பினர் மரங்களைக் கட்டித்தழுவி அதனை வெட்டவிடாமல் போராட்டங்களை முன்னெடுத்தனர். பொருளாதார வளர்ச்சிக்காக காடுகள் உள்ளிட்ட இயற்கை வளங்கள் அழிக்கப்படுவது தவிர்க்க முழயாதது என்ற கொள்கைக்கு எதிராக "சூழலியல்தான் உண்மையான பொருளாதாரம், அதனைப் பாதுகாப்பதன் மூலம் உலகில் மனிதர்கள் நிம்மதியாக வாழ முடியும்" என்ற முழக்கத்தை பகுகுணா முன்வைத்தார்.

## அணுசக்தி ஆணைய முன்னாள் தலைவர் ஸ்ரீகுமார் பானர்ஜி காலமானார்

- இந்திய அணுசக்தி ஆணையத்தின் முன்னாள் தலைவர் ஸ்ரீகுமார் பானர்ஜி மாரடைப்பால் உயிரிழந்தார்.
- 2010–ஆம் ஆண்டு வரை 6 ஆண்டுகளுக்கு பாபா அணுசக்தி ஆய்வு மைய இயக்குநராக இருந்த அவர், பின்னர் அணுசக்தி ஆணையத்தின் தரைவரானார். 2012–ஆம் ஆண்டு ஓய்வுபெறும் வரை அப்பொறுப்பில் இருந்தார்.

## துரோணாச்சார்யா விருது பெற்ற O.P.பரத்வாஜ்

- இந்திய குத்துச்சண்டை பயிற்சியாளராக பணியாற்றிய துரோணாச்சார்ய விருது பெற்ற O.P.பரத்வாஜ் சமீபத்தில் காலமானார்.
- தேசிய விளையாட்டு நிறுவனத்தின் முதல் தலைவராக பணியாற்றியவர்.

## 1971 போர் நாயகன் கர்னல் பஞ்சாப் சிங்

- 1971ம் போர் சமயத்தில் 6வது பட்டாலியன் சீக்கிய படைக்கு தலைமை தாங்கிய கர்னல் பஞ்சாப் சிங் சமீபத்தில் காலமானார்.
- 1971ம் ஆண்டு டிசம்பரில் வீர்சக்ரா விருது பெற்றுள்ளார்.

## சுதந்திர போராட்ட வீரர் காலமானார்

- மிக மூத்த சுதந்திர போராட்ட வீரர் H.S.துரைசாமி சமீபத்தில் காலமானார்.
- பெங்களூருவை சேர்ந்த இவர் மிக இளம் வயதிலேயே சுதந்திர போராட்டத்தில் கலந்து சிறை சென்றவர்.
- 1942 வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர். தேசிய சிந்தனை கொண்ட பவுரா வானி என்ற பத்திரிக்கையின் ஆசிரியராக பணியாற்றியவர்.
- நியாய பதா என்ற பத்திரிக்கையை தன்னுடைய இறுதி காலம் வரை நடத்தி வந்தார்.
- பத்திரிக்கை துறையில் சிறந்தவர்களுக்கு வழங்கப்படும் ராம்நாத் கோயங்கா வாழ்நாள் சாதனையாளர் விருது 2019ஆம் ஆண்டில் பெற்றார்.

## தஞ்சாவூர் வி.சங்கர ஐயர் இயற்கை எய்தினார்

- இவர் வீணை வித்வான், ஆசிரியர், இசையமைப்பாளர் ஆவார்.
- இவர் 1996ஆம் ஆண்டு மியூசிக் அகாடமி (சங்கீத சபை) யால் சங்கீத கலா ஆச்சர்யா என்ற பட்டம் கொடுத்து கௌரவிக்கப்பட்டார்.
- 2011ஆம் ஆண்டிற்கான சங்கீத நாடக சபை விருதும் வென்றுள்ளார்.

## வீர சாவர்க்கர் பிறந்த தினம் குடியரசு துணைத் தலைவர், பிரதமர் மோடி மரியாதை

- சுதந்திர பேராட்ட வீரரும், ஹிந்துத்துவவாதியுமான வீர சாவர்க்கரின் பிறந்த தினம் மே 28 கொண்டாடப்பட்ட நிலையில், குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு, பிரதமர் மோடி ஆகியோர் அவரை நினைவு கூர்ந்து மரியாதை செலுத்தியுள்ளார்.
- இது தொடர்பாக வெங்கையா நாயுடு வெளியிட்ட சுட்டுரைப் பதிவில், "சுதந்திர போராட்ட வீரரும்,

சமூக சீர்திருத்தவாதியுமான வீர் சாவர்க்கருக்கு அவரது பிறந்த தினத்தில் எனது மரியாதையை செலுத்துகிறேன். இந்திய தேசத்துக்காக அவர் செய்த தியாகங்கள் எப்போதும் நினைவுகூரப்படும். தேச ஒற்றுமைக்காகவும், சமூக நல்லிணக்கத்துக்காகவும் மதப் பிரிவினையை ஒழிப்பதற்காகவும் அவர் தொடர்ந்து பாடுபட்டார்.

### சுதந்திர போராட்ட வீரர் T.M.காளியண்ணன் மறைவு

- இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையில் பணியாற்றிய T.M.காளியண்ணன் காலமானார்.
- 1921ல் நாமக்கல்லில் பிறந்தவர். 19வது வயதில் இந்திய தேசிய இயக்கத்தில் தன்னை இணைத்து கொண்டவர்.
- 28வது வயதில் இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையில் கலந்து கொண்டார்.

### விமான பரிசோதனை முதல் பெண் பொறியாளர்: ஆஷ்ரிதா V.ஒலிடி

- கர்நாடகாவை சேர்ந்த ஆஷ்ரிதா V.ஒலிடி 48வது விமான பரிசோதனை பாடத்தில் தேர்வாகி இந்த தேர்வில் வெற்றி கண்டுள்ள முதல் பெண் பொறியாளர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

### அண்ணா பல்கலை. முன்னாள் துணைவேந்தர் மு.ஆனந்த் கிருஷ்ணன் மறைவு

- சிறந்த கல்விப் பணிகள்: கடந்த 1990–ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தராக பொறுப்பேற்றார். அங்கு அறிவியல் தொழில்நுட்பத்தில் உலகத்தரத்துக்கு இணையாக பாடத்திட்டங்களை மாற்றி அமைத்தார். அடுத்ததாக தேர்வு முறைகளையும் மாற்றினார். முழுமையான "உள் மதிப்பீடு" என்னும் பெயரில் மாணவர்களின் கல்வித் திறனை மதிப்பிடும் முறை அறிமுகம் செய்யப்பட்டது. நுழைவுத் தேர்வு முடிவுகளை விரைவுப்படுத்த "மார்க் சென்சார் ரீடார்" எனும் கருவியை பிரிட்டனிலிருந்து வரவழைத்தார்.

### மார்க்சிஸ்ட் மூத்த தலைவர் மைதிலி சிவராமன் காலமானார்

- மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் மைதிலி சிவராமன் உடல்நலக் குறைவால் சென்னையில் காலமானார்.
- இவர், அமெரிக்காவில் உள்ள சிரக்யூஸ் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்தில் முதுநிலைப் பட்டம் பெற்று, நியூயார்க் அரசின் நிதித்துறையில் ஓராண்டு வேலை செய்தார்.
- மார்க்சீயத்தால் ஈர்க்கப்பட்டு பின்னர் இந்தியா திரும்பிய இவர், 1968–ஆம் ஆண்டு கீழ்வெண்மணியில் 44 விவசாயத் தொழிலாளர்கள் உயிரோடு கொளுத்தப்பட்ட கொடூரச் சம்பவத்தை பத்திரிகையில் ஆவணப்படுத்தி, வெளிக்கொணர்ந்த முதலாவது நபர் ஆவார்.

வாய்மையே வெல்லும்

# 1.5 முக்கிய இடங்கள் பற்றிய செய்திகள்

### விரிவுப்படுத்தப்படுகிறது சூயஸ் கால்வாய்

- எகிப்து நாட்டின் சூயஸ் கால்வாயில் பிரமாண்ட சரக்கு கப்பல் ஒன்று அண்மையில் தரை தட்டி கப்பல் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்தக் கால்வாயை விரிவுப்படுத்த அந்த நாடு திட்டமிட்டுள்ளது.
- இதற்கான அறிவிப்பை எகிப்தில் சூயஸ் கால்வாய் அமைந்துள்ள இஸ்மைலியா நகரில் நடைபெற்ற விழாவில் சூயஸ் கால்வாய் ஆணைய தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் ஒசாமா ராபி அறிவித்தார். எகிப்து அதிபர் அப்டெல்–ஃபட்டா எல்சிஸ்ஸி மற்றும் அரசு உயர் அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

**சூயஸ் கால்வாய்**

- நாடு – எகிப்து
- இணைப்பு – மத்திய தரைக்கடல், செங்கடல்
- செயல்பட துவங்கிய நாள் – 17 நவம்பர் 1869
- துறைமுகம் – தவுபிக்

# 1.6 விளையாட்டு

## 2021 ஸ்போர்ட்ஸ்டார் ஏசஸ் (ACES) விருதுகள்

- உலக குத்துச்சண்டை சாம்பியன் ஆன M.C.மேரிகோம் கடந்த பத்தாண்டுகளுக்கான சிறந்த வீரராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- அபினவ் பிந்த்ரா, K.ஸ்ரீகாந்த், P.V.சிந்து ஆகியோரும் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.
- கோபிசந்த் சிறந்த பயிற்சியாளராக தேர்வு செய்யப்படடுள்ளார்.

## பவாரியன் டென்னிஸ்

- ஜெர்மனியில் நடைபெற பவாரியன் டென்னிஸ் போட்டியில் சாம்பியன் ஆன ஜார்ஜியா வீரர் நிகோலஸ் பாசிலாஷ்விலி. இறுதிச் சுற்றில் இவர் 6–4, 7–4 (7/5) என்ற செட்களில் ஜெர்மனியின் ஜான் லெனார்ட் ஸ்ட்ரஃபை வீழ்த்தினார். பாசிலாஷ்விலிக்கு இது முதல் ஏடிபி பட்டமாகும்.

## இங்கீலிஷ் பிரீமியர் லீக்: செல்சி வெற்றி

- இங்கிலாந்தில் நடைபெறும் இங்கிலீஷ் பிரீமியர் லீக் கால்பந்து போட்டியில் செல்சி அணி 2–0 என்ற கோல் கணக்கில் ஃபுல்ஹாம் அணியை வென்றது.
- இந்த ஆட்டத்தில் செல்சி தரப்பில் காய் ஹாவெர்ட்ஸ் 10 மற்றும் 49–ஆவது நிமிடங்களில் கேலடித்தார். இப்போட்டியின் இதர ஆட்டங்களில் பிரைட்டன் 2–0 என்ற கோல் கணக்கில் லீட்ஸ் யுனைடெட் அணியை வீழ்த்தியது.

## "Believe in Sports" பிரச்சாரம்

- பேட்மிண்டன் உலக சாம்பியன் பெற்ற P.V.சிந்து மற்றும் கனடாவின் மைக்கேல் ஆகியோர் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் "Believe in Sport" பிரச்சாரத்திற்கு தூதுவர்களாக நியமனம் செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

## பிரநிதி நாயக் ஒலிம்பிக்கிற்கு தகுதி

- ஆசிய ஜிம்னாஸ்டிக் கலை சாம்பியன்ஷிப் போட்டியில் (2019) வெண்கலப் பதக்கம் வென்ற பிரநிதி ஆசிய கண்டங்களின் அடிப்படையிலான பிரிவில் 2021 டோக்கியோ ஒலிம்பிற்கு தகுதி பெற்றுள்ளார்.
- 26 வயதான இவர் மேற்குவங்க மாநிலத்தை சேர்ந்தவர்.

## 4வது முறையாக ஸ்நூக்கர் உலக சாம்பியன் பட்டம் பெறும் மார்க் செல்பி

- இங்கிலாந்தின் ஷெபீல்டு பகுதியில் நடைபெற்ற 2021 ஸ்நூக்கர் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் இங்கிலாந்தை சேர்ந்த மார்க் செல்பி வென்றுள்ளார்.

## நடால் மற்றும் ஒசாகாவிற்கு கௌரவம்

- 2020 ஆண்டிற்கான சிறந்த விளையாட்டு வீரராக ரபேல் நடால் மற்றும் சிறந்த விளையாட்டு வீராங்கனையாக நவோமி ஒசாகா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். லாரியஸ் சிறந்த விளையாட்டு வீரர் மற்றம் வீராங்கனையாக விருது வழங்கி கவுரவிக்கப்பட்டு உள்ளனர்.

## அர்ஜுன் மற்றும் அரவிந்த் ஒலிம்பிக்கிற்கு தகுதி

- 2021 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு இந்தியாவை சேர்ந்த அரவிந்த் சிங் மற்றும் அர்ஜுன் லால் ஜாட் ஆகியோர் படகு போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

## இந்திய மல்யுத்த வீராங்கனை சீமா பிஸ்லா

- டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு இந்திய மல்யுத்த வீராங்கனை சீமா பிஸ்லா தகுதி பெற்றுள்ளார். பல்கேரியாவின் சோபியா நகரில் உலக அளவிலான ஒலிம்பிக் தகுதிச் சுற்று நடைபெற்று வருகிறது. இதில் மகளிருக்கான 50 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் சீமா பிஸ்லா அரை இறுதி சுற்றில் 2–1 என்ற கணக்கில் போலந்தின் அனா லுகாசியாக்கை வீழ்த்தினார்.

## ஸ்பானிஷ் கிராண்ட் பிரிக்ஸ்–பார்முலா–1

- 2021ம் ஆண்டு ஸ்பானிஷ் கிராண்ட் பிரிக்ஸ் பார்முலா–1 கார் பந்தயத்தில் லேவிஸ் ஹமில்டன் முதலிடம் பெற்றுள்ளார்.
- மேக்ஸ் வெர்ஸ்டபான் இரண்டாமிடமும், வால்டேர் போல்ட்டாஸ் மூன்றாம் இடமும் பெற்றுள்ளனர்.

## மாட்ரிட் ஓபன்–2021

- 2021 மாட்ரிட் ஓபன் போட்டியில் பெலாரஸைச் சேர்ந்த அரினா சபிலேன்சா வெற்றி பெற்று பட்டம் வென்றார்.

### இத்தாலி ஓபன் – 2021

- இத்தாலி ஓபன் டென்னிஸ் போட்டியில் "பிலிஸ்கோவா சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

### MMA விருது பெறும் முதல் இந்திய வம்சாவளி நபர்

- பளு தூக்குதல் சாம்பியன்ஷிப் பட்டம் வென்ற அர்ஜன் புஹார் MMA பட்டம் பெறும் முதல் வம்சாவளி இந்தியர் ஆவார். 2010, 2012 ஆண்டுகளில் காமன்வெல்த் போட்டிகளில் வெள்ளி பெற்றவர்.

### இந்த ஆண்டில் முதல் நபராக எவரெஸ்ட் சிகரத்தை ஏறி சாதனை புரிந்துள்ள தாஷி யாங்ஜோம்

- அருணாச்சால பிரதேசத்தை சேர்ந்த தாஷி யாங்ஜோம் எவரெஸ்ட் சிகரத்தில் 2021ல் ஏறிய முதல் இந்திய பெண் என்ற சாதனையை புரிந்துள்ளார்.

### மொனாகோ கிராண்ட் பிரிக்ஸ்–2021

- மொனாகோ கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் மேக்ஸ் வெர்ஸ்ட்பான் வெற்றி பெற்றுள்ளார். 7 முறை உலக சாம்பியன் ஆன லேவிஸ் ஹாமில்டனை வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளார்.

### சர்வதேச ஹாக்கி கூட்டமைவின் விருது

- V.கார்த்திகேய பாண்டியன் அவர்களுக்கு சர்வதேச ஹாக்கி கூட்டமைவின் தலைவர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

### தங்க காலனி விருது பெற்ற ஹேரி கேன்

- இலண்டன் பிரிமியர் லீக் போட்டிகளில் டோட்டன் ஹாம் ஹாட்ஸ்பர் அணியின் கேப்டன் ஹாரி கேன் தங்க காலனி விருதை 3வது முறையாக பெற்றுள்ளார்.

### ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டி

- ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் பூஜா ராணி பட்டம் வென்றார்.
- மேரிகோம் மற்றும் லால் பவுத்சைஹி போன்றோர் வெள்ளி பதக்கம் பெற்றுள்ளனர்.

## 1.7 விருதுகள் மற்றும் கௌரவங்கள்

### யுனெஸ்கோ பத்திரிகை சுதந்திர பரிசு – 2021

- 2021ம் ஆண்டிற்கான யுனெஸ்கோ உலக பத்திரிகை சுதந்திர பரிசு மரியா ரீசா அவர்களுக்கு வழங்கப்படுகிறது.
- உலக அளவில் ஊடக துறையில் அபாயத்தை சந்திக்கும் பத்திரிகையாளர்களுக்கு இந்த விருது யுனெஸ்கோவால் வழங்கப்படுகிறது.

யுனெஸ்கோ: UNESCO

- United Nations Educational Scientific and Cultural Organization
- தலைமையிடம் – பாரிஸ்
- உறுப்பு நாடுகள் – 193
- தற்போது இஸ்ரோ, லீச்டென்சன், அமெரிக்கா, போன்ற நாடுகள் உறுப்பினர் இல்லை.

### வட அமெரிக்க முதுகெலும்பு சங்கம் சார்பில் கோவை கங்கா மருத்துவமனையின் ஆராய்ச்சிக் குழுவுக்கு விருது தொடர்ந்து 3–வது முறை பெற்று சாதனை

- கோவை கங்கா மருத்துவமனையின் முதுகெலும்பு ஆராய்ச்சிக் குழுவினர், வடஅமெரிக்க முதுகெலும்பு சங்க ஆராய்ச்சி அமைப்பின் மதிப்பு மிக்க விருதை 3–வது ஆண்டாக தொடர்ச்சியாக பெற்று சாதனை படைத்துள்ளனர்.

### 2021ம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் நினைவு பரிசு

- 2021ம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் நினைவு பரிசு இந்தியர் யுவராஜ் சிங்கிற்கு வழங்கப்படும் என ஐக்கிய நாடுகள் பொதுச்சபை தலைவர் அன்டோனியோ குட்ரோஸ் அறிவித்துள்ளார்.

- இந்தியாவிற்கான ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் தூதுவர் T.S.திருமூர்த்தி யுவராஜ் சிங்கின் செயல்பாடுகளுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

## ஏர்லைன் பசத் குளோபல் விஷன் விருது

- 2021ம் ஆண்டிற்கான பசத் குளோபல் விஷன் விருது ஜம்மு காஷ்மீர் மாநில உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி கீதா மிட்டால் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.
- இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் IAWJ மாநாடு மே 7ல் மெக்சிகோவில் நடத்தப்பட்டது. அங்கு இந்த விருது அளிக்கப்பட்டது.
- IAWJ – International Association of Women Judge.

## அரேபிய உலகின் நோபல் பரிசு

- அரேபிய உலகின் நோபல் பரிசு என அறியப்படும் விருது சிகாகோ பல்கலைக்கழகத்தில் அரபு இலக்கிய பேராசியராக பணிபுரியும் இந்தியாவின் மும்பையைச் சேரந்த Dr.தஹீரா குத்புதீனுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- அவர் எழுதிய "Arabic Oration – Art and Function" என்ற புத்தகத்தை Brill Academic பதிப்பகம் 2019ல் வெளியிடப்பட்டது.

## உலக உணவு விருது

- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த Dr.சகுந்தலா ஹரக்சிங் தில்ஸ்டர் அவர்களுக்கு 2021ம் ஆண்டிற்கான உலக உணவு விருது வழங்கப்பட்டுள்ளது.

### உலக உணவு விருது

- உலக அளவில் மனித மேம்பாட்டிற்காக பணியாற்றிய தனிநபர்களுக்கு சாதனைகளுக்காக இந்த விருது உலக உணவு விருது பவுண்டேஷனல் வழங்கப்படுகிறது.
- 2,50000 டாலர் பரிசு வழங்கி கௌரவிக்கப்படுகிறது.
- 1986ம் ஆண்டிலிருந்து வழங்கப்படுகிறது. வேளாண் மற்றும் உணவு துறையின் நோபல் என்று அழைக்கப்படுகிறது.
- இந்தியாவில் M.S.சுவாமிநாதன் 1987–ல் இந்த விருதை பெற்றுள்ளார்.

## டாக்டர் P.பிரவீன் ராஜ்

- இந்திய குடல் இரைப்பை உள் அறுவை சிகிச்சை கூட்டமைவின் சிறந்த அறுவை சிகிச்சையாளராக Dr.பிரவீன் ராஜ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்தியாவில் உள் குடல் இரைப்பை அறுவை சிகிச்சை 4 நிபுணர்களில் தென்னகத்தை சேர்ந்த ஒருவர் ஆவார்.

## மெக்ஸிகோவை சேர்ந்த பெண் பிரபஞ்ச அழகியாகத் தேர்வு

- மெக்ஸிகோவைச் சேர்ந்த ஆண்ட்ரியா மெசா 2020–ஆம் ஆண்டுக்கான பிரபஞ்ச அழகியாக (மிஸ் யுனிவர்ஸ்) தேர்ந்தெடுக்கப்பட்டார். 73 நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்கேற்ற இப்போட்டியில் இந்தியாவின் அட்லின் காஸ்டெலினோ 4–ஆவது இடம் பிடித்தார்.

## சர்வதேச தவிர்க்க இயலாதவர் விருது: ரமேஷ் பொக்ரியால்

- இந்திய கல்வி அமைச்சரின் சமூக சேவை, பொது நல பயன்பாடுகள் மற்றும் மனிதநேயம் ஆகியவற்றை பாராட்டி சர்வதேச தவிர்க்க இயலாதவருக்கான தங்க பதக்கம் வழங்கப்பட்டுள்ளது. டோனி நடிர் தலைமையிலான சர்வதேச மகரிஷி அமைப்பு இந்த விருதை வழங்கி அறிவித்துள்ளது.

## மில்லினியம் தொழில்நுட்ப விருது–2020

- இந்திய வம்சாவளி இங்கிலாந்து வேதியியல் நிறுவனம் சங்கர் பால சுப்ரமணியம் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் பேராசிரியர் டேவிட் கிளனர்மேன் ஆகியோருக்கு 2020ம் ஆண்டின் மில்லினியம் தொழில்நுட்ப விருது வழங்கப்பட்டுள்ளது.
- DNA–க்களை வரிசைப்படுத்தும் விகிதத்தில் புதிய முறை கண்டுபிடிப்பிற்காக இவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. இதன் மூலம் DNAவை மிக எளிதில் படிக்க இயலும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலக சிறந்த நடன அமைப்பாளர்–2020 சுரேஷ் முகுந்த்

- தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் சிறப்பாக பணியாற்றி வரும் சுரேஷ் முகுந்த் 2020ம் ஆண்டிற்கான சிறந்த நடன அமைப்பாளராக 10–வது உலக நடன அமைப்பாளர் விருது வழங்கல் விழாவில் கௌரவிக்கப்பட்டுள்ளார்.
- இந்த விருதை பெறும் முதல் இந்தியர் இவராவர்.

## 4வது ஹோம் பிரனர் விருதுகள்

- பெண் தொழில் முனைவோர்கள் ஊக்குவிப்பதற்கான 4வது ஹோம் பிரனர் விருது வழங்கப்பட்டுள்ளது.
- கிராண்ட் அவதார் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி டஹேமசந்திரன் அவர்களால் முயற்சி எடுக்கப்பட்டு அளிக்கப்படுகிறது.
- வீடுகளிலிருந்தே வாய்ப்புகளை உருவாக்குபவர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் கவுரவிக்கப்படுதலுக்காக இந்த விருது வழங்கப்படுகிறது.

## இந்தியா உயிரி பன்முகதன்மை விருது

- கிழங்கு மனிதன் என்ற அழைக்கப்படும் கேரளாவின் ஷாஜி N.M. விற்கு இந்தியா உயிரி பன்முகத்தன்மை விருது வழங்கப்பட்டுள்ளது.
- 200க்கும் மேற்பட்ட கிழங்கு தாவரங்களை பாாதுகாத்ததற்காக இந்த விருது அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## சமூக அறிவியலுக்கான விருதுகள்

- சமூக அறிவியலுக்கான ஸ்பெயின் நாட்டின் உயரிய விருது அமர்த்தியா சென்னிற்கு வழங்கப்பட்டுள்ளது.
- இந்திய பொருளாதார வல்லுநர்கள், நோபல் பரிசு பெற்றவருமான அமர்த்தியா சென் ஸ்பெயின் நாட்டின் சமூக அறிவியலுக்கான '2021 Princess of Asturias Award' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.
- அமர்த்தியா சென்னின் வறட்சி மற்றும் மனித மேம்பாட்டின் வரலாறு என்ற ஆய்விற்காக இந்த விருதை பிரின்ஸஸ் ஆப் ஆஸ்திரியஸ் பவுன்டேஷன் வழங்கி கௌரவித்துள்ளது.

## CNR ராவ் அவர்களுக்கு ENI விருது

- பாரத ரத்னா விருது பெற்ற இந்திய ஆராய்ச்சியாளர் மற்றும் பேராசிரியர் CNR–ராவ் அவர்கள் ENI ஆராய்ச்சி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.
- ஆற்றல் முன்னணியில் சிறப்பான பங்களிப்பை செய்தமைக்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

## ரூடால்ப் சிண்ட்லர் விருது

- AIG மருத்துவமனையின் தலைவர் Dr.D.நாகேஸ்வர்ரெட்டி எண்டோஸ்கோபியில் சிறந்து விளங்குபவர்களுக்கு வழங்கப்படும் ரூடால்ட் சிண்ட்லர் விருது பெறும் முதல் இந்தியர் என்ற பெருமையைப் பெறுகிறார்.
- கேஸ்ட்ரோ ஸ்கோப்பியின் தந்தை என ரூடார்ட் சிண்ட்லர் அழைக்கப்படுகிறார். அவரின் நினைவாக இந்த விருது வழங்கப்படுகிறது.

## கிராண்ட் ஜூரி விருது பெற்றுள்ள "சீத்துமான்"

- லாஸ் ஏஞ்சலில் நடைபெற்ற இந்திய திரைப்பட விழாவில் தமிழ் திரைப்பட இயக்குநரின் தமிழின் சீத்துமான் திரைப்படத்திற்கு கிராண்ட் ஜூரி விருது வழங்கப்பட்டுள்ளது.
- 19வது இந்திய திரைப்பட விழாவில் 42 திரைப்படங்கள் 17 மொழிகளில் பார்வைக்கு வைக்கப்பட்டன.

## ஐக்கிய நாடுகள் சபையின் கௌரவ பதக்கம் பெறும் 3 இந்தியர்கள்

- யுவராஜ்சிங், மைக்கேல் பிகார்டோ மற்றும் மூல்சந்த் யாதவ் ஆகியோர் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதியாளர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- ஐக்கிய நாடுகள் அமைதிக்கான திட்டத்தில் பலியான 129 இராணுவ நபர்களுக்கு இந்த விருது அளிக்கப்பட்டுள்ளது.

# 1.8 கலாச்சாரம்

## கீழடி அகழாய்வில் காதில் அணியும் தங்க வளையம் கண்டெடுப்பு

- சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே கீழடியில் நடைபெற்று வரும் 7ஆம் கட்ட அகழாய்வில், காதில் அணியும் தங்க வளையம் கண்டெடுக்கப்பட்டது.
- திருப்புவனம் அருகே கீழடி, கொந்தகை, அகரம், மணலூர் ஆகிய 4 இடங்களில் 7–ஆம் கட்டமாக அகழாய்வுப் பணி நடைபெற்று வருகிறது. கீழடி, கொந்தகையில் தலா 3 குழிகளும், அகரத்தில் 1 குழியும் தோண்டப்பட்டுள்ளன. இந்நிலையில், கீழடியில் தோண்டப்பட்ட 1 குழியிலிருந்து காதில் அணியும் தங்க வளையம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- இந்த வளையத்தை நீட்டினால் 4.5 செ.மீட்டர் நீளமும், வளையமாக வளைத்தால் 1.99 செ.மீ. விட்டமும் கொண்டதாக உள்ளது.

## கீழடி அகழாய்வு: மூடியுடன் மண் பானை கண்டெடுப்பு

- சிவகங்கை மாவட்டம்–திருப்புவனம் அருகே கீழடியில் நடந்து வரும் 7 ஆம் கட்ட அகழாய்வில் முழுமையான நிலையில் மூடியுடன் கூடிய மண்பானை கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- கீழடியில் 7ஆம் கட்ட அகழாய்வு பிப்ரவரி 13ஆம் தேதி முதல் நடைபெற்ற வருகிறது. தொல்லியல் துறை இயக்குநர் சிவானந்தம், இணை இயக்குநர் பாஸ்கரன் ஆகியோர் தலைமையில் நடந்து வரும் பணியில் இதுவரை கீழடியில் 5 குழிகள் தோண்டப்பட்டு அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பகுதியில் இதுவரை நடைபெற்ற அகழாய்வில் இருவண்ண மண்பானைகள், பானை ஓடுகள், பகடை, கல் உழவு கருவி உள்ளிட்டவை கண்டறியப்பட்டன.
- தற்போது 3–ஆவதாக தோண்டப்பட்ட குழியில் ஒன்றரை அடி உயரம் கொண்ட மண்பானை கண்டெடுக்கப்பட்டுள்ளது. மூடியுடன் கூடிய இந்த பானை சேதமடையாமல் முழுமையாக கிடைத்துள்ளது. பானையின் மூடி இறுக்கமாக மூடிய நிலையில், இந்த பானையினுள் பொருள்கள் எதுவும் இருக்கும் பட்சத்தில் 2,600 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர்கள் பயன்படுத்திய பொருள்கள் குறித்த விவரம் தெரியவரும்.
- மணலூரில் அகழாய்வு தொடக்கம்: மேலும் 7ஆம் கட்ட அகழாய்வில் கீழடி, அகரம், கொந்தகை ஆகிய இடங்களில் அகழாய்வுப் பணிகள் தொடங்கி நடந்து வருகிறது.

## ஹக்கி–பிக்கி பழங்குடியினர்

- ஹக்கி–பிக்கி பழங்குடியின மக்கள் கர்நாடக மாநிலத்தின் ஹசன் மாவட்டத்தில் வாழ்கின்றனர்.

## 1,200 ஆண்டுகளுக்கு முற்பட்ட மூத்த தேவி சிலை கண்டெடுப்பு

- உத்திரமேரூர் அருகே உள்ளம்பாக்கம் இருளர் குடியிருப்புப் பகுதியில் சுமார் 1,200 ஆண்டுகளுக்கு முற்பட்ட பல்லவர் கால மூத்த தேவி சிலை ஒன்றை வரலாற்று ஆய்வு மையத்தினர் கண்டெடுத்தனர்.
- காஞ்சிபுரம் மாவட்டம், உத்தரமேரூர் அருகே வயலூர் கூட்டுச்சாலை பகுதியில் உள்ளது உள்ளம்பாக்கம் கிராமம். இக்கிராமத்தின் இருளர் குடியிருப்புப் பகுதியில் சுமார் 1,200 ஆண்டுகளுக்கு முற்பட்ட பல்லவர் கால மூத்த தேவி எனப்படும் ஜேஷ்டா தேவி சிலை உத்தரமேரூர் வரலாற்று ஆய்வு மையத்தினரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- இச்சிலையானது ஒன்றரை அடி உயரமே வெளியில் தெரியும் வகையில் இருக்கிறது. எஞ்சிய பகுதி பூமிக்கடியில் புதைந்த நிலையில் காணப்படுகிறது. இது 1,200 ஆண்டுகளுக்கு முற்பட்ட பல்லவர் காலத்தை சேர்ந்த ஜேஷ்டாதேவி சிலையாகும். இச்சிலையின் வலப்பக்கத்தில் மாட்டுத்தலை போன்ற வடிவில் அவரது மகன் மாந்தனும், இடப்பக்கம் மகள் மாந்தியும் காணப்படுகின்றனர். தலைக்கு மேலே காக்கை சின்னம் உள்ளது. இவர் குறித்த தகவல் சங்க இலக்கியங்களிலும், திருவள்ளுவர், ஔவையர் போன்ற புலவர்களாலும் குறிப்பிடப்பட்டுள்ளன. நந்தி வர்ம பல்லவனின் குலதெய்வமாகவும் இருந்துள்ளார். இச்சிலையின் கழுத்தில் கரண்ட மகுடத்துடனும், அணிகலன்களோடும், கைகளில் காப்பும் காணப்படுகின்றன. மூத்த தேவி என்பது மருவி மூதேவி ஆக வழக்கில் வந்து வழிபாடு இல்லாமல் போயிருக்கிறது.

# 1.9 நியமனங்கள்

## ஆர்பிஐ துணை ஆளுநராக டி.ரவிசங்கர் நியமனம்

- இந்திய ரிசர்வ் வங்கியின் (ஆர்பிஐ) துணை ஆளுநராக நிர்வாக இயக்குநர் டி.ரவிசங்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- ரிசர்வ் வங்கியில் ஆளுநரும் 4 துணை ஆளுநர்களும் உள்ளனர். துணை ஆளுநராக இருந்த பி.பி.கனுங்கோ கடந்த ஏப்ரல் 2-ஆம் தேதியுடன் ஓய்வு பெற்றார். அதையடுத்து, புதிய ஆளுநராக டி.ரவிசங்கர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் ஆர்பிஐ நிர்வாக இய்ககுநராக இருந்து வந்தார்.
- மத்திய அமைச்சரவையின் நியமனக் குழு, ரவி சங்கரின் நியமனத்துக்கு ஒப்புதல் வழங்கியது. 3 ஆண்டுகள் வரை அல்லது வயது காரணமாக பணி ஓய்வு பெறும் வரை அப்பதவியில் அவர் நீடிப்பார்.

## சென்னை அணுமின் நிலையத்துக்கு புதிய இயக்குநர் நியமனம்

- கல்பாக்கத்தில் இயங்கி வரும் சென்னை அணுமின் நிலையத்தின் நிர்வாக இயக்குநர் பணி ஓய்வு பெற்றதால், புதிய இயக்குநராக எம். பலராமமூர்த்தி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- செங்கல்பட்டு மாவட்டம், கல்பாக்கத்தில் இயங்கி வரும் சென்னை அணுமின் நிலையத்தில் அலகு 1 மற்றும் அலகு 2 என இரு பிரிவுகள் உள்ளன. ஒவ்வோர் அலகிலும் தலா 220 மெகாவாட் அணுமின் உற்பத்தி செய்யும் திறன் உள்ளது.
- இந்த அணுமின் நிலையத்தின் இயக்குநராக பணிபுரிந்து வந்த எம்.ஸ்ரீனிவாஸ் ஏப்ரல் மாத இறுதியில் பணி ஓய்வு பெற்றார்.
- இதையடுத்து, புதிய இயக்குநராக எலக்ரானிக்ஸ் பொறியியல் பட்டதாரியான எம்.பலராமமூர்த்தி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- இவர், ராஜஸ்தான் அணுமின் நிலையத்தின் 5 மற்றும் 6 ஆகிய பிரிவுகளின் பராமரிப்பு கண்காணிப்பளராகவும் முதன்மை கண்காணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார்.

## தேசிய மனித உரிமைகள் ஆணையம்

- முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி பாரபுல்லா சந்திராபன்ட் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் பொறுப்பு தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- இவர் 2019 ஏப்ரல் 22 முதல் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தில் உறுப்பினராக பணியாற்றி வருகின்றார்.

### தேசிய மனித உரிமைகள் ஆணையம்

- 1993 ஆம் ஆண்டு சட்டத்தின் மூலம் சட்டரீதியான அமைப்பாக உருவாக்கபட்பட்டது.
- தலைவராக உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி குடியரசு தலைவரால் நியமனம் செய்யப்படுவார்.
- நியமன குழுவில்: பிரதமர், மக்களவை சபாநாயகர், மாநிலங்களை துணைத்தலைவர், இரு அவைகளின் எதிர்க்கட்சி தலைவர்கள் உள்துறை அமைச்சர் பங்கு பெறுவர்.

## இந்திய அரிசி ஆராய்ச்சி நிறுவனம்

- ராமன் மீனாக்ஷி சுந்தரம் இந்திய அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- இந்த நிறுவனம் இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலின் ஒரு அங்கமாகும்.

## தமிழக அரசின் புதிய தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு

- தமிழக அரசின் 48-ஆவது தலைமைச் செயலாளராக வெ.இறையன்பு நியமிக்கப்பட்டு பொறுப்பேற்றார்.
- தலைமைச் செயலகத்தில் தான் எழுதிய "வையத் தலைமைகொள்" என்ற புத்தகத்தை முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வழங்கி வாழ்த்துப் பெற்றார்.

## முதல்வரின் செயலாளர்களாக த.உதயசந்திரன் உள்பட நான்கு பேர் நியமனம்

- தமிழக முதல்வரின் செயலாளர்களாக த.உதயச்சந்திரனை' உள்பட நான்கு பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்களது பணிகளை உடனடியாகத் தொடங்கியுள்ளனர். இதுகுறித்து, தலைமைச் செயலாளராக இருந்த ராஜீவ் ரஞ்சன் வெளியிட்ட உத்தரவு விவரம்: (அதிகாரிகள் முன்பு வகித்த பதவி அடைப்புக் குறிக்குள்).
- த.உதயச்சந்திரன் - முதல்வரின் செயலாளர் நிலை-1 (தொல்லியல் துறை ஆணையர்)

- பி.உமாநாத் – முதல்வரின் செயலாளர் நிலை: (தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகத்தின் நிர்வாக இயக்குநர்)
- எம்.எஸ்.சண்முகம் – முதல்வரின் செயலாளர் நிலை–3 (அருங்காட்சியகங்கள் துறை ஆணையர்)
- அனு ஜார்ஜ் – முதல்வரின் செயலாளர் நிலை–4 (தொழில் துறை ஆணையர்).

## அரசு தலைமைக் கொறடாவாக கோவி.செழியன் நியமனம்

- அரசு தலைமை கொறடாவாக கோவி.செழியன் நியமித்து சட்டப்பேரவை செயலர் சீனிவாசன் அறிவித்துள்ளார்.

## "உங்கள் தொகுதியில் முதல்வர்" என்ற புதிய துறை உருவாக்கம்: தனி அலுவலர் நியமனம்

- "உங்கள் தொகுதியில் முதல்வர்" என்ற புதிய துறைக்கான தனி அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை தலைமைச் செயலாளராக இருந்த ராஜீவ் ரஞ்சன் பிறப்பித்தார். அதன் விவரம்:
- தேர்தல் பிரசாரத்தின் போது, உங்கள் தொகுதியில் ஸ்டாலின் என்ற நிகழ்வின் மூலம் ஏராளமான மனுக்கள் பெறப்பட்டன. இந்த மனுக்களை 100 நாள்களில் ஆய்வு செய்து கோரிக்கைகளை நிறைவேற்ற புதிய துறை ஒன்றை உருவாக்க வேண்டிய அவசியமாகிறது. இதன்படி, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்ற புதிய துறை தலைமைச் செயலகத்தில் உருவாக்கப்படுகிறது.
- இந்தத் துறையின் சிறப்பு அலுவலராக, ஷில்பா பிரபாகர் சதீஷ் நியமிக்கப்படுகிறார். அவர் முதல்வரின் நேரடி கண்காணிப்பில் பணியாற்றுவார்.

## செய்தித்தாள் காகித ஆலை நிர்வாக இயக்குநராக ராஜீவ் ரஞ்சன் நியமனம்

- தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராக ராஜீவ் ரஞ்சன் நியமிக்கப்பட்டுள்ளார். தமிழக அரசின் தலைமைச் செயலாளராக இருந்த அவர், பணியிட மாற்றம் செய்யப்பட்டார்.

## புதுவை முதல்வராக பதவியேற்றார் என்.ரங்கசாமி

- புதுவை மாநிலத்தின் 20–ஆவது முதல்வராக என்.ஆர்.காங்கிரஸ் தலைவர் என்.ரங்கசாமி பொறுப்பேற்றார்.

## அஸ்ஸாம் முதல்வராக ஹிமந்த விஸ்வ சர்மா பதவியேற்பு

- அஸ்ஸாம் மாநிலத்தின் புதிய முதல்வராக ஹிமந்த விஸ்வ சர்மா பதவியேற்கிறார்.
- ஆளுநரை அவர் சந்தித்து தனக்கு ஆதரவு தெரிவிக்கும் எம்எல்ஏக்களின் பட்டியலை வழங்கியதையடுத்து, ஹிமந்த விஸ்வ சர்மாவை ஆட்சியமைக்குமாறு ஆளுநர் ஜகதீஷ் முகி அழைப்பு விடுத்தார்.

## தமிழக அரசு தலைமை வழக்குரைஞராக ஆர்.சண்முகசுந்தரம் நியமனம்

- தமிழக அரசின் தலைமை வழக்குரைஞராக மூத்த வழக்குரைஞர் ஆர்.சண்முக சுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார்.
- மூத்த வழக்குரைஞரான ஆர்.சண்முகசுந்தரத்தை தமிழக அரசின் தலைமை வழக்குரைஞராக நியமனம் செய்து, தலைமைச் செயலர் வெ.இறையன்பு உத்தரவிட்டார். ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்தின் ஒப்புதலையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## பேரவை தற்காலிகத் தலைவராக கு.பிச்சாண்டி பொறுப்பேற்பு

- 16–ஆவது சட்டப்பேரவையின் தற்காலிக தலைவராக கு.பிச்சாண்டி அறிவிப்பு செய்யப்பட்டு அவர் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டார்.
- 16–ஆவது சட்டப் பேரவையின் முதல் கூட்டத்தொடர் கூடவுள்ளது. இந்த கூட்டத் தொடரில் புதிய எம்.எல்.ஏ.க்கள் பதவியேற்பு நிகழ்வுடன், சட்டப்பேரவைத் தலைவர் தேர்தலையும் அவர் நடத்துவார். புதிய பேரவைத் தலைவர் தேர்வுக்குப் பிறகு தற்காலிகத் தலைவர் பொறுப்புகளில் இருந்து அவர் விடுபடுவார்.

## புதுவை: பாஜகவை சேர்ந்த மூவருக்கு நியமன எம்எல்ஏக்கள் பதவி

- புதுவை யூனியன் பிரதேசத்துக்கான 3 நியமன எம்எல்ஏக்களை மத்திய உள்துறை அமைச்சகம் திடீரென நியமித்து உத்தரவிட்டது. இவர்கள் மூவரும் பாஜகவை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
- புதுவை யூனியன் பிரதேசத்துக்கான 15–ஆவது சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 6

ஆம் தேதி நடைபெற்றது. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் போட்டியிட்ட என்.ஆர்.காங்கிரஸ் 10 தொகுதிகளிலும், பாஜக 6 தொகுதிகளிலும் வெற்றி பெற்று கூட்டணி ஆட்சி அமைத்தனர். மே 7–ஆம் தேதி முதல்வராக என்.ஆர்.காங்கிரஸ் தலைவர் என்.ரங்கசாமி பொறுப்பேற்றார்.

## 38வது FICCI தலைவர்: சின்கானியா

- உஜ்வாலா சின்கானியா FICCI அமைப்பின் 38வது தேசிய தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

FICCI – Federation Indian Chambers of Commerce & Industry

- துவக்கம் – 1927
- இந்திய சுதந்திர போராட்டத்திலும் அதற்கு பிறகான தொழில் உற்பத்திக்கும் இந்த அமைப்பு பெரிதும் பங்காற்றியுள்ளது.

## அமெரிக்க தேசிய அறிவியல் அகாடமியின் தலைவர் சங்கர் கோஷ்

- 1863ம் ஆண்டில் அமெரிக்க முன்னாள் அதிபர் ஆப்ரகாம் லிங்கன் துவங்கிய அமெரிக்க தேசிய அறிவியல் அகாடமியின் தலைவராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சங்கர் கோஷ் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## நார்டன் மோட்டார்சைக்கிள் நிறுவனத்தின் சி.இ.ஓ.வாக ராபர்ட் ஹென்ட்ஷெல் நியமனம்

- பிரிட்டனின் தனித்துவமான பிராண்டாக திகழும் நார்டன் மோட்டார்சைக்கிள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக (சி.இ.ஓ) ராபர்ட் ஹென்ட்ஷெல் நியமிக்கப்பட்டுள்ளதாக டிவிஎஸ் மோட்டார் தெரிவித்துள்ளது. நார்டன் மோட்டார் சைக்கிள் நிறுவனத்தை கடந்த ஆண்டு டிவிஎஸ் மோட்டார் கையகப்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐக்கிய நாடுகள் மனிதாபிமான தலைவர் மார்டின் கிரிவித்

- ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான அமைப்பின் தலைவராக இங்கிலாந்து நாட்டின் அயலுறவு அதிகாரி மார்ட்டின் கிரிபித் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

**ஐக்கிய நாடுகள் சபை:**

- துவக்கம் – 1945
- தலைவர் – அன்டோனியா குட்டரஸ்

## அமெரிக்க அதிபரின் ஆலோசகாராக நீரா டாண்டன் நியமனம்

- அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் மூத்த ஆலோசகராக இந்தியா–அமெரிக்க நிர்வாக பெண் நிபுணர் நீரா டாண்டன் நியமிக்கப்பட்டுள்ளார்.
- முன்னதாக இவர் அமெரிக்க அரசின் மேலாண்மை மற்றும் நிதிநிலை அலுவலக இயக்குநர் பதவிக்கு விண்ணப்பம் செய்திருந்தார். ஆனால் குடியரசு செனட்டர்களின் கடும் எதிர்ப்பால் இரு மாதங்களுக்கு முன்பு அந்த விண்ணப்பத்தைத் திரும்பப் பெற்றிருந்தார். இந்நிலையில் அவர் அதிபரின் மூத்த ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## CSIR–SERC ன் புதிய தலைவர்

- Council of scientific and industrial research Structural Engineering Research Centre ன் புதிய இயக்குநராக N.ஆனந்தவள்ளி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## ரிசர்வ் வங்கியின் கண்டுபிடிப்பு குழு தலைமை செயல் அதிகாரி ராஜேஷ் பன்சால்

- இந்திய ரிசர்வ் வங்கியின் கண்டுபிடிப்பு குழு தலைமைச் செயலர் அதிகாரியாக ராஜேஷ் பன்சால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- இவர் ஆதார் உருவாக்க அணியில் உறுப்பினராக பணியாற்றியவர்.

## சிபிஐ புதிய இயக்குநர் சுபோத் குமார் ஜெய்ஸ்வால்

- மூத்த ஐபிஎஸ் அதிகாரியான சுபோத் குமார் ஜெய்ஸ்வால் சிபிஐ புதிய இயக்குநராக நியமிக்கப்பட்டார்.
- 1985–ஆம் ஆண்டு மகாராஷ்டிர பிரிவு ஐபிஎஸ் அதிகாரியான ஜெய்ஸ்வால் தற்போது சிஐஎஸ்எஃப் இயக்குநராக பணிபுரிந்து வருகிறார்.
- பிரதமர் நரேந்திர மோடித தலைமையில் மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் அதீர் ரஞ்சன் சௌத்ரி, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என். வி.ரமணா ஆகியோர் கொண்ட தேர்வுக் குழு இவரின் பெயரை இறுதி செய்தது.
- சிபிஐ இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ள ஜெய்ஸ்வால் 2 ஆண்டுகள் இந்தப் பதவியை வகிப்பார் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

## கேரள சட்டப்பேரவை தலைவராக ராஜேஷ் தேர்வு

- கேரள சட்டப்பேரவைத் தலைவராக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த எம்.பி.ராஜேஷ் தேர்வு செய்யபட்டுள்ளார்.

## ஆக்ஸ்போர்டு மாணவர்கள் ஒன்றியத் தலைவராக இந்தியர் தேர்வு

- இந்தியவம்சவளியை சேர்ந்தமனிதவளஅறிவியல் மாணவர் அன்வீ புதானி ஆக்ஸ்போர்டு மாணவர் ஒன்றிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## திட்டமிடல் மற்றும் மேம்பாட்டு துறை செயலாளர் நியமனம்

- தமிழ்நாடு அரசின் திட்டமிடல் மற்றும் மேம்பாட்டு துறை செயலாளராக மூத்த ஐஏஎஸ் அதிகாரி விக்ரம் கபூர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## ஐ.நா.பொதுச் செயலராக குட்டெரெஸ் மீண்டும் தேர்வாக இந்தியா ஆதரவு

- ஐ.நா. பொதுச் செயலராக அன்டோனியோ குட்டெரெஸ் மீண்டும் தேர்வு செய்யப்படுவதற்கு இந்தியா ஆதரவு தெரிவித்துள்ளது.
- அமெரிக்கா சென்றுள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், அங்கு நியூயார்க்கில் ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸை சந்தித்தபோது இதனை தெரிவித்தார்.

## அமெரிக்காவின் வெளிநாட்டு வர்த்தக பிரிவு இயக்குநராக இந்திய–அமெரிக்கர் நியமனம்

- அமெரிக்காவின் வெளிநாட்டு வர்த்தக சேவைகள் பிரிவின் இயக்குநராக இந்திய–அமெரிக்கரான அருண் வெங்கட்ராமனை அந்நாட்டு அதிபர் ஜோ பைடன் நியமித்துள்ளார்.

## ஷிவ் தாஸ் மீனா MAWS செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்

- ஷிவ் தாஸ் மீனா என்பவரை நகராட்சி நிர்வாகம் மற்றும் தண்ணீர் விநியோகம் துறைக்கான (MAWS) செயலாளராக தமிழக அரசு நியமித்துள்ளது.
- இவர் மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தலைவராக பணியாற்றி வந்துள்ளார்.

## உலகின் மிகப்பெரிய லவ்ரி அருங்காட்சியகத்தின் தலைவராக தேர்ந்தேடுக்கப்பட்டுள்ள முதல் பெண்

- லாரன்ஸ் டெஸ் கார்ஸ் என்ற வரலாற்றளவில் பிரான்சில் உள்ள உலகின் மிகப்பெரிய 228 ஆண்டுகள் பழமையான அருங்காட்சியகத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## மாநில தேர்தல் ஆணையராக வெ.பழனிக்குமார் நியமனம்

- தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையராக வெ.பழனிக்குமார் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் வெளியிட்டார். அவர் மாநிலத் தேர்தல் ஆணையாளராக பொறுப்பேற்கும் நாளில் இருந்து இரண்டாண்டு காலத்துக்கு அந்தப் பதவியை வகிப்பார் என தமிழக அரசின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 2. அரசியல் அறிவியல்

## 2.1 மத்திய அரசாங்கம்–பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

### பிஎம்ஜிகேஏஒய்–3 திட்டத்தின் கீழ் உணவு தானியங்களின் விநியோகம் தொடங்கியது

- பிரதமரின் கல்யாண் கரிப் அன்ன யோஜனா திட்டத்தின் கீழ் (பிஎம்ஜிகேஏஒய்–3), உணவு தானியங்கள் சீரிய முறையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.
- இந்தத் திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகளின் மூலம் வழங்கப்படும் மாதாந்திர உணவுத் தானியங்களுடன் கூடுதலாக 5 கிலோ அரிசி அல்லது கோதுமை இலவசமாக வழங்கப்படுகிறது.
- இந்தத் திட்டத்தின் படி, தமிழகத்துக்கு 3.28 லட்சம் மெட்ரிக் டன் அரிசி மற்றும் 36,470 மெட்ரிக் டன் கோதுமை ஒதுக்கப்பட்டுள்ளது. விரைவில் நாள்தோறும் சராசரியாக 10 ஆயிரம் மெட்ரிக் டன் தானியங்கள் பொதுமக்களின் பயன்பாட்டுக்குச் சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- மேலும், ஒதுக்கீட்டின்படி மாநிலத்தின் அனைத்து இடங்களிலும் தானியங்கள் சென்றடைவது உறுதி செய்யப்படும் என திட்டத்தின் தமிழக பொதுமேலாளர் ஜே.எஸ்.சைஜு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### "பிரயாஸ்" திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்ற நாளிலேயே ஓய்வூதியம் பெறுவதற்கான ஆணை வழங்கல்

- தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அலுவலகம் சார்பில், பிரயாஸ் திட்டத்தின் கீழ், பொதுத் துறை, தனியார் துறை நிறுவனங்களில் ஓய்வு பெற்றவர்களுக்கு, அவர்கள் ஓய்வுபெற்ற நாளிலேயே ஓய்வூதியம் பெறுவதற்கான ஆணை வழங்கப்பட்டது.

### பிரதம மந்திரி கிஸான் சம்மான்

- இந்த திட்டத்தின் 8வது தவணை பிரதமரால் (4 மாதத்திற்கு 2000ரூபாய்) வெளியிடப்பட்டுள்ளது.

**பிரதம மந்திரி கிஸான் சம்மான்**

- துவக்கம் – 2018 டிசம்பர் (பிப்ரவரி – 2019)
- இரண்டு ஹெக்டேருக்கு கீழ் நிலமுடையவர்களுக்காக துவங்கப்பட்டது.
- 25 மில்லியன் விவசாயிகள் பயன்பெறுகின்றனர்.

### ஆஷ்வாசான் திட்டம்

- மத்திய மறைமுக வரி வருவாய் ஆணைய துறை ஊழியர்கள் கோவிட்–19 ஆல் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஆஷ்வாசான் என்ற திட்டத்தை செயல்படுத்துகிறது.
- இது அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்கிறது.
- மறைமுக வரிதுறையில் இதுவரை நாடு முழுவதும் 110 அலுவலர்கள் கோவிட்–19க்கு பலியாகியுள்ளனர்.

மத்திய நேரடி வரி வாரியம் (CBIC) Central Board of Indirect Taxes and Customs

- துவக்கம் – 1 ஜனவரி 1964
- தலைமையிடம் – புதுதில்லி
- மத்திய நேரடி வரி வருவாய் தலைவர் – M.அஜித்குமார்.

வெற்றி I.A.S. கல்வி மையம்

## இ–சஞ்சீவனி திட்டத்தில் 50 லட்சம் மருத்துவ ஆலோசனைகள்

- மத்திய அரசின் இ–சஞ்சீவனி திட்டத்தில் இதுவரை 50 லட்சம் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் செல்பேசி வழியாக மருத்துவ ஆலோசனைகள் வழங்கும் இ–சஞ்சீவனி திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் மூலம் புற நோயாளிகளுக்கு நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்கள் மூலம் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.
- இந்தத் திட்டம் குறித்த ஓராண்டு அறிக்கையை மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ளது. அதில் கடந்த ஓராண்டில் 50 லட்சம் நோயாளிகளுக்கு மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளது. மேலும் அறிக்கையில் கூறியுள்ளதாவது: 31 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களிலும் இந்த இ–சஞ்சீவனி திட்டம் செயல்பாட்டில் உள்ளது. சராசரியாக ஒரு நாளைக்கு 40 ஆயிரம் நோயாளிகள் இதன் மூலம் மருத்துவ ஆலோசனைகளைப் பெறுகின்றனர். வீட்டிலிருந்தபடியே இல்லாத வகையில் மருத்துவ ஆலோசனைகளை இலவசமாக இத்திட்டத்தின் மூலம் பெறுவது மக்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கிறது என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
- இந்த திட்டம் மருத்துவர்களுக்கிடையிலான ஆலோசனை மற்றும் மருத்துவர், நோயாளி இடையிலான ஆலோசனை என இரண்டு வகைகளில் செயல்படுத்தப்படுகிறது. மருத்துவர்களுக்கிடையிலான ஆலோசனைப் பகிர்வு திட்டம் 2019 நவம்பரிலிருந்து செயல்பட்டுவருகிறது. நாடு முழுவதும் 18,000 மருத்துவ மையங்கள் மற்றும் 1,500 ஒருங்கிணைந்த மையங்கள் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. 2022 டிசம்பரில் இத்திட்டம் 1,55,000 மருத்துவ மையங்களில் செயல்படும் வகையில் விரிவுபடுத்தப்படும் எனக் குறிப்பிட்டுள்ளது. இதன் மூலம் இதுவரை 20 லட்சம் நோயாளிகள் பலன் அடைந்துள்ளனர்.
- புற நோயாளிகளுக்கான ஆலோசனை திட்டத்தில் 350 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை 30 லட்சம் நோயாளிகள் இதன் மூலம் ஆலோசனை பெற்றுள்ளனர்.
- இத்திட்டத்தில் 10 லட்சம் ஆலோசனைகள் வழங்கி தமிழகம் முதலிடத்தில் உள்ளது.
- கரோனா நெருக்கடி காலத்தில் அதிக மருத்துவ ஆலோசனைகள், மருத்துவ சிகிச்சைகள் தேவை இருப்பதால் மருத்துவம் படிக்கும் இறுதி ஆண்டு மாணவர்களை ஈடுபடுத்தவும் மாநிலங்கள் திட்டமிட்டுள்ளன.

## பிரதமர் கரீப் கல்யாண் திட்டம்

- கரோனா தொற்றால் ஏற்பட்ட பொருளாதார பிரச்சனையால் ஏழை மக்களின் துயரைக்களைவதற்காக பிரதமர் கரீப் கல்யாண் அன்ன யோஜனா திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியது. இதன்படி மே 17 வரை 36 மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும் இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகளில் இருந்து 31.80 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்களைப் பெறுள்ளன.
- இதன்படி மே மற்றும் ஜுன் ஆகிய இரண்டு மாதங்களில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உள்ள சுமார் 79.39 கோடி பயனாளிகளுக்கு மாதத்திற்குக் கூடுதலாக ஒருவருக்கு 5 கிலோ உணவு தானியங்கள் இலவசமாக வழங்கப்படும்.
- முன்னதாக,தேசிய உணவுப்பாதுகாப்புச்சட்டத்தின் பயனாளிகளுக்கு பிரமரின் கரீப் கல்யாண் அன்ன யோஜனா திட்டத்தின் முதல் கட்டத்திலும் (ஏப்ரல்–ஜுன் 2020) 104 லட்சம் மெட்ரிக் டன் கோதுமை, 201 லட்சம் மெட்ரிக் டன் அரிசி என மொத்தம் 305 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்கள் மாநிலங்களுக்கும். யூனியன் பிரதேசங்களுக்கும் விநியோகிக்கப்பட்டன என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஸ்மார்ட் சிட்டி திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியுள்ள ஜார்கண்ட் மாநிலம்

- 36 மாநிலங்களில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய மாநிலங்களில் ஜார்கண்ட் முதலிடத்திலும் ராஜஸ்தான் இரண்டாமிடத்திலும் உள்ளது.
- இந்த பட்டியல் மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தால் வெளியிடப்படுகிறது.

**ஸ்மார்ட் சிட்டி திட்டம்**

- துவக்கம் – 2015
- 100 பொலிவுறு நகரங்களை உருவாக்குவதற்காக துவங்கப்பட்டது.
- அடிப்படை கட்டமைப்பு, குடிநீர் வசதி, கழிவு நீர் வசதி திட்டம் போன்ற பல அம்சங்களை கொண்டு வடிவமைத்தலை நோக்கமாக கொண்டது.

## பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா

- கோவிட் இரண்டாம் அலையின் மக்கள் பயன்பெறும் வகையில் பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனாவில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.2015ல் இத்திட்டம் துவங்கப்பட்டது. 330 ரூபாய் 10 பிரிமியத்தில் 2 இலட்சம் காப்பீடு பெற இயலும்.
- 'முத்ரா" திட்டத்தில் 6 ஆண்டுகளில் ரூ.15 லட்சம் கோடி கடன் வழங்கல்
- பிரதமரின் "முத்ரா" கடன் திட்டத்தின் கீழ் கடந்த 6 ஆண்டுகளில் 28.81 கோடி பேருக்கு ரூ.15.10 லட்சம் கோடி கடன் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்தது.
- தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் விதமாக கடந்த 2015 ஏப்ரல் 8–ஆம் தேதி "முத்ரா" கடன் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி தொடக்கி வைத்தது குறிப்பிடத்தக்கது.
- இது தொடர்பாக நிதியமைச்சகத்தின் கீழ் வரும் நிதிச் சேவைகள் துறை சுட்டுரையில் வெளியிட்ட பதிவில், "நடப்பாண்டு மார்ச் 26 வரை முத்ரா திட்டத்தின் கீழ் வங்கிகளும், நிதி நிறுவனங்களும் 28.81 கோடி போருக்கு ரூ.15.10 லட்சம் கோடி கடன் வழங்க ஒப்புதல் அளித்துள்ளன.
- இந்தத் திட்டத்தின் கீழ் "சிஷு", "கிஷோர்", "தருண்" ஆகிய 3 பிரிவுகளில் மொத்தமாக ரூ.10 லட்சம் வரை பிணையில்லா கடன் வழங்கப்படுகிறது. உற்பத்தி, வர்த்தகம், சேவைத் துறைகள், வேளாண் சார்ந்த நடவடிக்கைகள் ஆகியவற்றின் மூலம் வருவாய் ஈட்டும் தொழிலில் ஈடுவடுவதற்காக இந்தக் கடன் வழங்கப்படுகிறது" என்று கூறப்பட்டுள்ளது.

## மின்னணு சுகாதாரத் திட்டம் மக்களுக்குப் பலனளிக்கும்

- தேசிய மின்னணு சுகாதாரத் திட்டத்தின் வாயிலாக பல்வேறு சேவைகளைப் பெற்று மக்கள் பெரிதும் பலனடைவர் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- நாடு முழுவதும் தேசிய மின்னணு சுகாதாரத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று கடந்த ஆண்டு நடைபெற்ற சுதந்திர தின விழாவின்போது பிரதமர் மோடி தெரிவித்திருந்தார்.
- காணொலி வழியில் மருத்துவர்களிடம் ஆலோசனை பெறுவது, பரிசோதனை ஆய்வகத்தைத் தொடர்பு கொள்வது, நோயாளிகளின் மருத்துவ ஆவணங்களை இணையவழியில் பரிமாறுவது, கட்டணத்தை இணையவழியிலேயே செலுத்துவது உள்ளிட்ட வசதிகளை தேசிய மின்னணு சுகாதாரத் திட்டத்தின் வாயிலாக மக்கள் பெற்று பலனடைய முடியும் என பிரதமர் மோடி தெரிவித்தார்.

## மதிய உணவு திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு உதவி திட்டம்

- மதிய உணவு திட்டத்தின் கீழ் பயன்பெறும் 1 முதல் 8 வகுப்பு மாணவர்களுக்கு 100 ரூபாய் வழங்க மத்திய அரசு முடிவெடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்க பிரதமரின் "யுவா" திட்டம்

- பிரதமர் நரேந்திர மோடியின் எண்ணத்தின்படி, பல்துறைகளில் வளரும் இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்க மத்திய உயர்கல்வித் துறை "யுவா" வழிகாட்டி திட்டத்தை தொடங்கியுள்ளதாக மத்திய கல்வி அமைச்சகம் அறிவித்துள்ளது.
- 30 வயதுக்கு குறைவான இளைஞர்களுக்கான இந்தத் திட்டத்தில் புத்தகம் படித்தல், புத்தகம் எழுதுதல் போன்ற கலாசாரங்களை ஊக்குவித்து இந்திய மற்றும் சர்வதேச அளவிலான எழுத்தாளர்களாக அவர்களை ஊக்குவிக்கும் பயிற்சிக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- கடந்த ஜனவரி 31–ஆம் தேதி பிரதமர் மோடி தனது "மனதின் குரல்" நிகழ்ச்சியில் இதுகுறித்து பேசினார். "நாடு 75–வது சுதந்திர தினத்தை கொண்டாடும் நிலையில், இந்திய சுதந்திர போராட்ட வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இளம் தலைமுறையினர் அவர்களைப் பற்றி எழுத முன்வர வேண்டும். சிந்தனைகளையும் சிறந்த எண்ணங்களையும் கொண்ட தலைவர்களை எதிர்காலத்தில் உருவாக்கவும் இது வழிகாட்டும்" என பிரதமர் அந்த நிகழ்ச்சியில் குறிப்பிட்டார்.
- 2020–புதிய கல்விக்கொள்கையும், இளையோரை மேம்படுத்துவதற்கும் கற்றல் சூழல் அமைப்பை உருவாக்க வே'ணடும் என வலியுறுத்தியது. இவைகளின் அடிப்படையில் இளம், வளரும், பல்துறை திறன் எழுத்தாளர்களுக்கான "யுவா" திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய கல்வித்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# 3.புவியியல்



## 3.1 சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை

### புதிய வகை மண்ணுளி பாம்பு

- மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் புதியதாக கண்டறியப்பட்டுள்ள மண்ணுளி பாம்பிற்கு புகழ்பெற்ற ஊர்வன அறிவியல் அறிஞர் தீபன் வீரப்பன் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- Herpetology : ஊர்வன அறிவியல்.

### தென்மேற்கு பருவமழை: ஜூன் 1–இல் கேரளத்தில் தொடங்கும்

- இந்த ஆண்டு தென்மேற்குப் பருவமழை ஜூன் 1–ஆம் தேதி கேரளத்தில் தொடங்கும் என்று மத்திய புவி அறிவியல் துறை அமைச்சக செயலர் ராஜீவன் தெரிவித்துள்ளார்.
- வரும் 15–ஆம் தேதி இந்திய வானிலை ஆய்வு மையம் இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிடும் என்றும் அவர் கூறினார்.
- இது தொடர்பாக கட்டுரையில் ராஜீவன் வெளியிட்ட பதிவில் "2021 ஆம் ஆண்டுக்கான பருவமழை வழக்கமான காலகட்டமான ஜூன் தொடக்கத்தில் கேரளத்தில் தொடங்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது முன் கணிப்புதான். இந்திய வானிலை ஆய்வு மையம் வரும் 15–ஆம் தேதி அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிடும். அதைத் தொடர்ந்து 31–ஆம் தேதி எந்த அளவுக்கு பருவ மழை அளவு இருக்கும் என்பது தெரிவிக்கப்படும்" என்று கூறியுள்ளார். நாட்டின் மொத்த மழைப் பொழிவில் 75 சதவீதம் தென்மேற்குப் பருவமழை மூலம்தான் கிடைக்கிறது.
- இந்த ஆண்டு வழக்கமான அளவில் மழை பொழியும் என்று தெரிகிறது. கடந்த பல ஆண்டுகளாக சராசரியாக 98 சதவீத மழை பெய்து வருகிறது.

### கலாதியே பே கடல்சார் உயிர்கோள மையம்

- அதிக அளவிலான கடல் ஆமைகள் முட்டையிட்டு குஞ்சு பொறிக்கும் இடமான கிரேட் நிகோபர் தீவுகளின் கலாதியே பே உயிர்கோள காப்பகம் அதன் பகுதிகளில் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள இந்திய வனத்துறை மற்றும் தகூஷின் பவுண்டேஷன் இந்திய அறிவியல் நிறுவனத்திற்கு பசுமை அமர்வு ஒப்புதல் அளித்துள்ளது.

### யானைகள் திட்டம்

- யானைகள் பாதுகாப்பு இல்லாமல் அழிந்த வருகின்றன என்பதை உணர்ந்த மத்திய அரசு யானைகள் பாதுகாப்புத் திட்டத்தை 1992ஆம் ஆண்டு துவக்கியதுடன், இதுவரை 32க்கும் அதிகமான யானைகள் காப்பகங்களை அறிவித்துள்ளது. இருந்தபோதும், புலிகள் பாதுகாப்புத் திட்டத்துக்கு கிடைத்த வரவேற்பு யானைகள் பாதுகாப்புத் திட்டத்துக்கு கிடைக்கவில்லை.
- யானைகளுக்கு உள்ள அச்சுறுத்தலைக் குறைக்கவும் அரசால் மகேஷ் ரங்கராஜன் தலைமையிலான வல்லுநர் குழு நியமிக்கப்பட்டது.
- இந்தக் குழு எலிபெண்ட டாஸ்க் போர்ஸ் என்று அழைக்கப்பட்டது.
- 2010ஆம் ஆண்டு அரசுக்கு சமர்பித்தது. அதில் யானைகள் வாழ என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பது குறித்து தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.
- இதில், முக்கியப் பரிந்துரைகளில் ஒன்று தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் என்.டி.சி.ஏ (நேஷனல் டைகர் கன்சர்வேசன் அத்தாரிட்டி) போல தேசிய யானைகள் பாதுகாப்பு ஆணையம் என்.இ.ஏ. (நேஷனல் எலிபென்ட் கன்சர்வேசன்

வெற்றி I.A.S. கல்வி மையம்

அத்தாரிட்டி) உருவாக்கப்பட வேண்டும். அந்த ஆணையத்தில் ஆளுமைக் குழு உருவாக்கப்பட்டு சட்டரீதியான அங்கீகாரம் வழங்க வேண்டும்.

## அரபிக் கடலில் உருவாகிறது "டவ்–தே" புயல்

- அரபிக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் மேலும் வலுவடைந்து புயலாக வலுவடைகிறது. இந்த புயலுக்கு மியான்மர் நாடு வழங்கிய "டவ்–தே" என்று பெயர் வைக்கப்படவுள்ளது. இந்த புயல் காரணமாக, மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்கள், தென் மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் மிக பலத்த மழை பெய்யக்கூடும் என்று வாயிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## மின்னல் தாக்கி யானைகள் பலி

- அஸ்ஸாம் மாநிலம், நாகோன் மாவட்டம், பாமுனி மலைப்பகுதயில் மின்னல் தாக்கி 18 யானைகள் பலியானது.

## 'யாஸ்" புயல்

- வடக்கு அந்தமான் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக்க வாய்ப்புள்ளதாகவும், வரும் 24–ஆம் தேதிக்குள் அது புயலாக தீவிரமடைந்து வடமேற்கு நோக்கி நகர்ந்து வரும் 26–ஆம் தேதி ஒடிஸா, மேற்கு வங்க கடற்கரைகளையொட்டி கரையைக் கடக்க வாய்ப்புள்ளதாகவும் இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது.
- இந்தப் புயலுக்கு "யாஸ்" என பெயரிடப்பட்டுள்ள நிலையில், அந்தப் புயலால் ஒடிஸா, மேற்கு வங்கம் மட்டுமின்றி கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் உள்ள மாவட்டங்கள், அந்தமான் நிகோபார் தீவுகளில் பரவலாக மழை பெய்து வெள்ளம் ஏற்படக்கூடும் என்றும் வானிலை மையம் எச்சரித்துள்ளது.

## ஆப்பிரிக்காவில் இருந்து இந்தியாவுக்கு சிறுத்தைப் புலிகள்

- ஆப்பிரிக்காவில் இருந்து சிறுத்தைப் புலிகள் நவம்பரில் இந்தியாவுக்குக் கொண்டு வரப்படவுள்ளதாக மத்திய பிரதேச அரசு தெரிவித்துள்ளது.
- தரையில் மிகவும் வேகமாக ஓடக் கூடிய உயிரினம் சிறுத்தைப் புலி. ஒரு காலத்தில் இந்தியாவில் சிறுத்தை புலிகள் அதிக எண்ணிக்கையில் காணப்பட்டன. ஆனால், நாட்டின் பல்வேறு பகுதிகளை ஆண்ட அரசர்கள், ஆங்கிலேய ஆட்சியாளர்கள் உள்ளிட்டோர் பொழுதுபோக்குக்காக அவற்றை அதிக அளவில் வேட்டையாடியதால், சிறுத்தைப் புலிகளின் இனமே இந்தியாவில் அழிந்து போனது.
- நாட்டில் கடைசியாகக் காணப்பட்ட சிறுத்தைப் புலி, இன்றைய சத்தீஸ்கர் பகுதியில் கடந்த 1947–ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டது. இந்தியாவில் சிறுத்தைப் புலி இனம் முற்றிலும் அழிந்து விட்டதாகக் கடந்த 1952–ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது.
- சிறுத்தைப் புலிகளை இந்தியாவில் மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டது. தென்னாப்பிரிக்காவில் இருந்து ஆப்பிரிக்க சிறுத்தைப் புலிகளை சோதனை அடிப்படையில் இந்தியாவுக்குக் கொண்டு வருவதற்கு உச்சநீதிமன்றமும் ஒப்புதல் அளித்தது.
- "சிறுத்தைப் புலி" திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்துக்கு வழிகாட்டும் நோக்கில் 3 பேர் குழுவை உச்சநீதிமன்றம் அமைத்தது.
- இந்தியாவில் சிறுத்தைப் புலிகளை மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கான திட்டத்தை வன உயிரிகள் மையம் சில ஆண்டுகளுக்கு முன் தொடங்கியது. அதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதையடுத்து தென்னாப்பிரிக்காவில் இருந்து 10 சிறுத்தைப் புலிகளைக் கொண்டு வருவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. அவற்றில் 5 பெண் சிறுத்தைப் புலிகள் இடம்பெறும்.
- அவை சிவபுரி மாவட்டத்தில் உள்ள குனோ தேசிய பூங்காவில் பராமரிக்கப்படவுள்ளன. இதற்கான அலுவல் சார்ந்த நடவடிக்கைகள் ஆகஸ்டில் நிறைவடையும்.
- போதிய இரை: சிறுத்தைப் புலிகளை இந்தியாவுக்குக் கொண்டு வரும் நடவடிக்கைகள் அக்டோபரில் தொடங்கி நவம்பரில் நிறைவடையும். சம்பல் நதிப் பகுதியில் குனோ தேசியப் பூங்கா 750 சதுர கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ளது. இங்கு சிறுத்தைப் புலியின் இரைகளான புள்ளிமான், சாம்பர் மான், காட்டுப்பன்றி உள்ளிட்டவை அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றன.
- எனவே, சிறுத்தைப் புலிகள் வாழ்வதற்கு ஏற்ற சூழல் குனோ தேசியப் பூங்காவில் காணப்படுகிறது. சிறுத்தைப் புலிகள் திட்டத்துக்காக நடப்பு 2021–22–ஆம் நிதியாண்டில் ரூ.14 கோடி வழங்கப்படவுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல், வனங்கள், பருவநிலை மாற்ற அமைச்சகம் தெரிவித்துள்ளது.



# 4.பொருளாதாரம்

## 4.1 புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசுத்துறை

### ஏப்ரல் ஜிஎஸ்டி வருவாய் ரூ.1.41 லட்சம் கோடி

- இதுவரை இல்லாத அதிகபட்ச அளவாக ஏப்ரலில் சரக்கு–சேவை வரி (ஜிஎஸ்டி) வருவாய் ரூ.1,41,384 கோடியாக அதிகரித்துள்ளது. இது கடந்த மார்ச்சில் வசூலான வரியை விட 14 சதவீதம் அதிகமாகும்.
- பொது முடக்கத்துக்குத் தளர்வுகள் அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பொருளாதார நடவடிக்கைகள் சீரடைந்தன. கடந்த ஆண்டு அக்டோபரில் தொடங்கி சரக்கு–சேவை வரி வருவாய் தொடர்ந்து ரூ.1 லட்சம் கோடியைக் கடந்து வருகிறது.
- ஜிஎஸ்டி வருவாய் அதிகரித்துள்ளது தொடர்பாக மத்திய நிதியமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், கடந்த 7 மாதங்களாக ஜிஎஸ்டி வரி தொடர்ந்து ஒரு லட்சம் கோடியைக் கடந்து வருவது பொருளாதாரம் வேகமாக மீண்டு வருவதையே காட்டுகிறது.

#### ஜிஎஸ்டி கவுன்சில்

- 101வது அரசிலமைப்பு திருத்தச் சட்டமும் அரசியலமைப்பின் விதி எண் 279 (A) (1) ன் மூலம் ஏற்படுத்தப்பட்டது.
- இது ஒரு அரசியலமைப்பு நிறுவனம்
- 2017 ஜுலை 1–ம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது.

### இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டை குறைத்தது எஸ்&பி

- சர்வதேச தரக்குறியீட்டு நிறுவனமான எஸ்&பி இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டை 9.8 சதவீதமாக குறைப்பதாக அறிவித்துள்ளது.
- இதுகுறித்து அமெரிக்காவைச் சேர்ந்த அந்த நிறுவனம் மேலும் கூறியுள்ளதாவது:
- கட்டுப்பாடுகள் விலக்கி கொள்ளப்பட்டதையடுத்து மீண்டும் வேகமெடுத்த பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் அரசின் நிதி ஊக்குவிப்பு சலுகை திட்டங்கள் ஆகியவற்றின் காரணமாக நடப்பு 2021–22 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 11 சதவீதமாக இருக்கும் என முன்னர் கணிக்கப்பட்டிருந்தது.
- இந்த நிலையில், கரோனா இரண்டாவது அலை இந்தியாவில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால், பொருளாதார மீட்சி தடம்புரண்டுள்ளதுடன், கடன் நடவடிக்கைகளும் மிக மோசமாகியுள்ளன.
- கரோனா பாதிப்பு மே மாதத்தில் உச்சநிலையைத் தொட்டு மிதமான அளவில் இருக்கும் பட்சத்தில், நடப்பு நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி விகிதம் 9.8 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், கரோனா தாக்கம் ஜுன் இறுதியில் உச்சநிலையை அடைந்து பாதிப்பு மோசமான சூழ்நிலையை அடையும் பட்சத்தில் இந்த வளர்ச்சி விகிதம் 8.2 சதவீதமாக சரியும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தியாவுக்கான கடன் தர மதிப்பீடு தற்போது "பிபிபி–" நிலையானது என்ற பிரிவில் உள்ளது. எதிர்காலத்தில் பொருளாதார வேக தணிப்பின் ஆழத்தைப் பொருத்து இந்தியாவின் கடன் தகுதி நிர்ணயம் செய்யப்படும் என எஸ்&பி தெரிவித்துள்ளது.

வெற்றி I.A.S. கல்வி மையம்

### கோவிட் கடன் புத்தகம்

- இந்திய ரிசர்வ் வங்கி ஒரே தவணையில் பெறக்கூடிய கோவிட் கடன் புத்தகத்தை 50,000 கோடி மதிப்பீட்டில் வழங்கியுள்ளது.

- உடனடியாக பெறக்கூடிய வகையில் (One tap) இது துவங்கப்பட்டுள்ளது.

## அந்நியச் செலவாணி கையிருப்பு

- அந்நியச் கரன்ஸி சொத்து மதிப்பு (எ.ஃப்சிஏ).
- யூரோ, பவுண்ட், யென் உள்ளிட்ட இதர நாட்டு செலவாணிகள் அந்நியச் செலவாணி கையிருப்பில் இடம்பெற்றுள்ளன.
- தங்கத்தில் கையிருப்பு 50 கோடி டாலர் சரிவடைந்து 3.546 கோடி டாலராக இருந்தது.
- சர்வதேச நிதியத்தில் சிறப்பு எடுப்பு உரிமம் (எஸ்டிஆர்) 30 லட்சம் டாலர் உயர்ந்து 151 கோடி டாலராகவும், நாட்டின் காப்பு நிதி 20 லட்சம் டாலர் அதிகரித்து 499 கோடி டாலராகவும் இருந்தது என ரிசர்வ் வங்கி புள்ளி விவரத்தில் தெரிவித்துள்ளது.

## அடுத்த ஆண்டு இந்திய பொருளாதார வளர்ச்சி 10.1 சதவீதமாக இருக்கும்: ஐ.நா. அறிக்கை

- அடுத்த ஆண்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 10.1 சதவீதமாக இருக்கும் என்று ஐ.நா. தெரிவித்துள்ளது.
- ஐ.நா.வின் உலக பொருளாதார சூழல் மற்றும் எதிர்கால வாய்ப்புகள் அறிக்கை புதுப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:
- இந்த ஆண்டு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.5 சதவீதமாக இருக்கும். அடுத்த ஆண்டு அதன் பொருளாதார வளர்ச்சி 10.1%-ஆக இருக்கும். இந்த ஆண்டு சீனாவின் பொருளாதார வளர்ச்சி 8.2%-ஆக இருக்கும். வரும் 2022-ஆம் ஆண்டு அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சி பின்னடைவைச் சந்தித்து 5.8 சதவீதமாக இருக்கும். அடுத்த ஆண்டு சீனாவை முந்திச் சென்று வேகமாக வளரும் பொருளாதாரத்தை கொண்ட நாடாக இந்தியா உருவெடுக்கும்.

## பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டை 10.8%-ஆக குறைத்தது நோமுரா

- இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி குறித்த மதிப்பீட்டை வளர்ச்சி குறித்த மதிப்பீட்டை ஜப்பானைச் சேர்ந்த நோமுரா நிறுவனம் 10.8% சதவீதமாக குறைத்துள்ளது.
- இதுகுறித்து அந்த நிறுவனம் தெரிவித்துள்ளதாவது: பல்வேறு சாதகமான சூழல்களைக் கருத்தில் கொண்டு நடப்பு 2021-22-ஆம் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 12.6 சதவீதமாக இருக்கும் என முன்பு கணிக்கப்பட்டிருந்தது.
- இந்த நிலையில், கரோனா இரண்டாவது அலை இந்தியாவில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதன் விளைவாக, பல்வேறு மாநிலங்கள் பொதுமுடக்க அறிவிப்புகளை வெளியிட்டு அதனை படிப்படியாக நீட்டித்தும் வருகின்றன. இதன் தாக்கம் இரண்டாவது காலாண்டில் எதிரொலிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சில்லறைப் பணவீக்கம் 4.29% ஆக குறைந்தது

- பணவீக்கம் சென்ற ஏப்ரல் மாதத்தில் 4.29 சதவீதமாக குறைந்துள்ளது.
- இதுகுறித்து புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:
- நாட்டின் சில்லறைப் பணவீக்கம் மார்ச் மாதத்தில் 5.52சதவீதமாக அதிகரித்து காணப்பட்டது. இந்த நிலையில், உணவுப் பொருள்களின் விலை குறைந்தது.

## வெளிநாட்டு நிதியை பெறும் தன்னார்வ அரசுசாரா நிறுவனங்கள் கட்டுப்பாடுகள்

- வெளிநாட்டு நிதி பெறுதலை ஒழுங்குபடுத்தல் சட்டம் (FCRA) கீழ் டெல்லியில் பாரத ஸ்டேட் வங்கியில் கணக்கு இல்லாத NGOக்கள் வெளிநாட்டு நிதியை பெற இயலாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

Foreign Contribution Regulation Act (FCRA)

- 1976ல் தோற்றுவிக்கப்பட்ட இச்சட்டத்தின் 2020ம் ஆண்டு திருத்த சட்டத்தில் அரசுசாரா தன்னார்வ நிறுவனங்களின் பொருப்பாளர்களின் ஆதார் அடிப்படையிலான தகவல்களைக் கொண்டு பாரத் ஸ்டேட் வங்கியின் மூலம் மட்டுமே வெளிநாட்டு நன்கொடை பெற இயலும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2020-இல் வெளிநாடுவாழ் இந்தியர்கள் அனுப்பிய பணம் ரூ.6 லட்சம் கோடி

- வெளிநாடு வாழ் இந்தியர்கள் 2020-ஆம் ஆண்டில் சுமார் ரூ.6.13 லட்சம் கோடியை தாய் நாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

- வெளிநாடுகளில் பணிபுரிந்து வருவோர் தங்கள் தாய்நாட்டுக்கு 2020–ஆம் ஆண்டில் எவ்வளவு பணத்தை அனுப்பி வைத்தனர் என்ற விவரத்தை உலக வங்கி வெளியிட்டுள்ளது. அதன்படி, வெளிநாடுகளில் பணிபுரியும் இந்தியர்கள் சுமார் ரூ.6.13 லட்சம் கோடியை (83.3 பில்லியன் அமெரிக்க டாலர்) தாய்நாட்டுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.
- கடந்த 2019–ஆம் ஆண்டில் வெளிநாடுவாழ் சீனர்கள் ரூ.68.3 பில்லியன் அமெரிக்க டாலரை அனுப்பி வைத்திருந்தனர். இந்தியா, சீனாவுக்கு அடுத்த இடங்களில் மெக்ஸிகோ (42.8 பில்லியன் அமெரிக்க டாலர்), பிலிப்பைன்ஸ் (34.9 பில்லியன் அமெரிக்க டாலர்), எகிப்து (29.6 பில்லியன் அமெரிக்க டாலர்), பிரான்ஸ் (24.4 பில்லியன் அமெரிக்க டாலர்), வங்கதேசம் (21 பில்லியன் அமெரிக்க டாலர்) ஆகிய நாடுகள் உள்ளன.

## மே 17–இல் தங்கப் பத்திர வெளியீடு: கிராம் விலை ரூ.4,777–ஆக நிர்ணயம்

- தங்கப் பத்திர விற்பனை தொடங்கவுள்ள நிலையில் அதன் விலையை கிராமுக்கு ரூ.4,777–ஆக நிர்ணயம் செய்துள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.
- இதுகுறித்து ரிசர்வ் வங்கி மேலும் கூறியுள்ளதாவது:
- 999 சுத்த தங்கம்: நடப்பு 2021–22–ஆம் நிதியாண்டுக்கான தங்கப் பத்திர விற்பனை மே 17–ஆம் தேதி தொடங்கி 21–ஆம் தேதி வரை 5 நாள்கள் நடைபெறவுள்ளது. இந்த கட்டத்தில் வெளியிடப்படும் 999 சுத்ததன்மை கொண்ட தங்கப்பத்திரத்தின் விலை கிராம் ரூ.4,777–ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வெளியீட்டுக்கு முந்தைய மூன்று வர்த்தக தினத்தின் சராசரி விலையினை அடிப்படையாகக் கொண்டு தங்கப்பத்திரங்களுக்கான விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
- ரூ.50 தள்ளுபடி: ரிசர்வ் வங்கி, மத்திய அரசுடன் நடத்திய ஆலோசனையின் அடிப்படையில், தங்கப்பத்திரங்களை வாங்க ஆன்லைனில் விண்ணப்பித்து டிஜிட்டல் முறையில் பணம் செலுத்துவோருக்கு கிராமுக்கு ரூ.50 தள்ளுபடி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அத்தகைய முதலீட்டாளர்களுக்கு, ஒரு கிராம் தங்கப்பத்திரத்தின் விலையானது ரூ.4,727–ஆக இருக்கும் என ரிசர்வ் வங்கி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.
- அதிகபட்ச முதலீடு 4 கிலோ: தற்போது வெளியிடப்படவுள்ள தங்கப்பத்திரங்களில் தனிநபர் ஒருவர் குறைந்தபட்சம் 1 கிராம் முதல் அதிகபட்சம் 4 கிலோ வரை முதலீடு செய்ய முடியும்.
- அஞ்சல் அலுவலகங்கள், வங்கிகள், பங்குச் சந்தைகள் மூலமாக தங்கப்பத்திரங்கள் முதலீட்டாளர்களுக்கு விற்பனை செய்யப்படவுள்ளன.

## இரட்டை இலக்கத்தைத் தொட்ட ஏப்ரல் மாத பணவீக்கம்

- உணவு மற்றும் எரிபொருள்களின் விலை அதிகரிப்பால் ஏப்ரல் மாதத்தில் பணவீக்கம் இரட்டை இலக்கத்தை தொட்டுள்ளது.
- இதுகுறித்து மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளதாவது:
- முன்னெப்போதும் இல்லாத அதிகபட்சம்: உணவுப் பொருள்கள், கச்சா எண்ணெய் மற்றும் உற்பத்தி துறை பொருள்களின் விலை கணிசமாக அதிகரித்ததையடுத்து சென்ற ஏப்ரல் மாதத்துக்கான பணவீக்கம் 10.49 சதவீதத்தை எட்டியுள்ளது. இது, முன்னெப்போதும் காணப்படாத உச்சபட்ச அளவாகும்.

## தேர்தல் பத்திரங்கள்

- இந்திய பாரத ஸ்டேட் வங்கி ஏப்ரல் மாதத்தில் 695 கோடிக்கு தேர்தல் பத்திரங்கள் விற்பனையாகியுள்ளதாக தெரிவித்துள்ளது.
- அரசியல் கட்சிகளுக்கு 1000 ரூபாய்க்கு மேல் நன்கொடை வழங்குபவர்கள் பாரத ஸ்டேட் வங்கியில் அளிக்கப்படும். தேர்தல் பத்திரம் வாயிலாக செலுத்தும் முறையை முன்னாள் நிதி அமைச்சர் அருண் ஜெட்லி 2017ல் அறிமுகம் செய்தார்.
- தேர்தல் ஆணையத்தில் 1% வாக்கு பெற்று பதிவு பெற்ற கட்சிகள் மட்டுமே இந்த பத்திரங்கள் வாயிலாக நிதி பெற இயலும்.

## 80 வாராக் கடன் கணக்குகளை சொத்து மீட்பு நிறுவனத்திடம் வழங்க வங்கிகள் முடிவு

- வங்கிகளில் வாராக் கடன் பிரச்னை அதிகரித்ததையடுத்து, அப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்திய வங்கிகள் கூட்டமைப்பு மத்திய அரசுக்கு கடந்த ஆண்டு கோரியிருந்தது.

- அதை ஏற்ற மத்திய அரசு, வாராக் கடன்களை வசூலிக்கும் நோக்கில் தேசிய சொத்து மீட்ப நிறுவனம் உருவாக்கப்படும் என்ற 2021–22–ஆம் நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்தது. கடன்களைத் திருப்பிச் செலுத்தாத நபர்கள் அல்லது நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துகளை விற்பனை செய்து அதன் மூலமாக கடனை சரிசெய்து கொள்ளும் பணியை இந்த நிறுவனம் மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- அடுத்த மாதம் தேசிய சொத்து மீட்பு நிறுவனம் செயல்பாட்டுக்கு வரவுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. இந்நிலையில், ரூ.500 கோடிக்கு மேல் வாராக் கடன் உள்ள கணக்குகளை அந்த நிறுவனத்திடம் ஒப்படைக்க வங்கிகள் முடிவெடுத்துள்ளதாக தெரிகிறது.

## மத்திய அரசுக்கு ரூ.99,122 கோடி ஈவுத்தொகை–ஆர்பிஐ முடிவு

- மத்திய அரசுக்கு ஈவுத்தொகை ரூ.99,122 கோடியை வழங்குவதற்கு இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) முடிவெடுத்துள்ளது.
- ஜூலை முதல் ஜூன் வரையிலான காலம், ரிசர்வ் வங்கியின் கணக்கியல் ஆண்டாக இருந்து வந்தது. அதை மத்திய அரசின் நிதியாண்டான ஏப்ரல் முதல் மார்ச் உடன் ஒத்து அமைப்பதற்கு ஆர்பிஐ முடிவு செய்தது. நடப்பு 2021–22ஆம் நிதியாண்டு முதல் அது நடைமுறைக்கு வருகிறது. இனி ரிசர்வ் வங்கியின் கணக்கு நடவடிக்கைகளும் ஏப்ரல் முதல் மார்ச் வரையிலேயே கணக்கிடப்படவுள்ளன.
- இந்நிலையில், கடந்த ஆண்டு ஜூலை முதல் கடந்த மார்ச் வரையிலான 9 மாத காலகட்டத்தில் கிடைத்த கூடுதல் வருவாயில் ரூ.99,122 கோடியை மத்திய அரசுக்கு ஈவுத்தொகையாக வழங்குவதற்கு கூட்டத்தின்போது முடிவெடுக்கப்பட்டது. அவசரகால நிதி விகிதத்தை 5.5 சதவீதமாக வைப்பதற்கும் ஆர்பிஐ முடிவெடுத்தது. அந்த விகிதத்தை 6.5 சதவீதம் முதல் 5.5 சதவீதத்துக்குள் வைப்பதற்கு பீமல் ஜலான் குழு பரிந்துரைத்திருந்தது. அதனடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## காப்பீட்டு துறையில் 74% அன்னிய நேரடி முதலீடு

- காப்பீட்டு துறையில் அன்னிய நேரடி முதலீட்டிற்கு 49% லிருந்து 74% ஆக அனுமதி அளிக்கப்பட்ட பிறகு புதிய நெறிமுறைகள் உருவாக்கப்பட்டள்ளது.
- நிறுவன செயல் குழு உறுப்பினர்கள் பெரும்பான்மையானோர் இந்திய குடிமகன்களாக இருத்தல் அவசியம், தலைவர் அல்லது மேலாண் இயக்குநர், தலைமைச் செயல் அதிகாரி போன்றோரில் எவரேனும் ஒருவர் இந்தியராக இருத்தல் அவசியம்.

## 40% மக்களுக்கு தடுப்பூசி செலுத்த 50 பில்லியன் டாலர் திட்டம்

- நிகழாண்டு இறுதிக்குள் உலகம் முழுவதும் குறைந்தது 40 சதவீத மக்களுக்கு தடுப்பூசி செலுத்த 50 பில்லியன் டாலர் (ரூ.3.6 லட்சம் கோடி) திட்டத்தை சர்வதேச நிதியம் (ஐஎம்எஃப்) பரிந்துரைத்துள்ளது.
- இது தொடர்பாக ஜி20 சுகாதார மாநாட்டில் நிதியத்தின் தலைமை இயக்குநர் கிறிஸ்டலீனா ஜார்ஜியேவா ஆற்றிய உரை:
- பொருளாதார நெருக்கடி ஏற்பட வாய்ப்பு உள்ளது என ஏற்கெனவே எச்சரிக்கப்பட்டது. தற்போது பணக்கார நாடுகளுக்கும், ஏழை நாடுகளுக்கும் இடையே கரோனா தப்பூசி பெறுவோரில் பெரும் வித்தியாசம் உள்ளதால் பொருளாதார நெருக்கடி மேலும் அதிகரிக்கவே வாய்ப்புள்ளது.
- இதைப் போக்க உலக சுகாதார நிறுவனம், உலக வங்கி, ஆப்பிரிக்க யூனியன் உள்ளிட்ட பல்வேறு சர்வதே அமைப்புகளுடன் சேர்ந்து மூன்று செயல்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.
- முதலில், நிகழாண்டு இறுதிக்குள் உலகம் முழுவதும் 50 பில்லியன் டாலர் செலவில் குறைந்தது 40 சதவீத மக்களுக்கு தடுப்பூசி செலுத்த வேண்டும். 2022–இன் முதல் பாதியில் குறைந்தது 60 சதவீத மக்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.

## 81.72 பில்லியன் டாலர் அந்நிய நேரடி முதலீடு

- இந்தியா 2020–21ம் நிதி ஆண்டில் 81.72 பில்லியன் டாலர் அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்த்துள்ளதாக தொழில்துறை மேம்பாட்டு மற்றும் உள்நாட்டு வர்த்தக துறையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.
- மொத்த அந்நிய நேரடி முதலீட்டில் 37%க்கும் அதிகமான முதலீடுகளை ஈர்த்து குஜராத் முதலிடத்திலும் 27% துடன் மகாராஷ்டிரா 2வது இடத்திலும் கர்நாடகா (137) 3வது இடத்திலும் உள்ளது.

- முதலீடு செய்த நாடுகளில் சிங்கப்பூர் 29% உடன் முதலிடத்திலும் அமெரிக்கா 23% உடன் இரண்டாமிடமும் மொரிஷியஸ் (9%) மூன்றாமிடமும் பெற்றுள்ளது.

## தமிழ்நாட்டின் 2020–21ஆம் ஆண்டிற்கான நிதி பற்றாக்குறை ₹92,305 கோடியாக உள்ளது

- கொரோனா பெருந்தொற்று காரணமாக குறைவான வருவாய் சேகரிப்பும், நோய் தடுப்புக்காக அதிக செலவும் செய்ததால் நிதி பற்றாக்குறை அதிகரித்துள்ளது.
- மொத்த வருவாய் 2.8%, 2019–20 ஆம் ஆண்டை விட குறைந்துள்ளது.
- அதே போன்று, செலவும் 2019–20 ஆம் ஆண்டை விட 147% அதிகரித்துள்ளது.
- 2020–21ஆம் ஆண்டிற்கான வருவாய் பற்றாக்குறை ₹61,320 கோடியாக உள்ளது.
- வருவாய் பற்றாக்குறை என்பது அரசின் வருவாய்க்கும், செலவுக்கும் உள்ள வித்தியாசம் ஆகும்.

## தங்கப் பத்திர வெளியீடு கிராம் ரூ.4,889–ஆக நிர்ணயம்

- தங்கப் பத்திர விற்பனை மே 31 தொடங்கவுள்ள நிலையில், அதன் விலையை கிராமுக்கு ரூ.4,889–ஆக ரிசர்வ் வங்கி நிர்ணயித்துள்ளது.
- இதுகுறித்து ரிசர்வ் வங்கி மேலும் கூறியுள்ளதாவது:
- நடப்பு 2021–22–ஆம் நிதியாண்டுக்கான மூன்றாம் கட்ட தங்கப்பத்திர விற்பனை வரும் மே 31–ஆம் தேதி தொடங்கி ஜூன் 4–ஆம் தேதி வரை 5 நாள்கள் நடைபெறவுள்ளது. இந்த கட்டத்தில் வெளியிடப்படும் 999 சுத்ததன்மை கொண்ட தங்கப்பத்திரத்தின் விலை கிராமொன்றுக்கு ரூ.4,889–ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. வெளியீட்டுக்கு முந்தைய மூன்று வர்த்தக தின சராசரி விலையை அடிப்படையாகக் கொண்டு தங்கப் பத்திரங்களுக்கான விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
- ரிசர்வ் வங்கி, மத்திய அரசுடன் நடத்திய ஆலோசனையின் அடிப்படையில், தங்கப் பத்திரங்களை வாங்க ஆன்லைனில் விண்ணப்பித்து டிஜிட்டல் முறையில் பணம் செலுத்துவோருக்கு கிராமுக்கு ரூ.50 தள்ளுபடி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அத்தகைய முதலீட்டாளர்களுக்கான ஒரு கிராம் தங்கப் பத்திரத்தின் விலை ரூ.4,839–ஆக இருக்கும் என ரிசர்வ் வங்கி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வாய்மையே வெல்லும்

# 5.அறிவியல்




## 5.1 அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்

### சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து பூமிக்கு திரும்பிய 4 வீரர்கள்

- சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண்கலம் மூலம் 4 விண்வெளி வீரர்கள் பூமிக்கு திரும்பினர்.
- 1968–ஆம் ஆண்டு நிலவுக்குச் சென்றுவிட்டு அமெரிக்காவின் "அப்பல்லோ 8" விண்கலம் விண்வெளி வீரர்களுடன் அதிகாலையில் இருளில் பூமிக்கும் திரும்பியது. அதன்பிறகு அமெரிக்க விண்வெளி வீரர்கள் இருளில் தரையிறங்கியது இப்போதுதான்.
- அமெரிக்கா, ரஷியா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் இணைந்து சர்வதேச விண்வெளி நிலையத்தை நிர்மாணித்துள்ளன. இந்த விண்வெளி நிலையத்திலிருந்து 4 வீரர்கள் டிராகன் விண்கலம் மூலம் பூமிக்கு திரும்பினர். அந்த விண்கலம் பாராசூட் உதவியுடன் மெக்சிகோ வளைகுடா கடலில் இறங்கியது.
- நான்கு விண்வெளி வீரர்களில் மூவர் அமெரிக்கர்கள், ஒருவர் ஜப்பானியர். நாசாவின் கென்னடி விண்வெளி மையத்திலிருந்து கடந்த நவம்பரில் விண்கலம் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்ற அவர்கள். தமது 167 நாள்கள் ஆய்வுப் பணியை நிறைவு செய்த பின்னர் பூமிக்கு திரும்பியுள்ளனர். இதை எடுத்து, தற்போது சர்வதேச விண்வெளி நிலையத்தில் 7 பேர் ஆய்வு பணியில் உள்ளனர்.

### உலகின் மிகப்பெரிய விமானம்

- ஸ்ட்ரோட்டோ லான்ச் என்ற உலகின் மிகப்பெரிய விமானம் கலிபோர்னியா பாலைவனத்தில் பரிசோதித்து பிரிக்கப்பட்டுள்ளது.
- 2.6மைல் உயரத்தில் மணிக்கு 199 மைல் வேகத்தில் இந்த விமானம் 3.14 மணி நேரம் பறக்கவிட்டு பரிசோதிக்கப்பட்டுள்ளது.
- அமெரிக்காவின் ஸ்ட்ரோட்டோ லான்ச் மற்றும் அமெரிக்கா ஏரோஸ்பேஸ் நிறுவனத்தால் இந்த விமானம் வடிவமைக்கப்பட்டு உள்ளது.

### அவசர கால தேவைக்காக mRNA மாடெர்னா தடுப்பூசிக்கு உலக சுகாதார அமைப்பு ஒப்புதல்

- mRNA–1278 என்ற தொழில்நுட்ப பெயரிலான கோவிட்–19க்கு எதிரான தடுப்பூசி அவசர கால தேவைக்காக உலக சுகாதார அமைப்பால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**உலக சுகாதார அமைப்பு**

- துவக்கம் – 1948 ஏப்ரல் 7
- தலைவர் – டெட்ரோஸ் அதானோம்
- தலைமையிடம் – ஜெனீவா, சுவிட்சர்லாந்து

### ஸ்பேஸ்–எக்ஸின் "ஸ்டார்ஷிப்" வெற்றிகர சோதனை

- விண்வெளிக்கு மனிதர்களை அழைத்துச் செல்வதற்காக அமெரிக்காவின் ஸ்பேஸ்–எக்ஸ் நிறுவனம் உருவாக்கி வரும் ராக்கெட்டின் மாதிரி, வெற்றிகரமாக சோதித்துப் பார்க்கப்பட்டது.
- அந்த "ஸ்டார்ஷிப்"பின் 15–ஆவது வரிசை எண் கொண்ட ராக்கெட், டெக்ஸாக் மாகாணம், பிரௌன்ஸ்வில் நகரிலுள்ள நிறுவனத்தின் ஏவுதளத்தில் மேலே செலுத்தப்பட்டு, பிறகு முதல்முறையாக வெற்றிகரமாகத் தரையிறக்கப்பட்டது.

வெற்றி I.A.S. கல்வி மையம்

- இந்த வகையைச் சேர்ந்த ராக்கெட்டைத்தான், தனது 2024–ஆம் ஆண்டில் நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்துக்கு நாசா தேர்ந்தெடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## கட்டுப்பாட்டை இழந்த சீன ராக்கெட்டால் பூமிக்கு ஆபத்தா?

- விண்வெளியிலிருந்து கட்டுப்பாட்டை இழந்து திரும்பி வந்து கொண்டிருக்கும் சீன ராக்கெட் பூமியில் விழும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.
- பூமியின் வளிமண்டலத்துக்குள் நுழையும்போது ராக்கெட்டின் பாகங்கள் எரிந்துவிடும் என்பதால் அச்சம் கொள்ளத் தேவையில்லை என சீனா தெரிவித்துள்ளது.
- அமெரிக்கா, ரஷியா, ஐரோப்பா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் இணைந்து சர்வதேச விண்வெளி நிலையத்தை அமைத்துள்ளன. அதில் சீனா பங்கேற்க அனுமதி இல்லாத காரணத்தால், சீனா தனியாக விண்வெளி நிலையத்தை அமைத்து வருகிறது.
- "தியான்காங்" எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த விண்வெளி நிலையம் பூமியிலிருந்து 340 கி.மீ முதல் 450 கி.மீ. தொலைவில் வலம் வரும் வகையில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த விண்வெளி நிலையத்துக்கான சிறிய அளவிலான கலங்களை சோதனை முறையில் சீனா ஏற்கெனவே செலுத்தியுள்ளது.
- இந்நிலையில், மிகப்பெரிய கலத்தை கடந்த ஏப்ரல் 29–ஆம் தேதி லாங் மார்ச் 5–பி என்ற ராக்கெட் மூலம் ஹைனான் மாகாணம், வென்சாங் ஏவுதளத்திலிருந்து சீனா செலுத்தியது. இந்தக் கலம் 16.6மீ. நீளமும், 4.2மீ.அகலமும் கொண்டது.
- இந்நிலையில், லாங் மார்ச் 5–பி ராக்கெட் கட்டுப்பாட்டை இழந்து பூமியின் வளிமண்டலத்தை நோக்கி திரும்பி வருவதைக் கண்டறிந்துள்ளதாக அமெரிக்க பாதுகாப்புத் துறை மே 4–ஆம் தேதி தெரிவித்ததாக சிஎன்என் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டது.

## டிஆர்டிஓ தயாரித்த கரோனா சிகிச்சை மருந்துக்கு அவசரகால அனுமதி

- கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக பாதுகாப்பு ஆராய்ச்சி–மேம்பாட்டு நிறுவனம் (டிஆர்டிஓ) தயாரித்த மருந்தை அவசரகாலத்தில் பயன்படுத்த இந்திய மருந்துப் பொருள்கள் கட்டுப்பாட்டு இயக்குநரகம் (டிசிஜிஐ) அனுமதி வழங்கியுள்ளது.
- ஹைதராபாத்தில் உள்ள டாக்டர் ரெட்டீஸ் நிறுவனத்துடன் இணைந்து 2–டிஜி மருந்து தயாரிக்கப்பட்டுள்ளது. குளுகோஸ் அடிப்படையாகக் கொண்டுள்ளதால், இந்த மருந்தை உள்நாட்டில் அதிக அளவில் தயாரித்து விநியோகிக்க முடியும். கரோனாவால் தீவிரமாக பாதிப்படைந்தவர்களும் இந்த மருந்தால் பலனடைவர்.
- ஓராண்டாக பரிசோதனைகள்: பொடியாகக் கிடைக்கும் 2–டிஜி மருந்தை நீரில் கரைத்து குடிக்கலாம். உடலில் கரோனா தீநுண்மி பரவலை இந்த மருந்து பெருமளவில் கட்டுக்குள் கொண்டு வரும்.

## சினோபார்ம் தடுப்பூசி

- உலக சுகாதார அமைப்பு சீனாவின் சினோபார்ம் தடுப்பூசிக்கு அவசரகால பயன்பாட்டிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

**உலக சுகாதார அமைப்பு**

- துவக்கம் – 1948
- தலைமையிடம் – ஜெனிவா, சுவிட்சர்லாந்து
- தலைவர் – டெட்ரோஸ் அதானம்

## மிஷன் பாரத்–02

- நாட்டின் நிலவும் ஆக்ஸிஜன் பற்றாக்குறையை போக்கும் நோக்கில் 117 கான்பூரின் ஸ்டார்ட் அப் உருவாக்கம் மற்றும் கண்டுபிடிப்பு மையம் மிஷன் பாரத்–02ஐ துவங்கியுள்ளது.
- 45 நாட்களுக்கு இந்த திட்டம் ஆக்ஸிஜன் உற்பத்தியாளர்களுக்கும் மருத்துவமனைகளுக்கும் இடையே தொடர்பினை ஏற்படுத்த துவங்கப்பட்டுள்ளது.

## மீன்களை கொல்லும் வைரஸிற்கு புதிய மருந்து

- மத்திய உவர் நீர் மீன் வளர்ப்பு நிறுவனம் (CIBA) மீன்களை கொல்லும் ஒரு வைரசிற்கு எதிரான தடுப்பு மருந்தை நாட்டிலேயே முதலாவதாக தயாரித்துள்ளது.
- VNN நோய் எனப்படும் மீன்களை பாதித்து வளர்ச்சியை தடுக்கும் இந்த வைரஸ் நோய்க்கு தற்போது மருந்து கண்டறியப்பட்டுள்ளது.

## நிலவிற்கான DOGE–1 திட்டம்

- எலன்மாஸ்கின் ஸ்பேஸ் x நிறுவனம் நிலவிற்கான முதல் வரத்தக அளவிலான திட்டமான DOGE–

1 திட்டத்தை முழுவதுமாக கிரிப்டோ கரன்சியை பெற்றுக் கொண்டு செலுத்த உள்ளது.

- 2022ம் ஆண்டு முதல் பகுதியில் பால்கான்–9 என்ற ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட உள்ளது.
- இந்த "Dogecoin" திட்டத்திற்கு கனடா கணித ஆற்றல் நிறுவனம் நிதியுதவி அளிக்கிறது.

## மியுகோர்மைகாஸிஸ்

- கோவிட் நோயாளிகளுக்கு இடையே ஏற்படும் ஒரு கருப்பு பூஞ்சை நோய் அதிக அளவிலான பாதிப்பை ஏற்படுத்துகிறது.

**பூஞ்சை மியுகோர்மைசாலிஸ்**

- இந்த நோய் தோல், நுரையீரல், மூளை போன்றவற்றை அதிகளவில் பாதிக்கிறது.
- அரிதான இந்த பூஞ்சை பாதிப்பு தில்லி, குஜராத், மகாராஷ்டிராவில் அதிகம் காணப்படுகிறது.
- காற்றிலுள்ள இந்த பூஞ்சைகளை சுவாசிப்பதன் மூலம் இந்த பூஞ்சை நுரையீரலுக்குள் செல்கிறது.

**அறிகுறிகள்:**

- சிவந்த கண்கள் மற்றும் மூக்கு
- தலைவலி, காய்ச்சல், இரத்த வாந்தி மூச்சு விடுவதில் சிரமம் மனநல பாதிப்பு

## பில்நெல்சன் நாசாவின் மேலாண் அதிகாரியாக நியமனம்

- அமெரிக்காவின் முன்னாள் பாராளுமன்ற செனட் உறுப்பினர் பின்நெல்சன் நாசாவின் 14வது மேலாண்மை தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- துணை அதிபர் கமலாஹாரிஸ் அவருக்கு பதவி பிரமானம் செய்து வைத்தார்.
- புளோரிடாவின் செனட் உறுப்பினராக 2001 முதல் 2009 வரை பணிபுரிந்தார்.

நாசா – National Aeronautics and Space Adminis–tration.

- தலைவர் – ஜிம் பிரிடன்ஸ்டின்
- துவக்கம் – 1958
- தலைமையிடம் – வாஷிங்டன் USA.

## உலகின் முதல் ஆளில்லா கப்பல்

- "மே பிளவர் 400" என்ற கப்பல் அட்லாண்டிக் பெருங்கடலின் மீது முதன் முதலாக இயக்கப்பட்டுள்ளது.
- இது கடல் உயிரினங்களை கண்டறிதல், பின்தொடர் கடல் மாசடைதலை ஆராய்தல் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. சூரிய சக்தி மற்றும் செயற்கை நுண்ணறிவால் செயல்படக்கூடியது.
- இந்தியா, அமெரிக்கா, ஸ்விட்சர்லாந்து கூட்டு முயற்சியில் உருவாகியுள்ளது.

## புதிய விண்மீன் கூட்டத்தின் அற்புத புகைப்படம்

- புதிய விண்மீன் கூட்டத்தின் அற்பத புகைப்படத்தை அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது.
- அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம், ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் ஆகியவை இணைந்து கடந்த 1990 ஏப்ரல் 24ம் தேதி ஹப்பிள் தொலைநோக்கியை விண்ணில் நிலை நிறுத்தின. கடந்த 31 ஆண்டுகளில் இந்த தொலைநோக்கி 48,000–க்கும் மேற்பட்ட நட்சத்திரங்கள், கோள்களை புகைப்படம் எடுத்துள்ளது. இதுவரை சுமார் 15 லட்சம் புகைப்படங்களை நாசாவுக்கு ஹப்பிள் அனுப்பியுள்ளது.
- இந்த வரிசையில், பூமியில் இருந்து 130 கோடி ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள புதிய விண்மீன் கூட்டத்தை ஹப்பிள் தொலைநோக்கி படம் பிடித்திருக்கிறது. அந்த அற்புதமான புகைப்படத்தை நாசா விண்வெளி ஆய்வு மையம் அண்மையில் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டது.
- புகைப்படத்துடன் நாசா வெளியிட்டுள்ள விளக்க குறிப்பில் கூறியிருப்பதாவது:
- சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு பிரபஞ்சத்தில் பால்வெளி அண்டம் மட்டுமே இருக்கிறது என்று விண்வெளி ஆய்வாளர்கள் நம்பிக் கொண்டிருந்தனர். ஆனால் இப்போது பால்வெளி அண்டத்தை தாண்டி ஏராளமான விண்மீன் கூட்டங்களை நவீன தொலைநோக்கிகள் மூலம் நாம் கண்டுபிடித்துள்ளோம். நாசாவின் ஹப்பிள் தொலைநோக்கி, "ஏபெல்3827" என்ற மிகப்பெரிய விண்மீன் கூட்டத்தை படம் பிடித்திருக்கிறது.

## ஸ்புட்னிக்–வி கரோனா தடுப்பூசியின் விலை ரூ.995: ரெட்டீஸ் நிறுவனம்

- ரஷியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஸ்புட்னிக்–வி கரோனா தடுப்பூசியின் விலையை ரூ.995.4–ஆக டாக்டர் ரெட்டீஸ் நிறுவனம் நிர்ணயித்துள்ளது.

- கோவேக்ஸின், கோவிஷீல்ட் தடுப்பூசிகள் ஏற்கெனவே மக்களுக்கு செலுத்தப்பட்டு வரும் நிலையில், ரஷியாவில் தயாரிக்கப்பட்ட "ஸ்புட்னிக்-வி" தடுப்பூசியைப் பயன்படுத்துவதற்கு மத்திய அரசு அனுமதி அளித்தது. அத்தடுப்பூசி விரைவில் பயன்பாட்டுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## செந்நிற நிலவு

- சந்திர கிரகண நாளில் நிலவு மிகப்பெரிய அளவில் செந்நிறமாக தெரியும் நிகழ்வே மே 26-2021 அன்று நடைபெற உள்ளது.
- கடைசியாக 2019ம் ஆண்டு ஜனவரி 21-ல் இந்த நிகழ்வு நடைபெற்றது.

## செவ்வாய் கிரகத்தில் வெற்றிகரமாக இறங்கிய சீன விண்கலம்

- விண்கலத்தின் ரோவர் (ஆய்வு வாகனம்) செவ்வாய் கிரகத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியது.
- இதன் மூலம், அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக செவ்வாயில் ரோவரை தரையிறக்கிய 2-ஆவது நாடு என்கிற பெருமையை சீனா பெற்றுள்ளது.
- ஜுரோங் என்ற அந்த ரோவருடன் தியான்வென்-1 விண்கலம் கடந்த ஆண்டு ஜூலையில் செலுத்தப்பட்டது. கடந்த பிப்ரவரி மாதம் செவ்வாயின் சுற்றுவட்டப் பாதைக்குள் விண்கலம் நுழைந்தது. இந்த நிலையில், விண்கலத்திலிருந்து பிரிந்த ஆய்வு வாகனம் பெய்ஜிங் நேரப்படி காலை 7.18 மணிக்கு பரந்த நிலப்பரப்பான "உடோபியா பிளானிடியா" என்ற பகுதியில் தரையிறங்கியதாக சீன அரசு ஊடகம் தெரிவித்துள்ளது.
- ஜுரோங் ரோவரின் சோலார் பேனல்களும், ஆண்டெனாவும் விரிவடைய 17 நிமிடங்கள் ஆனது. அதன் பிறகு 32 கோடி கி.மீ. தொலைவில் புவியில் உள்ள கட்டுப்பாட்டு அறைக்கு தகவல்களை அனுப்பியது.
- சுரோங் ரோவர் நகர்ந்து ஆய்வுப் பணியை மேற்கொள்ளும் முன்னர், கிரகத்தின் தரைப்பரப்பை ஆய்வு செய்யும். சீன நெருப்புக் கடவுளான "ஜுரோங்" பெயரிலான இந்த ரோவர் உயர் தெளிவுத் திறன் கொண்ட நிலப்பரப்பு கேமரா உள்ளிட்ட 6 அறிவியல் கருவிகளைக் கொண்டுள்ளது.

## ஸ்பேஸெக்ஸ் ஃபால்கன்-9 ராக்கெட்

- அமெரிக்காவின் ஃபுளோரிடா மாகாணத்தில் உள்ள நாசாவின் ஏவுதளத்திலிருந்து தொலைத்தொடர்பு செயற்கைக்கோள்களை ஏந்தி விண்ணை நோக்கி பாய்ந்த ஸ்பேஸெக்ஸ் ஃபால்கன்-9 ராக்கெட்..

## கரோன சிகிச்கைக்கு டிஆர்டிஓ தயாரித்த மருந்து பயன்பாட்டுக்கு வருகிறது

- கரோனா நோயாளிகளுக்கு அளிப்பதற்காக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ) உருவாக்கியுள்ள மருந்து பயன்பாட்டுக்கு வருகிறது.
- கரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையின்போது அளிப்பதற்காக டிஆர்டிஓ அமைப்பும், ஹைதராபாதில் உள்ள டாக்டர் ரெட்டீஸ் நிறுவனமும் இணைந்து 2-டி-ஆக்சி-டி-குளுக்கோஸ் என்ற மருந்தை உருவாக்கியுள்ளன. அந்த மருந்தின் முதல் தொகுப்பை நோயாளிகளின் பயன்பாட்டுக்காக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோர் இணைந்து வெளியிடவுள்ளதாக மத்திய அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.
- இந்த மருந்து தொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் சமீபத்தில் வெளியிட்டிருந்த அறிக்கையில் "கரோனா சிகிச்சைக்காக டிஆர்டிஓ உருவாக்கியுள்ள 2-டி-ஆக்சி-டி-குளுக்கோஸ் மருந்து பொடி வடிவில் பாக்கெட்டில் தரப்படவுள்ளது.

## பயன்பாட்டுக்கு வந்தது "2-டிஜி" கரோனா மருந்து

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (டிஆர்டிஓ) அமைப்பு சார்பில் தயாரிக்கப்பட்ட தண்ணீரில் கலந்து குடிக்கும் வகையிலான டி-டியோக்ஸி டி-குளுகோஸ் (2-டிஜி) கரோனா சிகிச்சை மருந்து இந்தியாவில் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.
- 2-டிஜி மருந்து இந்தியாவின் விஞ்ஞான வலிமைக்கு மிகச் சிறந்த உதாரணம். இந்த மருந்தை பயன்படுத்துவதன் மூலம், கரோனா நோயாளிகளுக்கு வழக்கமாக சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய நாள்களைக் காட்டிலும் இரண்டரை நாள்கள் முன்கூட்டியே பாதிக்கப்பட்டவர்கள் நன்கு குணமடைந்து விடுவதாகவும், ஆக்சிஜன் உதவியுடன் இருக்க வேண்டிய நிலை 40 சதவீதம் அளவுக்கு குறைவதாகவும் மருந்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

## ஸ்புட்னிக்–வி உற்பத்தி: டாக்டர் ரெட்டீஸ் நிறுவனத்துடன் ஷில்பா மெடிகேர் ஒப்பந்தம்

- ரஷியாவின் ஸ்புட்னிக்–வி கரோனா தடுப்பூசியை இந்தியாவில் உற்பத்தி செய்வதற்கு டாக்டர் ரெட்டீஸ் நிறுவனத்துடன் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த ஷில்பா மெடிகேர் நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது.
- "கர்நாடக மாநிலம் தார்வாட் பகுதியில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த மருந்து ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி மையத்தில் ஸ்புட்னிக்–வி தடுப்பூசியை தயாரித்து விநியோகம் செய்வதற்கான 3 ஆண்டு ஒப்பந்தம் ஷில்பா மெடிகேர் நிறுவனத்துக்குச் சொந்தமான ஷில்பா பயோலாஜிக்கல்ஸ் தனியார் நிறுவனத்துக்கும் (எஸ்பிபிஎல்) டாக்டர் ரெட்டீஸ் நிறுவனத்துக்கும் இடையே கையெழுத்தாகியுள்ளது.
- தடுப்பூசி தொழில்நுட்பத்தை டாக்டர் ரெட்டீஸ் நிறுவனம் எஸ்பிபில் நிறுவனத்திடம் வழங்கும். அதன் மூலம், வர்த்தக ரீதியலான உற்பத்தி தொடங்கிய தேதியிலிருந்து முதல் 12 மாதங்களுக்கு முதல் தொகுப்பின் கீழ் 5 கோடி ஸ்புட்னிக்–வி தடுப்பூசி டோஸ்கள் உற்பத்தி செய்யப்படும். அதன் பிறகு, இரண்டாம் தொகுப்பின் கீழ் மேலும் 5 கோடி தடுப்பூசிகள் உற்பத்தி செய்யப்படும்.

## SBIRS Geo–5 ஏவுகணை

- அமெரிக்க விண்வெளி நிறுவனங்களான ஐக்கிய ஏவுதள கூட்டமைவு அட்லஸ் ராக்கெட்டை மே 12ல் ஏவியுள்ளது.
- SBIRS Geo–5 – Space Based Infrared System Geosynchronous Earth Orbit Flight 5.

## ஸ்டார் லிங்க் செயற்கைக்கோள் இணையதள சேவை

- எலன் மாஸ்கின் ஸ்பேஸ் X நிறுவனம் கூகுள் கிளவுட் நிறுவனத்துடன் இணைந்து அதிவேக செயற்கைக்கோள் இணையதள சேவையை துங்கியுள்ளது.
- இதன் மூலம் அதிக அளவிலான வேகத்தில் இணையதள வசதியை அளிக்க இயலும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இது புவியின் கிடைமட்ட சுற்றுவட்டப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

## இந்தியாவுக்கு அக்டோபர்–டிசம்பரில் ரஷிய "எஸ்–400" ஏவுகணை அமைப்பு

- அதிநவீன எஸ்–400 வான் பாதுகாப்பு ஏவுகணை அமைப்பின் முதல் தொகுதி இந்தியாவுக்கு வருகிற அக்டோபர்–டிசம்பர் மாதங்களில் வழங்கப்படும் என்று ரஷியாவின் ஆயுத ஏற்றுமதியாளரான ரோஸோபோரோன் எக்ஸ்போர்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது.
- ரஷியாவிடமிருந்து ரூ.36,500 கோடி மதிப்பில் 5 தொகுப்பு எஸ்–400 வான் பாதுகாப்பு ஏவுகணைகளை கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்தை கடந்த 2018–ஆம் ஆண்டு இந்தியா மேற்கொண்டது. தரையிலிருந்தபடி நீண்ட தூர வான் இலக்கை துல்லியமாக தாக்கி அழிக்கும் திறன் கொண்டது இந்த ஏவுகணை. வானில் 400 கி.மீ. தொலைவில் இருக்கும் எதிரி விமானங்கள், ஏவுகணை, ஆளில்லா (டிரோன்) விமானங்களையும் தாக்கி அழிக்கும் திறன் கொண்டது.

## உடலில் எதிர்ப்பு சக்தியை 75 நிமிஷங்களில் கண்டுபிடிக்கும் கிட் டிஆர்டிஓ தயாரித்தது

- கரோனா தொற்றை சமாளிக்க உடலில் எதிர்ப்பு சக்தி எவ்வளவு உள்ளது என்பதை 75 நிமிஷங்களில் அறிந்து கொள்ளும் சிறு கருவியை (கிட்) மத்திய அரசின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டிஆர்டிஓ) உருவாக்கியுள்ளது.
- பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் டிப்கேவின் என்று பெயரிடப்பட்டுள்ள இந்தக் கருவியில் கரோனா நோய்க்கான எதிர்ப்பு சக்தியின் அளவு குறித்து 75 நிமிஷங்களில் தெரிந்து கொள்ளலாம். வேறு நோய்களின் விவரங்கள் இதில் இடம் பெறாது. 18 மாதங்கள் வரை பயன்பாட்டு காலம் உள்ள இந்தக் கருவியில் கண்டுபிடிக்கப்படும் விவரங்கள் 97 சதவீதம் முதல் 99 சதவீதம் வரை துல்லியமாக இருக்கும். தில்லியைச் சேர்ந்த வான்கார்ட் தனியார் நிறுவனத்துடன் இணைந்து இந்தக் கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- 100 கருவிகள் விரைவில் அறிமுகப்படுத்தப்படும். அதன் மூலம் சுமார் 10 ஆயிரம் பரிசோதனைகளை மேற்கொள்ளலாம். ஒரு பரிசோதனைக்கான செலவு சுமார் ரூ.75–ஆக இருக்கும். மாதந்தோறும் சுமார் 500 கருவிகளை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## செவ்வாய் கிரகத்தின் மேற்பரப்பில் ஆய்வுப் பணியைத் தொடங்கியது சீன ரோவர்

- சீனாவிலிருந்து செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பப்பட்ட "ஜுரோங்" ரோவர் (ஆய்வு வாகனம்) தனது பணியைத் தொடங்கியது. செவ்வாய் கிரகத்தில் நகர்ந்து சென்று ஆய்வுப் பணிகளை அந்த ரோவர் மேற்கொள்ளவுள்ளது.
- செவ்வாய் கிரகத்துக்கு "தியான்வென்–1" என்ற விண்கலத்தை சீன விண்வெளி ஆய்வு நிறுவனம் கடந்த ஆண்டு ஜுலை 23–ஆம் தேதி அனுப்பியது. அந்த விண்லகத்திலிருந்து பிரிந்த லேண்டர் பகுதி செவ்வாய் கிரகத்தின் வட அரைக்கோளத்தில் கடந்த 15–ஆம் தேதி வெற்றிகரமாகத் தரையிறங்கியது. விண்கலம் தொடர்ந்து செவ்வாய் கிரகத்தை சுற்றி வந்து ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளது.
- ஜுரோங் ரோரானது மணிக்கு 200 மீட்டர் வேகத்தில் நகரும் திறன் கொண்டது. 30 செ.மீ. உயரம் கொண்ட இடங்களையும் ஏறிச்சென்று கடக்கவல்லது. அதிகபட்சமாக 20 டிகிரி சாய்வு கொண்ட இடங்களிலும் அந்த ரோவரில் இடம்பெ'றறுள்ள 6 சக்கரங்களும் தனித்து இயங்கவல்லவை.
- சுயமாக முடிவெடுக்கும் திறன்: மணற்காற்று வீசும் சமயங்களில் செயல்படாமல் இருக்கவும், போதிய சூரிய ஒளி கிடைத்தபிறகு செயல்பட ஆரம்பிக்கவும் தானாகவே முடிவெடுத்துக் கொள்ளும் வகையில் ஜுரோங் ரோவர் வடிவமைக்கப்படடுள்ளது. சுமார் 3 மாதங்களுக்கு செவ்வாயின் பரப்பில் அந்த ரோவர் ஆய்வுப் பணியில் ஈடுபடும் என்று சீன விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## நிலவிற்கான வைபர் ரோவர்

- அமெரிக்காவின் விண்வெளி நிறுவனமான நாசா நிலவிற்கு வைபரி என்ற ரோவரை அனுப்ப திட்டமிட்டுள்ளது.

**வைபர்:**

- VIPER stands for Volatiles Investigating Polar Exploration Rover நிலவின் தென்துருவ பகுதியை ஆராய்வதற்கு நாசா இந்த திட்டத்தை செயல்படுத்த உள்ளது.

## காங்கோ எரிமலை வெடிப்பில் 15 பேர் பலி: 30 ஆயிரம் பேர் வெளியேற்றம்

- கிழக்கு காங்கோவில் கோமா என்ற நகரையொட்டி உள்ள நியிராகோங்கோ எரிமலை வெடிக்கத் தொடங்கியது.

## 5ஜி சோதனைக்காக அலைக்கற்றையை ஒதுக்கியது மத்திய அரசு

- ஐந்தாம் தலைமுறை (5ஜி) இணையதள வசதியை உருவாக்கும் சோதனைக்கான அலைக்கற்றையைத் தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.
- 4ஜி இணையதள வசதி தற்போது நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பயன்பாட்டில் உள்ளது. அடுத்த தலைமுறையான 5ஜி இணையதள வசதியை உருவாக்குவதற்கான சோதனைகளில் அமெரிக்கா, சீனா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் முன்னின்று வருகின்றன.
- இந்தியாவில் 5ஜி தொழில்நுட்பத்துக்கான சோதனைகளை மேற்கொள்வதற்கு மத்திய அரசு ஏற்கெனவே அனுமதி அளித்திருந்தது. இந்த ஆய்வுக்காக ரிலையன்ஸ் ஜியோ, பார்தி ஏர்டெல், வோடஃபோன் ஐடியா, எம்டிஎன்எல் ஆகிய நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. சீன நிறுவனங்களுடன் இணைந்து இந்த சோதனையை மேற்கொள்ளாமல் எரிக்ஸன், நோக்கியா, சி–டாட் ஆகியவற்றுடன் இணைந்து மேற்கொள்ள மத்திய அரசு அனுமதி வழங்கியிருந்தது.

## பால்வெளி அண்டம்

- அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா வெளியிட்டுள்ள பால்வெளி அண்டத்தின் அற்புதமான புகைப்படம் சந்திரா எக்ஸ்ரே ஆய்வகம், தென் ஆப்பிரிக்காவில் உள்ள மீர்காட் வானொலி, தொலைநோக்கி ஆகியவற்றிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இந்தப் புகைப்படம் உருவாக்கப்பட்டுள்ளது. அதிவெப்பமான வாயு மற்றும் காந்தப்புலங்களின் நூல்களைக் கொண்டு பால்வெளி அண்டத்தின் மையத்தில் நெய்யப்பட்ட துணி என இந்தப் புகைப்படம் குறித்து நாசா விளக்கம் அளித்துள்ளது.

## கோவிட்–19 மேலாண்மையில் தாராவி மாதிரி

- மும்பையின் அதிக நெரிசல் கொண்ட தாராவி பகுதியில் கோவிட்–19 தடுப்பு நடவடிக்கைகளில் வெற்றி கொண்ட முறைய தாராவி மாதிரி என கருதப்படுகிறது.

- Tracing, Tracking, Testing, Treating என்ற 4Tக்களின் அடிப்படையில் தாராவி பகுதியில் கோவிட்-19 வெற்றி காணப்பட்டுள்ளது.

### சொந்த விண்வெளி நிலையத்துக்கு வீரர்களை அனுப்புகிறது சீனா

- அமெரிக்கா, ரஷியா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளின் பங்களிப்பில் சர்வதேச விண்வெளி நிலையம் செயல்பட்டு வருகிறது. அதில் இடம் பெறாத சீனா, தனியாக விண்வெளி நிலையம் ஒன்றை கட்டமைத்து வருகிறது. "தியான்ஹே" எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த விண்வெளி நிலையத்துக்கான மைய தொகுதியானது கடந்த ஏப்ரல் 29-ஆம் தேதி சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டது. அந்த நிலையத்துக்கான எரிபொருள், விண்வெளி உடைகள், உணவுப் பொருள்களுடன் ஒரு விண்கலம் அனுப்பப்பட்டது. அது ஞாயிற்றுக்கிழமை விண்வெளி நிலையத்துடன் இணைந்தது.
- இதன் அடுத்தகட்டமாக "சென்ஷு 12" என்ற விண்கலம் மூலம் ஜியூகுவான் தளத்திலிருந்து மூன்று விண்வெளி வீரர்கள் விண்வெளி நிலையத்துக்கு அடுத்த மாதம் அனுப்பப்படவுள்ளதாக யாங் லிவி தெரிவித்துள்ளார்.
- விண்வெளி வீரர்கள் யார், விண்கலம் செலுத்தப்படவுள்ள தேதி என்ன என்று அவர் தெரிவிக்காவிட்டாலும், அதில் பெண்கள் யாரும் இடம் பெறவில்லை என உறுதிப்படுத்தினார்.
- 70 டன் எடை கொண்டதாக உருவாக்கப்படும் விண்வெளி நிலையத்தை அடுத்த ஆண்டு இறுதிக்குள் முழுமையாக கட்டமைக்க சீன விண்வெளி நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

## 5.2 சுகாதார அறிவியல் பற்றிய சமீபத்திய கண்டுபிடிப்புகள்

### கருப்பு பூஞ்சையை கொள்ளைத் தொற்றாக அறிவிக்க வேண்டும்

- கருப்புப் பூஞ்சை பாதிப்பை கண்காணிக்கப்பட வேண்டிய கொள்ளைத் தொற்றாக (எபிடெமிக்) அறிவிக்க வேண்டும் என்று அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.
- மியுகோர்மைகாஸிஸ் என்ற கருப்பு பூஞ்சை பரவும் நோய் சட்டம் 1897 கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- இந்த நோய்க்கும் கண் அறுவை சிகிச்சை நிபுணர்கள், சிறப்பு மருத்துவர்கள், பொது அறுவை சிகிச்சை நிபுணர்கள் கண்காணிப்பர்.

### ராணுவத்தினருக்கான மருத்துவ சேவை வலைதளம்

- ராணுவத்தினர், முன்னாள் ராணுவத்தினர் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு தொலைதூர மருத்துவ ஆலோசனை வசதிகளை அளிக்கும் வலைதளத்தை மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் காணொலி காட்சி மூலம் தொடக்கி வைத்தார்.
- ராணுவத்தினர், முன்னாள் ராணுவத்தினர் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு மின்னணு-சுகாதார உதவி மற்றும் தொலைதூர ஆலோசனை வழங்க https://sehatopd.in/ என்ற வலைதளம் தொடங்கப்பட்டுள்ளது. இதில் மேம்படுத்தப்பட்ட பல பாதுகாப்பு அம்சங்கள் உள்ளன. இந்த இணையதளத்திற்கான பரிசோதனை 2020-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடங்கியது. இதன் மூலம் ஏற்கனவே, 6,500 மருத்துவ ஆலோசனைகள் ராணுவ மருத்துவர்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

SeHAT-OPD தளம்

- பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் 'Services e-Health Assistance & Tele-consultation (SeHAT) OPD தளத்தை இராணுவத்தை சேர்ந்தவர்கள் மற்றும் மன்னாள் வீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தார் வீட்டிலிருந்தபடியே பயன்பெறும் வகையில் துவங்கி வைத்தார்.

### காய் விற்பனை: "நம்ம சென்னை" செயலி மூலம் தெரிந்து கொள்ளலாம்

- சென்னையில் காய் பழங்கள் விற்பனை செய்யப்படும் வியாபாரிகளின் விவரங்கள் குறித்து

"நம்ம சென்னை" செயலி மூலம் அறிந்து கொள்ள மாநகராட்சி ஏற்பாடு செய்துள்ளது.

- முழு பொதுமுடக்கம் காரணமாக சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களில் தடையின்றி காய், பழங்கள் கிடைக்கும் வகையில் 5,000–க்கும் மேற்பட்ட நடமாடும் அங்காடிகளை மாநகராட்சி ஏற்படுத்தி உள்ளது. இந்த அங்காடிகள் மூலம் 200 வார்டுகளிலும் காய், பழங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.
- காய், பழங்கள் விற்பனை செய்யப்படும் வியாபரியின் செல்லிடப்பேசி எண், எந்த வார்டுகளில் விற்பனை செய்ய அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது ஆகிய விவரங்கள் மாநகராட்சியின் www.chennaicorporation.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், இந்த வசதியை மேலும் அதிகப்படுத்தும் வகையில், நம்ம சென்னை செல்லிடப்பேசி செயலியில் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- இந்த செயலியை பதிவிறக்கம் செய்து அதில் lockdown essential supply என்ற பிரிவுக்குள் சென்றால் வார்டு வாரியாக காய், பழம் விற்பனை செய்யப்படுவோரின் பெயர் மற்றும் செல்லிடப்பேசி எண்களைத் தெரிந்து கொண்டு, தங்கள் பகுதிக்கு வரும் நேரத்தை தெரிந்து கொள்ளலாம் என மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

### IBF டிஜிட்டல் தளங்களை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடிவு செய்துள்ளது

- இந்திய ஒரிபரப்பு நிறுவனம் (IBF) டிஜிட்டல் தளங்களை தனது கட்டுபாட்டுக்குள் கொண்டு வர முடிவு செய்துள்ளது.
- இதனால் இதன் பெயர் இந்திய ஒளிபரப்பு மற்றும் டிஜிட்டல் நிறுவனம் (IBDF) என பெயர் மாற்றம் அடைய உள்ளது.
- இந்த IBDF நிறுவனம் டிஜிட்டல் OTT தளங்களுக்கான சுய கட்டுப்பாட்டுக்குழு ஒன்றையும் நிறுவ உள்ளது.
- அதன் பெயர் டிஜிட்டல் ஊடக உள்ளடக்க கட்டுப்பாட்டுக் குழு ஆகும்.

## 5.3 ஊடகம் மற்றும் தொலைதொடர்பு

### கோவின் வலைதளத்தில் பாதுகாப்புக்காக கூடுதல் அம்சம்

- கரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்வதற்காக முன்பதிவு செய்ய வகை செய்யும் கோவின் வலைதளத்தில் பாதுகாப்புக்காக கூடுதல் அம்சங்கள் புகுத்தப்பட்டுள்ளன.
- கரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ள விரும்புவோர், கோவின் வலைதளத்தில் முன்பதிவு செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. அந்த வலைதளத்தில் சுயவிவரங்களைப் பதிவு செய்து, தடுப்பூசி செலுத்திக் கொள்ள விரும்பும் மருத்துவமனையையும் தேதியையும் தேர்ந்தெடுக்க முடியும்.
- 45 வயதைக் கடந்தோர் கோவின் வலைதளத்தில் பதிவு செய்யாமல், நேரடியாகச் சென்றும் தடுப்பூசி செலுத்திக் கொள்ள முடியும். ஆனால் 18 முதல் 44 வயதுக்குற்பட்டோர் கோவின் வலைதளத்தில் பதிவு செய்ய வேண்டியது கட்டாயம் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- "மே 8–ஆம் தேதி முதல் கோவின் வலைதளத்தில் முன்பதிவு செய்வோருக்கு 4 இலக்க பாதுகாப்பு எண் குறுஞ்செய்தி வழியாக அனுப்பப்படும்.
- தடுப்பூசி செலுத்திக் கொள்வதற்கான முன்பதிவு ரசீதிலும் அந்த எண் இடம் பெற்றிருக்கும். தடுப்பூசி செலுத்திக் கொள்ளச் செல்லும் போது அந்த எண்ணை சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் தெரிவிக்க வேண்டியது கட்டாயமாகும். அதற்குப் பிறகுதான் கரோனா தடுப்பூசி செலுத்தப்படும்.
- இதன் மூலமாக, தடுப்பூசி செலுத்துபவர் பாதுகாப்பு எண்ணைக் குறிப்பிடும்போது சம்பந்தப்பட்ட நபரின் தகவல்கள் முறையாகப் பதிவு செய்யப்படும். கோவின் வலைதளத்தில் ஏற்படும் தவறுகள் குறைக்கப்படும். எனவே, கரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ள செல்வோர், முன்பதிவு ரசீதையோ பதிவு செய்த செல்லிடப்பேசியையோ உடன் எடுத்துச் செல்ல வேண்டும்.

### 4ஜி பதிவிறக்க வேகத்தில் ஜியோ முதலிடம்

- சென்ற ஏப்ரல் மாதத்தில் 4ஜி பதிவிறக்க வேகத்தில் 20.1 எம்பிபிஎஸ் உடன் ஜியோ

நிறுவனம் முதலிடத்தில் இருந்ததாக இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்காற்று ஆணையம் (டிராய்) தெரிவித்துள்ளது.

- சென்ற ஏப்ரல் மாதத்தில் 4ஜி தொழில்நுட்பத்தில் தரவுகளை பதிவிறக்கம் செய்வதில் ஜியோ நிறுவனம் 20.1 எம்பிபிஎஸ் வேகத்துடன் முதலிடத்தில் இருந்தது. இது, அடுத்த இடத்தில் உள்ள வோடஃபோன் நிறுவனத்துடனான வேகத்துடன் ஒப்பிடும்போது ஏறக்குறைய மூன்று மடங்கு அதிகம் என்பது கவனிக்கத்தக்கது.

## அமேசானின் மினி TV

- அமேசானின் நிறுவனம் வீடியோ ஸ்டீரிம்ங் வசதியுடன் மின் TV என்ற வசதியை துவங்கியுள்ளது.
- Prime Video என்ற வசதியுடன் அமேசான் செயலியில் இந்த வசதி நகைச்சுவை, தொழில்நுட்பம், உணவு, அழகு போன்ற வகைகளில் துவங்கப்பட்டுள்ளது.

## கோ–வின் வலைதளம்

- கரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ள பதிவு செய்வதற்கான "கோ–வின்" வலைதளம் அடுத்த வாரம் முதல் ஹிந்தி மற்றும் 14 மாநில மொழிகளில் செயல்பட உள்ளது என்று மத்திய சுகாதாரத் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "Simorgh' சூப்பர் கம்ப்யூட்டர்

- ஈரான் நாட்டின் தெஹிரான் அமிர்கபீர் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் Simorgh என்ற சூப்பர் கம்பியூட்டரை உருவாக்கியுள்ளது.

## புதிய தனியுரிமை கொள்கையை கைவிட வேண்டும்

- வாட்ஸ்ஆப் நிறுவனத்தின் புதிய தனியுரிமை கொள்கையை கைவிட வேண்டும் என்று அந்த நிறுவனத்துக்கு மத்திய அரசு சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- இது தொடர்பாக, 7 நாள்களுக்குள் நடவடிக்கை எடுக்கவில்லையெனில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய அரசு எச்சரித்துள்ளது.
- ஃபேஸ்புக் நிறுவனத்துக்குச் சொந்தமான வாட்ஸ்ஆப், தனது தனியுரிமை கொள்கைகளில் அண்மையில் மாற்றங்களைப் புகுத்தியது. அச்செயலியைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களின் தனியுரிமை தொடர்பான தகவல்களை ஃபேஸ்புக் உள்ளிட்ட உறுப்பு நிறுவனங்களுக்கு வணிக நோக்கில் விற்பனை செய்வது புதிய கொள்கையில் இடம் பெற்றுள்ள முக்கிய அம்சமாகும்.
- வாட்ஸ்ஆப் நிறுவனம் கொண்டு வந்திருக்கும் புதிய மாற்றங்கள், இந்திய குடிமக்களின் நலன் மற்றும் உரிமைகளை பாதிக்கும் வகையில் இருப்பதாகவும், பயனாளர்களின் விருப்பம், தகவல் பாதுகாப்பு, தகவல் பறிமாற்ற தனியுரிமையையும் கேள்விக்குறியாக்குவதாக அமைந்துள்ளதாக மத்திய அமைச்சகம் நம்புகிறது.
- இந்திய சட்டங்கள் மற்றும் விதிகளில் உள்ள பல்வேறு பிரிவுகளை இந்த புதிய கொள்கை மீறியிருப்பதையும் அமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.

## மிகப்பெரிய சர்வதேச அளவிலான கடல்சார் கேபிள் அமைப்பு

- இந்திய தொலைத்தொடர்பு நிறுவனமான ரிலையன்ஸ், ஜியோ சர்வதேச கடல்சார் கேபிள் அமைப்பை உருவாக்கியுள்ளது.
- இரண்டு புதிய தலைமுறை கேபிள் அமைப்பை அமைக்க ஆசியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் முழுவதிற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

## HIT COVID–செயலி

- பீகார் முதல்வர் நிதிஷ்குமார் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள கோவிட் நோயாளிகளைான கண்காணிப்பதற்காக HIT COVID செயலியை துவக்கி வைத்துள்ளார்.
- பீகார் மாநில மின்னணு மேம்பாடு கழகத்தால் இந்த செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

# 6 தினசரி தேசிய நிகழ்வு



## அறிவுசார் சொத்துரிமை கட்டுபாடுகளை நீக்கும் இந்தியாவின் கோரிக்கை: 100 அமெரிக்க எம். பி.க்கள் ஆதரவு

- கரோனா தடுப்பூசிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்ய நாடுகளை அனுமதிக்கும் வகையில் அவற்றுக்கான அறிவுசார் சொத்துரிமை (டிஆர்ஐபிஎஸ்) கட்டுபாடுகளை தற்காலிகமாக நீக்குமாறு உலக வர்த்தக அமைப்பிடம் (டபிள்யு. டி.ஓ) இந்தியா அளித்திருக்கும் பரிந்துரைக்கு அமெரிக்கா ஆதரவு தெரிவித்துள்ளது.
- கரோனா தடுப்பூசி மற்றும் மருந்துகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டைப் போக்க பல்வேறு நடவடிக்கைகளை இந்தியா எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக உலக வர்த்தக அமைப்புக்கு இந்த கோரிக்கையை இந்தியா முன்வைத்துள்ளது. இந்த டிஆர்ஐபிஎஸ் கட்டுபாடுகள் நீக்கப்படுவதன் மூலம், சர்வதேச வர்த்தக ஒப்புதல்கள் பெறாமல் நாடுகளும், உற்பத்தி நிறுவனங்களும் தடுப்பூசியை உற்பத்தி செய்வதற்கு தொழில்நுட்பத்தை பகிர்ந்து கொள்ளவும், நேரடியாகப் பயன்படுத்தவும் முடியும்.

TRIPS Agreement (TRIPS ஒப்பந்தம்)

- கையெழுத்தானது – 15 ஏப்ரல் 1994
- TRIPS – Trade-Related Aspects of Intellectual Property Rights.
- முன்னிலை – உலக வர்த்தக அமைப்பு
- வர்த்தகம் தொடர்பான அறிவுசார் சொத்துரிமை ஒப்பந்தம்

## புவிசார் குறியீடு : மட்டிவாழை

- கன்னியாகுமரியில் விளையும் மட்டி வாழைக்கு புவிசார் குறியீடு கேட்டு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரி வாழை மற்றும் பழவிவசாயிகள் உற்பத்தி நிறுவனத்தின் சார்பில் இந்த விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

புவிசார் குறியீடு

- 1999ம் ஆண்டு புவிசார் குறியீடு சரக்குகள் பதிவு மற்றும் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.
- மத்திய வர்த்தக மற்றும் தொழிற்சாலை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தொழிற்சாலை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டு துறை இதை வழங்குகிறது.
- 2004–2005ம் ஆண்டில் டார்ஜிலிங் தேயிலைக்கு முதல் புவிசார் குறியீடு இந்தியாவில் வழங்கப்பட்டது.
- கர்நாடகா 47 பொருட்கள், தமிழ்நாடு 39 பொருட்கள் புவிசார் குறியீடு பெற்றுள்ளது.

## ஏழைக் குடும்பங்களுக்கு 2 மாதங்களுக்கு இலவச ரேஷன் பொருள்கள்

- பிரதமரின் ஏழைகள் நல உதவித் திட்டத்தின் கீழ் ஏழைக் குடும்பங்களுக்கு 2 மாதங்களுக்கு ரேஷன் உணவுப் பொருள்களை இலவசமாக வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ஐடிபிஐ வங்கி பங்கு விற்பனைக்கு ஒப்புதல்: ஐடிபிஐயின் பங்குகளை விற்பனை செய்வதற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. பிரதமர் மோடி தலைமையில் பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. அதில், நிகழாண்டு பட்ஜெட்டில் அறிவித்தபடி, ஐடிபிஐயின் பங்குகளை விற்பனை செய்வறதற்கும் நிர்வாக கட்டுப்பாட்டை மாற்றுவதற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

## இந்தியாவின் முதல் இராணுவ சூரிய மின்னுற்பத்தி நிலையம்

- சிக்கிம் மாநிலத்தில் இந்திய இராணுவம் தனது முதல் சூரியஒளி மின்னுற்பத்தி நிலையத்தை துவங்கியுள்ளது.

வெற்றி I.A.S. கல்வி மையம்

- 16000 அடி உயரத்தில் இந்த நிலையம் 56KV திறனுடன் துவக்கப்பட்டுள்ளது.

## மழைநீரை சேமிக்க காடுகளில் குளங்கள்: ஹிமாச்சல பிரதேசம்

- "பர்வத்தார்" திட்டத்தின் கீழ் ஹிமாச்சல பிரதேச மாநிலத்தில் காடுகளில் குளங்கள் வெட்டுதலின் மூலம் மழைநீரை சேமிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.
- பிலால்பூர், ஹமிர்பூர், ஜோகிந்தர் நகர், நசான், பார்வதி, நுர்பூர், ராஜ்கர், நலாகர், தியோக், டல்ஹவுசி போன்ற வனப்பரப்புகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

## எஃகு குழாய்கள் மீதான குவிப்புத் தடுப்பு வரி நீட்டிப்பு

- வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் எஃகால் ஆன குழாய்கள் மீது விதிக்கப்படும் மிகை குவிப்பு தடுப்பு வரியை அக்டோபர் வரை மத்திய அரசு நீட்டித்துள்ளது.
- இரும்பு, எஃகு உள்ளிட்ட உலோகங்களால் செய்யப்பட்ட குழாய்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. அதனால் உள்ளூர் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக அப்பொருள்களின் இறக்குமதி மீது மிகைகுவிப்பு தடுப்பு வரி கடந்த 2016–ஆம் ஆண்டு விதிக்கப்பட்டது.
- 5 ஆண்டுகளுக்கு விதிக்கப்பட அந்த வரியானது மே மாதத்துடன் நிறைவடைகிறது. இந்நிலையில், மிகைகுவிப்பு தடுப்பு வரியை அக்டோபர் வரை நீட்டித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக மத்திய மறைமுக–சுங்க வரிகள் வாரியம் வெளியிட்ட, அறிக்கையில் இரும்பு, எஃகு குழாய்களின் இறக்குமதி மீது விதிக்கப்பட்டு வரும் மிகைகுவிப்பு தடுப்பு வரி அக்டோபர் 31–ஆம் தேதி வரை தொடர்ந்து அமலில் இருக்கும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஹவுசாலா மிஷன்

- உத்திரகாண்ட் மாநிலத்தில் கோவிட்–19 நோயாளிகள் உரிய நேரத்தில் மருத்துவ வசதிகள் மற்றும் ஆக்ஸிஜன் படுக்கைகள் பெற அம்மாநில காவல்துறை ஹவுசாலா என்ற திட்டத்தை துவங்கியுள்ளது.

### சுற்றுச்சூழல் உணர் மண்டலம் – நடுவட்டம்

- உதகமண்டலம் முக்குருதி தேசிய பூங்காவை ஒட்டியுள்ள சுற்றுச்சூழல் உணர்மண்டலம் நடுவட்டம் பகுதியில் பாதிப்புகள் ஏற்படுவதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளது.
- நடுவட்டம் மிகுந்த அதிக அளவிலான உள்நாட்டு உயிரினங்கள் வாழும் பகுதியான முக்குருதி தேசிய பூங்காவுடன் இணைந்தது.

## அறிவுசார் சொத்துரிமை கட்டுப்பாடுகளை நீக்குவதில் ஒருமித்த கருத்து அவசியம்

- கரோனா தீவிர பாதிப்பை திறம்பட கையாளவும், தடுப்பூசிகளுக்கான மூலப் பொருள்கள் மற்றும் அதற்கான தொழில்நுட்ப பரிமாற்றம் விரைந்து நடைபெறும் வகையில் அவற்றுக்கான அறிவுசார் சொத்துரிமை கட்டுப்பாடுகளை தற்காலிகமாக நீக்க வேண்டும் என்று உலக வர்த்தக அமைப்பிடம் (டபிள்யூ.டி.ஓ) முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரை மீது உலக நாடுகள் விரைந்து ஒருமித்த கருத்தை எட்டுவது அவசியம் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.
- இதுகுறித்து உலக பொருளாதார அமைப்பின் சர்வதேச வர்த்தக கண்ணோட்டம் சார்ந்த கருத்தரங்கில் பங்கேற்ற மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் பேசியதாவது:
- கரோனாவை எதிர்கொள்ள இந்தியா சமர்ப்பித்திருக்கும் பரிந்துரையில் மருந்துகள், தடுப்பூசிகள் மற்றும் அது சார்ந்த உள்கட்டமைப்பு வசதிகளும் தடையின்றி கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதும் உள்ளடங்கியுள்ளது. உலக வர்த்தக அமைப்பில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த பரிந்துரைக்கு உலக நாடுகள் ஒருமித்த ஆதரவை அளிக்கும் என நம்புகிறோம்.

### உலக வர்த்தக மையம்

- துவக்கம் – 1995
- தலைமையிடம் – ஜெனீவா, சுவிட்சர்லாந்து
- தலைவர் – கோசி ஒகோன்ஜோ இவலா

## குறைந்தபட்ச ஆதரவு விலையில் கோதுமை கொள்முதல் 35% அதிகரிப்பு

- நடப்பு ராபி பருவத்தில் குறைந்தபட்ச ஆதரவு விலையில் கோதுமை கொள்முதல் கடந்தாண்டை விட 35 சதவீதம் அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- 2021–22ம் ஆண்டு ராபி பருவத்தில், வட மாநிலங்களில் கோதுமை கொள்முதல் நடைபெற்று வருகிறது.
- கடந்த 10–ஆம் தேதி வரை 341.77 லட்சம் மெட்ரிக் டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கடந்தாண்டு இதே காலகட்டத்தில் 252.51 லட்சம் மெட்ரிக் டன் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது. ராபி கொள்முதல் மூலம் சுமால் 34.57 லட்சம் விவசாயிகள் குறைந்தபட்ச ஆதரவு விலையாக ரூ.67,499.98 கோடி பெற்றுள்ளனர்.

## ரூ.18,100 கோடியில் "ஏசிசி" பேட்டரி உற்பத்தி

- உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக, ரூ.18,100 கோடி மதிப்பிலான உற்பத்தி சார்ந்த ஊக்குவிப்பு திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- தில்லியில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பிறகு, இதுகுறித்து மத்திய தகவல்– ஒலிபரப்புத் தறை அமைச்சர் பிரகாஷ் ஜாவடேகர், செய்தியாளர்களிடம் கூறியதாவது:
- ஏசிசிவகை பேட்டரி(அட்வான்ஸ்டு கெமிஸ்ட்ரிசெல்) என்பது அதிநவீன வகை பேட்டரியாகும். இதில், மின்சக்தியை ரசாயன சக்தியாக மாற்றி சேமித்து வைத்து பின்னர் மீண்டும் மின் சக்தியாக மாற்றிக் கொள்ள முடியும். இந்த வகை பேட்டரிகளின் தேவையை தற்சமயம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்தே பூர்த்தி செய்து வருகிறோம். எனவே, உள்நாட்டிலேயே இந்த வகை பேட்டரி உற்பத்தியை ஊக்குவிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

## பி.1.617 உருமாற்ற கரோனா வைரஸ் இந்திய வகையை சேர்ந்ததா?

- பி.1.617 எனும் உருமாற்றம் அடைந்த கரோனா வைரஸ் இந்திய வகையைச் சேர்ந்தது என்று உலக சுகாதார அமைப்பின் அறிக்கையில் எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. இது தவறான தகவல் என்று மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.
- பி.1.617 வகை உருமாற்ற கரோனா வைரஸ் இந்தியாவில் கடந்த அக்டோபர் மாதம் முதன்முதலில் கண்டறியப்பட்டது. இந்தியாவில் கரோனா வைரஸ் முதல் அலையை விட இரண்டாவது அலை வேகமாகப் பரவுவதற்கு இந்த வகை வைரஸ்தான் காரணம் என தகவல் வெளியானது. இந்த வைரஸ் உலக அளவில் பரவியுள்ளதாக உலக சுகாதார அமைப்பு அண்மையில் தெரிவித்தது. ஆனால் இந்த வைரஸை, இந்தியாவில் உருவானது என்று தெரிவித்து சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
- இந்நிலையில் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், "பி.1.617 வகை உருமாற்ற கரோனா வைரஸை உலக அளவில் கவலைக்குரியதாக உலக சுகாதார அமைப்பு வகைப்படுத்தியுள்ள செய்தியை பல்வேறு ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. இவற்றில் சில செய்திகளில் பி.1.617 வகை வைரஸை, இந்திய வகை வைரஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு கூறுவதற்கு எவ்வித அடிப்படை ஆதாரமும் இல்லை. உலக சுகாதார அமைப்பின் 32 பக்க அறிக்கையில் எந்த இடத்திலும் 'இந்திய வகை வைரஸ்' என்று குறிப்பிடப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் அந்த அறிக்கையில் குறிப்பிட்ட விஷயத்தில் இந்திய என்ற வார்த்தையே பயன்படுத்தப்படவில்லை" என்று கூறியுள்ளது.

**உலக சுகாதார அமைப்பு**

- இதுபோல், உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசிய அலுவலகம் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், "வைரஸ்கள் அல்லது அதன் வகைகளை, முதலில் கண்டறியப்பட்ட நாடுகளின் பெயர்களுடன் உலக சுகாதார அமைப்பு அடையாளப்படுத்தியதில்லை. அறிவியல் பெயர்களுடன் தான் நாங்கள் அவற்றை அடையாளப்படுத்துகிறோம். இதை அனைவரும் பின்பற்ற வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்" என்று கூறப்பட்டுள்ளது.

## புதுச்சேரி ஹர் கர் ஜல் மாநிலம்

- ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் 100% குடும்பங்களுக்க குழாய் வழி நீர் வசதி செய்யப்பட்டுள்ள மாநிலமாக புதுச்சேரி உருவாகியுள்ளது.
- கோவா, தெலுங்கானா, அந்தமான் & நிக்கோபார் தீவுகள் ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் இந்த சாதனையை அடைந்துள்ளது.

**ஜல் ஜீவன் மிஷன்**

- துவக்கம் – 2019 (ஜல் சக்தி அமைச்சகம்)
- 2024க்குள் அனைத்து குடும்பங்களுக்கும் குழாய் வழி குடிநீர் வசதியை உறுதி செய்வதை நோக்கமாக கொண்டது.

## 2027ம் ஆண்டிற்குள் உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடு இந்தியா

- ஐக்கிய நாடுகளின் சமீபத்திய அறிக்கையின்படி உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடான சீனாவை இந்தியா 2027ம் ஆண்டிற்குள் விஞ்சிவிடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேசிய மூங்கில் திட்டம்: தகவல் மேலாண்மை துவக்கம்

- உள்ளூர் ஊதுபத்தி தொழிலை வலுப்படுத்த தேசிய மூங்கில் திட்டம் சமீபத்தில் தகவல் மேம்பாட்டு அமைப்பை துவங்கியுள்ளது.

**தகவல் மேலாண்மை அமைப்பு:**

- ஊதுபத்தி தொழிலுக்கான மூலப்பொருள் தேவை, கையிருப்பு மற்றும் உற்பத்தி திறன், உற்பத்தி வெளியீடு போன்றவற்றை கண்காணித்து தகவல்களை அளிக்கிறது.
- தேவைக்கும் உற்பத்திக்கும் இடையேயான இடைவெளி குறைக்கப்பட்டு விற்பனையை ஊக்குவிக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**தேசிய மூங்கில் திட்டம்:**

- 2018–19ல் துவங்கப்பட்டு, 21 இந்திய மாநிலங்களில் செயல்படுத்தப்படுகிறது.
- பின் மூங்கில்: தமிழ்நாடு வேளாண் ஆராய்ச்சி மையத்தால் உருவாக்கப்பட்டது.

## பஞ்சாபில் 23வது மாவட்டம் மலேர்கோட்லா

- பஞ்சாப் முதல்வர் அம்ரீந்தர் சிங் அம்மாநிலத்தின் 23வது மாவட்டமாக மலேர்கோட்லா வை அறிவித்துள்ளார்.

## சிக்கிம் மாநில தினம்

- 1975ம் ஆண்டில் இந்திய அரசுடன் சிக்கிம் இணைந்த நாளான மே 16 மாநில தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.
- 1950–ல் ஏற்படுத்தப்பட்ட சிக்கிம் ஒப்பந்தத்தின் படி 1975வது இந்தியா சிக்கிமின் பாதுகாப்பாளராக இருந்து வந்தது.
- 1975 அங்கிருந்த நம்கியால் அரசகுடும்ப ஆட்சியின் முடிவுக்கு பின்னர் இந்தியாவின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.
- இந்தியாவின் 100% ஆர்கானிக் விளைவிக்கப்படும் மாநிலம் சிக்கிம்.
- கஞ்சன் சங்கா தேசிய பூங்கா, தீஸ்தா நதி போன்றவை பாய்கிறது.

## சிந்தடிக் கனன்பினாய்ட்

- உலகின் முதல் நாடாக சீனா சிந்தடிக் கன்னாபினாய்ட்டிற்கு தடை விதித்துள்ளது.
- இதன்மூலம் போதை பொருள் கடத்தல் உற்பத்தி, கடத்தலை தடுக்க திட்டமிட்டுள்ளது.
- நடாஷா எனப்படும் இந்த கன்னபினாய்ட் பூஞ்சைகளிலிருந்து பெறப்படுகிறது.

## 6,000 ரயில் நிலையங்களில் இலவச வைஃபை

- நாடு முழுவதும் ரயில் நிலையங்களில் இலவசமாக இணைய வசதி அளிப்பதற்கான வைஃபை சேவை திட்டம் 6,000 ரயில் நிலையங்கள் என்ற மைல்கல்லை எட்டியுள்ளது. முன்னதாக, கடந்த 2016–ஆம் ஆண்டு மும்பை ரயில் நிலையத்தில் இத்திட்டம் தொடங்கப்பட்டது.
- இது தொடர்பாக ரயில்வே நிர்வாகம் கூறியிருப்பதாவது: மத்திய அரசின் "டிஜிட்டல் இந்தியா" திட்டத்தின் ஒரு பகுதியாக ரயில் நிலையங்களில் இலவச வைஃபை திட்டம் தொடங்கப்பட்டது. ரயில்டெல் நிறுவனம் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- கூகுள், டாடா அறக்கட்டளை ஆகியவை பின்னர் இத்திட்டத்தில் இணைந்தன. இதன் மூலம் நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் முக்கியமாக கிராமப்புற மக்களுக்கும் இணையதள சேவையைக் கொண்டு செல்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

## ஜல் ஜீவன் திட்டம்: 15 மாநிலங்களுக்கு முதல் தவணையாக ரூ.5,968 கோடி விடுவிப்பு

- ஜல் ஜீவன் திட்டத்தை அமல்படுத்துவதற்காக 15 மாநிலங்களுக்கான முதல் தவணையாக ரூ.5,968 கோடியை மத்திய அரசு விடுவித்துள்ளது.

- ஊரக பகுதிகளில் குடிநீர் குழாய் இணைப்பை உறுதி செய்யும் வகையில் 2021–22 காலகட்டத்தில் ரூ.1 லட்சம் கோடிக்கும் அதிகமான தொகையை முதலீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. "ஹர் கர் ஜல்" திட்டத்தின் இலக்கை எட்டும் வகையில் இது போன்ற முதலீடு அடுத்த 3 ஆண்டுகளும் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது" என்று கூறப்பட்டுள்ளது.
- குடிநீர் விநியோகத்துக்கான அடிப்படை கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும், 5 சதவீதம் அது சார்ந்த இணை நடவடிக்கைகளுக்கும், 2 சதவீத நீரின் தரத்தை உறுதி செய்தல்.

## ஆயுஷ் சர் தவார்

- வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள வர்களுக்கு யோகா பயிற்சி அளிப்பவர்களுக்காக ஹிமாச்சல பிரதேசம் அரசு ஆயுஷ் கர் தவார் என்ற திட்டத்தை துவங்கியுள்ளது.
- ஹிமாச்சல பிரதேச ஆயுஷ் துறையால் துவங்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் வேளாண் ஏற்றுமதி வசதி மையம் – புனே

- மராத்தா தொழில்துறை மற்றும் வேளாண் கூட்டமைவு இந்தியாவில் முதல் வேளாண் ஏற்றுமதி வசதி மையத்தை துவங்கியுள்ளது.
- இந்த மையம் நபார்டு கூட்டமைவுடன் துவங்கப்பட்டுள்ளது.
- வேளாண் உற்பத்தியாளர்கள் தங்கள் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான வசதி மற்றும் வாய்ப்புகளை வழங்கும் வகையில் இந்த மையம் அமைக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச சேனிலில் "இந்திய கதை"

- சர்வதேச சேனலில் இந்தியாவின் பார்வையில் என்ற திட்டத்தை கொண்ட நிகழ்வை துவங்கி உள்ளது.
- இந்நிகழ்வு விருப்பத்தின் வெளிப்பாடு (EOI) என்ற பெயரில் விண்ணப்பங்களை வரவேற்கின்றது.

## யுனெஸ்கோ பாரம்பரிய பட்டியலில் 6 இந்திய பகுதிகள்

- வாரணாசி, கங்கைகரை, காஞ்சிபுரம் கோவில், சாத்புரா புலிகள் காப்பகம், மத்திய பிரதேசம் ஆகியவை வங்காள பழங்கற்கால பகுதிகள், கர்நாடகாவின் பெடாகட் பகுதிகள் நர்மதா சமவெளி போன்றவை சேர்க்கப்பட்டுள்ளன.

## 'விவசாயிகளின் நலன் கருதி டிஏபி உர மானியம் அதிகரிப்பு"

- சர்வதேச சந்தையில் உரத்தின் விலை உயர்ந்துள்ளதால், இந்த விலையேற்றத்தால் விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்க டிஏபி உரம் மீதான மானியத்தை மத்திய அரசு உயர்த்தியது என்று மத்திய வேளாண் துறை அமைச்சரன் நரேந்தர் சிங் தோமர் தெரிவித்தார்.
- 50 கிலோ டிஏபி உரம் ரூ.1,200–இல் இருந்து ரூ.1,900–ஆக அதிகரித்துள்ளது. இந்நிலையில் டிஏபி உரத்தின் மீதான மானியத்தை ரூ.500–இல் இருந்து ரூ.1,200–ஆக உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

## திபெத் நெடுஞ்சாலை திட்டத்தை முடித்துள்ள: சீனா

- பிரம்மபுத்திரா நதியை ஒட்டி திபெத் பகுதியில் நெடுஞ்சாலை அமைக்கும் பணியை சீன அரசு செயல்படுத்தி முடித்துள்ளது.
- பிரம்மபுத்திர பள்ளத்தாக்கில் உலகின் மிக ஆழமான பகுதியில் இந்த சாலை அமைக்கப்பட்டுள்ளது.
- யார்லங் சாங்போ (பிரம்மபுத்திரா நதியின் சீன பெயர்) நதிக்கரையை ஒட்டி அருணாச்சால பிரதேச மாநிலத்தின் எலைக்கோட்டு அருகே இந்த சாலை அமைக்கப்பட்டுள்ளது.

## EY குறியீடு இந்தியா 3வது இடம்

- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களிலிருந்து பெரிய அளவிலான ஆற்றல் பெறக்கூடிய வரிசையிலான நாடுகளின் பட்டியலில் EY குறியீட்டில் இந்தியா 3ம் இடம் பெற்றுள்ளது.
- சென்ற ஆண்டில் 4வது இடம் பெற்றிருந்தது அமெரிக்கா முதலிடத்திலும், சீனா 2வது இடத்திலும் உள்ளது. 2030க்குள் இந்தியாவில் 450 GW மின்சாரம் புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்து பெற திட்டமிடப்பட்டுள்ளது.

## ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் கர்நாடகம்

- ஆயஷ்மான் பாரத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய மாநிலங்களுள் கர்நாடகா முதலிடத்தில் உள்ளது.
- மாநிலம் முழுவதும் சுகாதார மையங்கள் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

- ஆரம்ப சுகாதார நிலைய மையங்கள் 3300 க்கும் மேல் மேம்படுத்தப்பட்டுள்ளது.

ஆயுஷ்மான் பாரத்

- 2018 செப்டம்பர்–25ல் துவங்கப்பட்டது.
- தேசிய சுகாதார பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய திட்டம் துவங்கப்பட்டது.

## கரோனா தொற்று நெருக்கடியிலும் முன்னணி வளரும் சக்தியாக இந்தியா விளங்குகிறது

- இந்தியாவின் கரோனா நெருக்கடி குறித்து எழும் விமர்சனங்கள் குறித்தும் இந்திய அரசியல் பொருளாதார சூழல் குறித்தும் அமெரிக்க வெளியுறவுக் கொள்கை நிபுணர் டாக்டர் ஜான் சி ஹல்ஸ்மன் அறிக்கை வெளியிட்டுள்ளார். இதை சவுதியில் வெளிவரும் அரபு செய்தியியல் நிறுவனம் வெளியிட்டுள்ளது.
- அதில், "இந்தியாவில் கரோனா 2–ம் அலை தீவிரமாக அதிகரித்து அச்சுறுத்தி வருகிறது. ஊரடங்கு நடவடிக்கைகள் காரணமாக பொருளாதார சிக்கல்கள் மீண்டும் தொடங்கி இருக்கின்றன. ஆனால் அத்தனை நெருக்கடிக்கு மத்தியிலும் இந்தியாவின் அடிப்படை அம்சங்கள் வலுவாக இருப்பதால், உலக நாடுகளுக்கு மத்தியில் முன்னணி வளரும் சக்தியாக உருவெடுக்கும்.
- மேலும் இத்தனை சவால்களுக்கு இடையிலும் பிரதமர் மோடி மற்றும் பாஜகவின் அரசியல் அதிகார கூட்டமைப்பு நிலைத்தன்மையுடன் இருக்கிறது.
- வரும் 2024ம் ஆண்டில் சீனாவைப் பின்னுக்குத் தள்ளி உலகின் மிகவும் பிரபலமான நாடாக இந்தியா உருவெடுக்கும். 25 வயதுக்குக் கீழ் உள்ளவர்கள் 50 சதவீதத்துக்கும் மேல் உள்ளனர். மனிதவளம் சார்ந்த இந்த அம்சம் இந்தியாவின் வளர்ச்சிக்கு பெரும் உதவியாக இருக்கும்" என கூறியுள்ளார்.

## ஒடிசா பழங்குடியினரை காப்பதற்கான திட்டம்

- கோவிட்–19 ஆல் மிகுந்த பாதிப்பிற்குள்ளாகி இருப்பவர்களை எண்ணிக்கை அதிகரிப்பதால், ஒடிசாவின் மிகுந்த பாதிப்பிற்குள்ளான பழங்குடி இனமான டோங்ரி மற்றும் கோண்ட் மக்களுக்கு பாதுகாப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது.

## கோட்டாக் மஹிந்திரா வங்கியின் முதல் வெளிநாட்டு துறை முதலீட்டாளர் உரிமம்

- வெளிநாட்டு துறை முதலீடுகளுக்கான முதல் இந்திய உரிமத்தை கோட்டக் மஹிந்த்ரா வங்கி வெளியிட்டுள்ளது.
- GIFT IFSC மாற்று முதலீட்டு நிதி என்று வெளியிடப்பட்டுள்ள முதல் உரிமம் இதுவாகும்.
- கோட்டாக் மஹிந்த்ரா வங்கியுடன் இணைந்து பீகான் குளோபல் நிறுவனம் இந்த உரிமத்தை வெளியிட்டுள்ளது.

## நிறுவனங்கள் விவகாரத்துறை அமைச்சகத்தில் புதிய மின்னணு வசதி

- மத்திய நிறுவனங்கள் விவகாரத்துறை அமைச்சகத்தின் மாற்றியமைக்கப்பட்ட வலைதளம், புதிய மின்னஞ்சல் சேவைகள் உள்ளிட்ட புதிய மின்னணு வசதிகளை நிதித்துறை இணையமைச்சர் அனுராக் சிங் தாக்குர் காணொலி முறையில் தொடங்கி வைத்தார்.
- இந்தியா பொருளாதார சக்தி மையமாக மாற வேண்டும் என்ற பிரதமரின் கனவை நனவாக்க, பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை நாம் அதிகரிக்க வேண்டும்.

## அமைச்சர் ஜெய்சங்கரின் பயணம் நல்லுறவை மேம்படுத்தும் அமெரிக்கா நம்பிக்கை

- அமைச்சர் ஜெய்சங்கர் அமெரிக்கா சென்றடைந்தார். அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளிங்கனை அவர் சந்தித்துப் பேசவுள்ளார்.
- இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் அத்துமீறலைத் தடுக்கும் நோக்கில் ஜப்பான், ஆஸ்திரேலியா, அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகள் இணைந்து நாற்கரக் கூட்டமைப்பை அமைத்துள்ளன.
- அமெரிக்கா சென்றுள்ள வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், ஐ.நா.பொதுச் செயலர் அன்டோனியா குட்டெரெஸை சந்தித்துப் பேசினார்.
- சிறந்த விவாதங்கள்: அமெரிக்காவைச் சென்றடைந்த அமைச்சர் ஜெய்சங்கர், ஐ.நா. வுக்கான இந்தியத் தூதர் டி.எஸ்.திருமூர்த்தியை

சந்தித்துப் பேசினார். ஐ.நா.வுக்கான இந்திய அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

- அதையடுத்து சுட்டுரையில் பதிவிட்ட அமைச்சர் ஜெய்சங்கர், ஐ.நா.வில் சிறந்த விவாதங்களை முன்னெடுப்பதற்கு இந்தியா தொடர்ந்து வழிகோலும் என்று குறிப்பிட்டார்.

## இந்தியா–நியூஸிலாந்து வெளியுறவு அதிகாரிகள் பேச்சு

- இந்தியா, நியூஸிலாந்து இடையே நடந்த ஆய்வுக் கூட்டத்தில் பல்வேறு முக்கிய துறைகளில் இருதரப்பு உறவை மேலும் மேம்படுத்த முடிவு செய்யப்பட்டது.
- இது தொடர்பாக, வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:
- இந்தியா–நியூஸிலாந்து வெளியுறவு அமைச்சக அதிகாரிகள் நிலையிலான ஆய்வுக் கூட்டம் காணொலி முறையில் நடைபெற்றது. இந்தியா சார்பில் வெளியுறவு அமைச்சகத்தின் கிழக்கு பிராந்திய செயலர் ரிவா கங்குலி தாஸ் தலைமையிலான குழுவினரும், நியூஸிலாந்து சார்பில் ஆசிய, அமெரிக்க நாடுகளுக்கான துணைச் செயலர் மார்க்சின்சிலார் தலைமையிலான குழுவினரும் கலந்து கொண்டனர்.

## பயங்கரவாதத்தை ஒழிக்க உலக நாடுகள் முன்வர வேண்டும்

- பயங்கரவாதம் மற்றும் அடிப்படைவாதத்தை ஒழிப்பதற்கு மனிதநேயத்தில் நம்பிக்கை வைத்திருக்கும் உலக நாடுகள் ஒன்றிணைய வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.
- புத்த பூர்ணிமாவையொட்டி நடைபெற்ற சர்வதேச விசாக விழாவில் பிரதமர் நரேந்திர மோடி காணாலி முறையில் கலந்துகொண்டு பேசினார். விழாவில், நேபாளம், இலங்கை நாடுகளின் பிரதமர்கள், சர்வதேச பௌத்த கூட்டமைப்பின் செயலர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## '30.54 கோடி டன் உணவு தானியங்கள் 2021–22 நிதியாண்டில் விளைவிக்கப்படும்"

- 2021–22ம் ஆண்டுக்கான முக்கிய வேளாண், கூட்டுறவு மற்றும் விவசாயிகள் நலத்துறை வெளியிட்டுள்ளது. அதன்படி, உணவு தானியங்களில் மொத்த விளைச்சல் சாதனை அளவாக 30.54 கோடி மில்லியன் டன்களாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இது குறித்து பேசிய மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சர் நரேந்திர சிங் தோமர், "இந்த நேர்மறை அறிகுறி நமது விவசாய சகோதர, சகோதரிகளின் ஓய்வற்ற உழைப்பின் பலனாகும். வேளாண் விஞ்ஞானிகளின் பங்களிப்பு, இந்திய அரசின் கொள்கைகள் மற்றும் மாநில அரசுகளின் ஒருங்கிணைப்பும், ஒத்துழைப்பும் இதற்கு காரணமாக அமைந்துள்ளது. நரேந்திர மோடியின் கவனம் வேளாண் துறையின் வளர்ச்சியின் மீதே உள்ளது" என்றார்.

## SAMVEDNA குழந்தைகளுக்கான மனநல ஆலோசனை தளம்

- குழந்தைகள் உரிமை பாதுகாப்பு தேசிய ஆணையம் கோவிட்–19 காலத்தில் பாதிப்படைந்த குழந்தைகளின் மனநல ஆலோசனை வழங்குவதற்காக SAMVEDNA என்ற தொலைத் தொடர்பு வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- SAMVEDNA – Sensitising Action on Mental Health Vulnerability through Emotional Development and Necessary Acceptance.
- கொரானாவால் பாதிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ள குழந்தைகளின் மனநலன் சார்ந்த குறைகளை போக்குவதற்காக இந்த தளம் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

## பொறியியல் படிப்புகளை இனி தமிழ் உள்ளிட்ட 8 மொழிகளில் படிக்கலாம்

- பொறியியல் படிப்புகளை தமிழ் உள்பட 8 மொழிகளில் படிக்க தமிழ் உள்பட 8 மொழிகளில் படிக்க அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கவுன்சில் (ஏஐசிடிஇ) ஒப்புதல் வழங்கியுள்ளது.
- 2010 முதல் அண்ணா பல்கலைக்கழக கல்லூரிகளில் மட்டும், சிவில், மெக்கானிக்கல் ஆகிய பாடப்பிரிவுகளில் தலா 900 இடங்களில், தமிழ் பயிற்று மொழி வகுப்புகளை தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் மொத்தம் 1,800 இடங்கள் கூடுதலாகக் கிடைக்கும்" என தெரிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இருப்பினும் பொறியியல் பாடநூல்கள் தமிழில் கிடைக்கப் பெறாததால் தமிழக மாணவர்கள் மத்தியில் அந்தப் படிப்புகளுக்கு வரவேற்பு கிடைக்கவில்லை.

- இந்நிலையில், அகில இந்திய தொழில்நுட்பக் கவுன்சில் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. வரும் கல்வியாண்டு முதல் பொறியியல் பாடங்களை தமிழ், மலையாளம், கன்னடம், மராத்தி, ஹிந்தி, குஜராத்தி, வங்க மொழி, தெலுங்கு ஆகிய மொழிகளில் படிக்கலாம் என்று தெரிவித்துள்ளது. மேலும், பொறியியல் பாடங்களை மாநில மொழிகளில் மொழி மாற்றவும் ஏஜசிடி திட்டமிட்டுள்ளது.

## ரூ.79,000 கோடிக்கு கோதுமை கொள்முதல் செய்து சாதனை

- நடப்புச் சந்தை ஆண்டில் குறைந்தபட்ச ஆதரவு விலை அடிப்படையில் சாதனை அளவாக 400.45 லட்சம் டன் கோதுமையை ரூ.79,088 கோடிக்கு கொள்முதல் செய்ததாக மத்திய அரசு தெரிவித்தது.
- புதிய வேளாண் சட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து விவசாயிகள் 6 மாதங்களுக்கும் மேலாகப் போராடி வரும் நிலையில், இத்தகைய நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.
- இது தொடர்பாக மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:
- நடப்பு ராபி சந்தைப் பருவத்தில் (2021-22) உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், பிகார், ராஜஸ்தான், குஜராத், ஹிமாச்சல பிரதேசம், ஜம்மு காஷ்மீர் மாநிலங்களில் கோதுமை கொள்முதலானது குறைந்தபட்ச ஆதரவு விலையின் குறைந்தபட்ச ஆதரவு விலையின் அடிப்படையில் சுமூகமாக நடைபெறுகிறது. கடந்த 27-ஆம் தேதி வரை மொத்தம் 400.45 லட்சம் டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இதே கால அளவில் 353.09 லட்சம் டன் கொள்முதல் செய்யப்பட்டிருந்தது.

## கரோனா: பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு ரூ.10 லட்சம்

- கரோனா தொற்றால் பெற்றோரை இழந்த குழந்தைகளின் பள்ளி படிப்புச் செலவை பிஎம் கேர்ஸ் நிதி மூலம் அரசே ஏற்கும் என்று தெரிவித்த பிரதமர் மோடி, அவர்களுக்கு ரூ.10 லட்சம் வைப்பு நிதியாக செலுத்தப்படும் என்றார்.
- கரோனா தொற்றால் பெற்றோரில் ஒருவரை அல்லது இருவரையுமோ, சட்டரீதியிலான பாதுகாவலர், தத்தெடுத்தவர்கள் ஆகியோரை இழந்த குழந்தைகளுக்கு 18 வயதாகும்போது ரூ.10 லட்சம் வைப்பு நிதியாக அளிக்கப்படும்.
- இதில் இருந்து அடுத்து ஐந்து ஆண்டுகள் அவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகையாக கிடைக்கும். இதை அவர்களின் மேற்படிப்புக்காக பயன்படுத்தி கொள்ளலாம். அவர்களுக்கு 23 வயதாகும் போது மொத்த தொகையையும் அவர்களின் படிப்பு அல்லது சொந்த தேவைக்காக எடுத்துக் கொள்ளலாம்.
- இது போன்ற குழந்தைகளுக்கு ஆதரவு அளித்து அவர்களின் வருங்காலம் நன்றாக அமைய உதவ வேண்டியது நமது கடமை.
- பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வீட்டருகே இருக்கும் கேந்திரிய வித்யாலயா அல்லது தனியார் பள்ளியில் சேர்க்கை அளிக்கப்படும்.
- 11-18 வயதுடைய குழந்தைகளுக்கு சைனிக் பள்ளி, நவோதயா பள்ளி போன்ற மத்திய அரசின் உறைவிடப் பள்ளிகளில் சேர்க்கை அளிக்கப்படும்.

## விமானப் போக்குவரத்துத் துறைக்கு அவசரகால கடன் உறுதித் திட்டம் நீட்டிப்பு

- கரோனா தொற்று பரவல் காரணமாக பாதிக்கப்பட்ட துறைகளை மீட்டெடுக்கும் நோக்கில் அமல்படுத்தப்பட்டு வரும் அவசரகால கடன் உறுதித் திட்டம் விமானப் போக்குவரத்துத் துறைக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.
- கடந்த ஆண்டில் கரோனா தொற்று பரவல் தொடங்கிய பிறகு, பொது முடக்கத்தால் பாதிக்கப்பட்ட தொழில் துறைகள் மீண்டும் வளர்ச்சி காண்பதற்கு உதவும் வகையில் கடந்த ஆண்டு மே மாதத்தில் அவசர கால கடன் உறுதித் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தியது.
- கடந்த மார்ச் மாதம் மறுசீரமைப்பு செய்யப்பட்ட அத்திட்டத்தில் போக்குவரத்து, சுற்றுலா, விளையாட்டு உள்ளிட்ட துறைகள் இணைக்கப்பட்டன. இந்நிலையில், விமானப் போக்குவரத்துத் துறைக்கும் அவசரகால கடன் உறுதித் திட்டம் நீட்டிக்கப்படுவதாக மத்திய நிதியமைச்சகம் அறிவித்தது.

# 7 சர்வதேச நிகழ்வு



## இந்தியா–ரஷ்யா 2+2 கூட்டம்

- இந்தியாவின் வெளியுறவு மற்றும் பாதுகாப்பு அமைச்சர்கள் மற்றும் ரஷ்யாவின் வெளியுறவு, பாதுகாப்பு அமைச்சர்கள் பங்கு பெறும் 2+2 கூட்டமைவில் இணைந்துள்ளது.
- இந்தியாவுடன் இதுபோன்ற அமைவில் இணையும் 4வது நாடு ரஷ்யா ஆகும்.
- ஏற்கனேவே அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா நாடுகளுடன் இந்த 2+2 கூட்டமைவுகளில் இந்தியா பங்கு பெறுகிறது.

## OPEC

- இந்தியாவில் கடந்த இருபது ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு பெட்ரோலிய எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்யும் கச்சா எண்ணெய் அளவு குறைந்துள்ளது.
- இந்தியா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளிடமிருந்து பெறும் எண்ணெய் அளவை அதிகரித்துள்ளதே இதற்கு உதாரணமாகும்.
- OPEC – Organization of the Petroleum Exporting Countries.

### பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைவு

- பாக்தாத் மாநாட்டில் 1960ல் தோற்றுவிக்கப்பட்டது. (ஈரான், ஈராக், குவைத், சவுதி அரேபியா, வெனிசுலா)
- தலைமையிடம் – வியன்னா, ஆஸ்திரியா
- 2019ல் இதில் 14 நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன.
- Iran, Iraq, Kuwait, United Arab Emirates (UAE), Saudi Arabia, Algeria, Libya, Nigeria, Gabon, Equatorial Guinea, Republic of Congo, Angola, Ecuador and Venezuela.

## அமெரிக்க வெளியுறவு அமைச்சருடன் எஸ்.ஜெய்சங்கர் சந்திப்பு

- இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளிங்கன்.
- பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் பிரீத்தி படேலை இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் சந்தித்துப் பேசினார்.
- ஜி7 மாநாட்டின் ஒரு பகுதியாக, ஐரோப்பிய யூனியன் வெளியுறவு கொள்கை உயர் பிதிநிதி ஜோசப் போரெல் ஃபான்டெலஸ்.

## ஐ.நா. தலைவரின் இந்திய பயணம் ஒத்திவைப்பு

- ஐ.நா. பொது சபை தலைவர் வால்கன் போஸ்கிர் இம்மாதம் இந்தியா வரவிருந்த நிலையில், நாட்டில் நிலவும் கரோனா சூழல் காரணமாக அவரின் பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## இந்திய – இங்கிலாந்து பிரதமர்களின் 2030 ஒப்பந்தம்

- இந்திய பிரதமர் மற்றும் இங்கிலாந்து பிரதமரின் காணொலி காட்சி வழியிலான சந்திப்பில் 2030ஆம் ஆண்டிற்கான கூட்டமைப்பை வலுப்படுத்தும் உத்திகளை மேம்படுத்துவதற்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.
- 10 ஆண்டுகளுக்கான இந்த ஒப்பந்தம் மூலம் வர்த்தக ரீதியிலான 1 பில்லியன் அளவிற்கான செயல்பாடுகளை ஊக்குவித்தல் இரு நாடுகளுக்கிடையிலான வெளியீட்டு ஒப்பந்தங்களை மேம்படுத்தல் போன்ற செயல்பாடுகளை ஊக்குவிக்க தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

வெற்றி I.A.S. கல்வி மையம்

## ஸ்புட்னிக் லைட்

- ரஷ்யா ஒரே தவணையாக செலுத்தும் ஸ்புட்னிக் லைட் கோவிட் தடுப்பு மருந்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. ரஷ்யா நேரடி முதலீட்டு நிதி (RDIF) இந்த திட்டத்திற்கு ஒப்புதலும் மக்களுக்கு எதிர்ப்பு சக்தியளிக்கவும் இதை வழங்குவதாக அறிவித்துள்ளது. ஸ்புட்னிக் லைட் 79.4% திறனுடனும், ஸ்புட்னிக் V 92% திறனுடனும் செயல்படுகிறது.

## வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க இந்தியா–ஐரோப்பிய யூனியன் திட்டம்

- சுமார் 8 ஆண்டுகளுக்கு முன் தடைப்பட்ட வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்குவதற்கு இந்தியாவும் ஐரோப்பிய யூனியன் அமைப்பும் திட்டமிட்டுள்ளது.
- இந்தியாவுக்கும் 27 நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய யூனியன் அமைப்புக்கும் இடையேயான மாநாடு வரும் 8–ஆம் தேதி காணொலி வாயிலாக நடைபெறுகிறது. இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். 27 ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளும் பங்கேற்க உள்ளனர்.
- இந்தியாவுக்கு ஐரோப்பிய யூனியனில் இடம்பெற்றுள்ள நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகத்தை அதிகரிக்கும் நோக்கில் வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்குப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்தன.

## உலகின் மிகநீளமான நடைபாலம் –போர்ச்சுகல்

- உலகின் மிக நீளமான நடைபாலம் போர்ச்சுகலில் திறக்கப்பட்டு உள்ளதாக யுனெஸ்கோ தெரிவித்துள்ளது.
- இதன் பெயர் "அரௌகா".
- இந்த பாலத்தின் நீளம் 1700 அடி நீளமுடையது பைவரி நதியின் மீது இந்த பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

## இந்தியா–பிரான்ஸ்–ஆஸ்திரேலியா முத்தரப்பு முதல் கூட்டம்

- இந்தியா–பிரான்ஸ்–ஆஸ்திரேலியாவின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் இலண்டனில் நடைபெற்றது.
- G7 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு சமீபத்தில் இலண்டனில் நடைபெற்றது.

G7–நாடுகள்

- கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், இங்கிலாந்து, அமெரிக்கா
- இந்திய வெளியுறவு அமைச்சர் – ஜெய்சங்கர்
- பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் – ஜுன் யுவெஸ்
- ஆஸ்திரேலியா – செனடர் மாரிஸ் பேனி

## நம்பிக்கை வாக்கெடுப்பில் நேபாள பிரதமர் தோல்வி

- நேபாள நாடாளுமன்றத்தின் கீழவையான பிரதிநிதிகள் அவையில் பிரதமர் சர்மா ஒலி அரசு மீது நடத்தப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பு தோல்வியடைந்தது. அதையடுத்து, அரசமைப்புச் சட்டத்தின்படி பிரதமர் பதவியிலிருந்து சர்மா ஒலி விடுவிக்கப்பட்டுள்ளார்.
- சர்மா ஒலியின் நேபாள கம்யூனிஸ்ட்–லெனினிஸ்ட்) கட்சியும், முன்னாள் பிரதமர் புஷ்ப கமல் தாஹாலின் (பிரசண்டா) நேபாள கம்யூனிஸ்ட் (மாவோயிஸ்ட்) கட்சியும் ஒருங்கிணைந்து கடந்த 2017–ஆம் ஆண்டிலிருந்து ஆட்சி புரிந்து வந்தன.

## ஜான்சன் & ஜான்சன் கரோனா தடுப்பூசி: இந்தியாவில் கூட்டுத் தயாரிப்பில் ஈடுபட அமெரிக்கா ஆலோசனை

- இந்தியாவில் ஜான்சன் & ஜான்சன் கரோனா தடுப்பூசியை கூட்டாகத் தயாரிப்பது குறித்து ஆராய்ந்து வருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.
- இது தொடர்பாக தில்லியில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரி டேனியல் பி.ஸ்மித் செய்தியாளர்களிடம் கூறியது: இந்தியாவில் ஜான்சன் & ஜான்சன் நிறுவன கரோனா தடுப்பூசியை தயாரிக்க உதவிடும் விதமாக எவ்வாறு முதலீடு செய்வது என்பது குறித்து அமெரிக்காவின் டிஎஃப்சி வளர்ச்சி வங்கி ஆராய்ந்து வருகிறது. தடுப்பூசி தயாரிப்பு, அதற்கான உரிமம் பெறுவதில் உதவ தன்னால் முடிந்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பதில் அமெரிக்க அரசு உறுதியாக உள்ளது.
- இந்தியாவில் சீரம் நிறுவனத்தால் எந்த அளவு கரோனா தடுப்பூசிகள் தயாரிக்கப்படுகின்றன என்பது குறித்து அமெரிக்கா உன்னிப்பாக கவனித்து வருகிறது. தடுப்பூசி உற்பத்திக்கு தேவைப்படும் எந்தெந்த மூலப்பொருள்களை வழங்க முடியும், என்னென்ன உதவிகளை செய்ய முடியும் என்பதை அறிவதற்கு அந்த நிறுவனத்துடன் அமெரிக்க அதிகாரிகள் நெருங்கிய தொடர்பில் இருந்து வருகின்றனர்.

## இந்தியா–சுவிட்சர்லாந்து 4வது நிதிக் கூட்டம்

- மெய்நிகர் முறையில் இந்திய பொருளாதார செயலாளர் அஜய் சேத் மற்றும் ஸ்விஸ் அதிகாரி டேனியலா ஸ்டோடால் ஆகியோர் பங்கேற்றனர்.
- இங்கு G20, IMF வரிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

## சுற்றுச்சூழல் பாதிப்பிற்கு உள்ளாகும் உலகின் 100 நகரங்கள்

- சுற்றுச்சூழல் ஆராய்ச்சி நிறுவனமான வெரிஸ்க் மாப்ள் கிராப்ட் உலக அளவில் சுற்றுச்சூழல் அபாயத்திற்கு உள்ளாக கூடிய 100 நகரங்கள் பட்டியலிட்டுள்ளது.
- இதில் 99 நகரங்கள் ஆசியாவில் அமைந்துள்ளது. புற நகரங்கள் இந்தியாவிலும், 37 நகரங்கள் சீனாவிலும் பட்டியலிடப்பட்டுள்ளது.
- சீனா உலகின் முதல் மற்றும் இந்தியா 3வது பெரிய பசுமை இல்ல வாயு வெளியேற்றும் நாடுகளாகும்.

## கோவிட்–19 6–18 மாதங்கள் நெருக்கடியானவை

- உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி சௌமியா சுவாமிநாதன் கோவிட்–19 இன்னும் 6–18 மாதங்களுக்கு மிகவும் நெருக்கடியை கொடுக்கும் என்று தெரிவித்தார்.

## கொழும்பு துறைமுக நகர ஆணைய மசோதா அரசமைப்புச் சட்டத்துக்கு முரணானது

- கொழும்பு துறைமுக நகர ஆணைய மசோதா, இலங்கையின் அரசமைப்புச் சட்டத்துக்கு உள்பட்டதாக இல்லை என்று அந்நாட்டு உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. இந்த தகவலை இலங்கை நாடாளுமன்றத்தில் அவைத் தலைவர் மகிந்தா பையா அபயவர்தன் தெரிவித்தார்.
- கடந்த சில ஆண்டுகளில் இலங்கையில் சீன அரசின் கடனுதவியுடன் சுமார் ரூ.55,000 கோடி மதிப்பிலான உள்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக, கொழும்பு துறைமுகத்தையொட்டி ரூ.10,228 கோடியில் நகரம் ஒன்றை சீனா உருவாக்கியுள்ளது. இந்த நகரை நிர்வகிப்பதற்காக, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைய மசோதாவை இலங்கை அரசு உருவாக்கியுள்ளது.
- இந்த மசோதாவை எதிர்த்து எதிர்க்கட்சிகள், பல்வேறு தன்னார்வ அமைப்புகள் உச்சநீதிமன்றத்தில் 18 மனுக்கள் தாக்கல் செய்தன.
- இலங்கை இறையாண்மைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் இந்த மசோதா உள்ளது. இலங்கையில் சீன காலனியை உருவாக்க வழி வகுக்கும் இந்த மசோதா மீது பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களுடன் மசோதா நிறைவேற்றப்பட வேண்டும் என்று அந்த மனுக்களில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. மசோதா மீதான விசாரணையை உச்சநீதிமன்றம் கடந்த ஏப்ரல் 23–ஆம் தேதி நிறைவு செய்து, தீர்ப்பை ஒத்திவைத்திருந்தது.

## உக்ரைன் சுகாதாரத் துறை அமைச்சரை பதவி நீக்கம் செய்தது நாடாளுமன்றம்

- உக்ரைனில் தடுப்பூசி நடவடிக்கைகள் மந்தகதியில் இருப்பதாகக் கூறி அந்நாட்டு சுகாதாரத் துறை அமைச்சர் மேக்சிம் ஸ்டெபானோவ் பதவிநீக்கம் செய்யப்பட்டார். நாடாளமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பின் அடிப்படையில் அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

## ரஷிய குழாய் எரிவாயு திட்டத்துக்கு அமெரிக்கா அனுமதி: ஜெர்மனி வரவேற்பு

- வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பான நேட்டோவில் ரஷிய எரிவாயுத்திட்ட ஒப்பந்தத்தை ரஷியாவுடன் இணைந்து ஜெர்மனி மேற்கொண்டுள்ளது. இதைத் தொடர்ந்து, ரஷியாவிலிருந்து ஜெர்மனிக்கு எரிவாயு கொண்டு வருவதற்காக "நாட்ஸ்டிரீம் 2ஏஜி' என்ற திட்டத்தின் கீழ் குழாய்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- இந்தத் திட்டத்துக்கு அமெரிக்கா கடந்த 10 ஆண்டுகளாக எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இந்தத் திட்டம் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொள்கைகளுக்கு எதிரானது என்றும், இது அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் தீங்கு விளைவிக்கும் திட்டம் என்றும் அமெரிக்கா குற்றம்சாட்டி, கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தது.
- இந்த எதிர்ப்புக்கிடையே, குழாய் பதிக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. இந்தச் சூழலில், குழாய் எரிவாயு திட்டத்துக்கு எதிரான தடைகளை நீக்க ஜோ பைடன் நிர்வாகம் முன் வந்திருப்பது தெரியவந்துள்ளது.

## நிதி அமைச்சகம் மாநாட்டு மையங்களுக்கு கட்டுமான அந்தஸ்து வழங்கியுள்ளது

- அருங்காட்சியகம் மற்றும் மாநாடுகள் நடைபெறும் மையங்களுக்கு மத்திய நிதி அமைச்சகம் கட்டுமான அந்தஸ்து வழங்கியுள்ளது. இதன் மூலம் வங்கிகளின் நிதி சேவைகள் எளிமையாகும்.
- இந்த பட்டியலின் துணை அமைப்புகள் மூலம் வங்கி சார்ந்த செயல்பாடுகளுக்கு மிகவும் எளிதாக அமையும் செயலில் இந்த அந்தஸ்து வழங்கப்படுகிறது.

## அண்டார்டிகாவில் இருந்து பிரிந்தது உலகின் மிகப்பெரிய பனிப்பாறை

- உலகின் மிகப்பெரிய பனிப்பாறை அண்டார்டிகா பனிப் பிரதேசத்திலிருந்து பிரிந்து கடலில் மிதக்கத் தொடங்கியிருப்பதாக ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- அந்த மையம் வெளியிட்டுள்ள தகவல்படி, "ஏ–76" என்று பெயரிடப்பட்டுள்ள அந்தப் பனிப்பாறை, புது தில்லியைவிட 3 மடங்கு பெரியது என்று தெரியவந்துள்ளது. தில்லியின் பரப்பரளவு 1,484 சதுர கிலோ மீட்டர்களாக உள்ள நிலையில், இந்தப் பனிப்பாறை சுமார் 4,320 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகும்.
- 170 கி.மீ. நீளமும், 25 கி.மீ. அகலமும் கொண்டுள்ள அந்தப் பனிப்பறை தற்போது அண்டார்டிகா பனிப் பிரதேசத்திலிருந்து பிரிந்து அந்தப் பகுதியிலுள்ள வெடல் என்ற கடலில் மிதக்கத் தொடங்கியுள்ளது.
- ஏ–76 பனிப்பறை அண்டார்டிகா பனிப் பிரதேசத்தின் "ரோனி" என்ற பரப்பிலிருந்து பிரிந்து கடலில் மிதக்கத் தொடங்கியிருப்பதை பிரிட்டன் அண்டார்டிகா ஆய்வு மையம் கண்டறிந்ததாகவும், அதை அமெரிக்காவின் தேசிய பனிப் பிரதேச மையம் உறுதி செய்துள்ளதாகவும் ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ரோனி உள்பட பல்வேறு பனிப் பரப்புகள் இணைந்ததே அண்டார்டிகா நிலப் பகுதியாகும்.

## ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் இந்தியா 2வது மிகப்பெரிய காப்பீட்டு தொழில்நுட்ப சந்தை

- S & P குளோபல் மார்கெட் இன்டலிஜன்ஸ் தரவுகளின்படி ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் 3.66 பில்லியன் சந்தை மதிப்புடன் இந்தியா காப்பீட்டு தொழில்நுட்ப பிரிவில் இரண்டாமிடத்தில் உள்ளது.
- சீனாவும், இந்தியாவும் இணைந்து இந்த பகுதியில் 50%க்கும் மேற்பட்ட சந்தை மதிப்பை கொண்டுள்ளன.

## ஆசிய அமெரிக்கர்கள் மீதான வன்முறை தடுப்புச் சட்டத்துக்கு ஒப்புதல்

- ஆசிய அமெரிக்கர்கள் மீதான வன்முறையைத் தடுக்கும் மசோதாவில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கையெழுத்திட்டார். இதையடுத்து இந்த மசோதா சட்டமாகி உள்ளது.
- இந்தச் சட்டம் அமெரிக்காவின் மனதையும், மூளையையும் மாற்ற உதவும். அமெரிக்காவில் வெறுப்புணர்வுக்கு எந்த இடமும் இல்லை.

## பிரிக்ஸ் வானியியல் செயற்குழு

- பிரிக்ஸ் கூட்டமைவு உறுப்பு நாடுகள் இணைந்து பிராந்திய ரீதியிலான வானியியல் தகவல் வலையமைப்பை உருவாக்குவதற்காக திட்டமிட்டுள்ளது.
- அறிவியல் தொழில்நுட்ப மற்றும் கண்டுபிடிப்புகள் பிரிக்ஸ் 2021 ல் 7வது கூட்டத்திற்கு இந்தியா தலைமை தாங்கி உள்ளது.
- 5 பிரிக்ஸ் நாடுகள் உட்பட 50 மேற்பட்ட உறுப்பு நாடுகள் இதில் பங்கேற்றன.
- Inter–University Centre for Astronomy and Astrophysics (IUCAA) என்ற அமைப்பை புனேவில் ஒருங்கிணைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- 2021ம் ஆண்டிற்கான அனைத்து பிரிக்ஸ் கூட்டத்திற்கும் இந்தியா தலைமை தாங்க உள்ளது.

## பிரிட்டனில் டிஜிட்டல் விசா: உள்துறை அமைச்சர்

- பிரிட்டனில் குடியேறுவோர், அங்கிருந்து இடம் பெயர்வோரின் எண்ணிக்கையை துல்லியமாக கணக்கிட அமெரிக்க பாணியில் டிஜிட்டல் நுழைவு இசைவுகளை (விசா) வழங்கும் முறையை அமல்படுத்தவுள்ளதாக அந்நாட்டின் உள்துறை அமைச்சர் ப்ரீத்தி படேல் தெரிவித்தார்.

## சிரியா அதிபராக அசாத் 4–ஆவது முறையாக தேர்வு

- சிரியா அதிபராக பஷார் அல் அசாத் 4–வது முறையாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

# 8 தமிழ்நாடு



## புதுவையில் மலிவு விலையில் மதிய உணவு வழங்கும் திட்டம் தொடக்கம்

- கரோனா பாதிப்பு அதிகரித்து வருவதையொட்டி, புதுவையில் அரசின் பாண்லே பாலகங்கள் மூலம் மலிவு விலையில் மதிய உணவு வழங்கும் திட்டத்தை துணைநிலை ஆளுநர் (பொ) தமிழிசை சௌந்தரராஜன் தொடக்கி வைத்தார்.
- புதுவையில் கரோனா பரவலைத் தடுக்கவும், மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும் அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. அதன்படி, மாநிலத்தில் முகக் கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ள நிலையில், ஏழை மக்களின் பொருளதாரச் சுமையைக் குறைக்கும் வகையில், அரசின் பாண்லே கூட்டுறவு பாலகங்கள் மூலமாக ரூ.10–க்கு கிருமி நாசினி புட்டிகளும் விற்பனை செய்யப்படுகின்றன.
- இதன் தொடர்ச்சியாக, கரோனா சிகிச்சை மருத்துவமனையாகச் செயல்படும் புதுச்சேரி இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் ரூ.10–க்கு மதிய உணவு வழங்கும் திட்டம் பரிசோதனை அடிப்படையில் தொடங்கப்பட்டது.
- இந்த நிலையில், அரசின் பாண்லே பாலகங்கள் மூலம் ரூ.5–க்க சுகாதாரமான மதிய உணவு வழங்கும் திட்டத்தின் தொடக்க நிகழ்ச்சி, புதுச்சேரி கதிர்காமம் இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரியில் அமைந்துள்ள பாண்லே பாலகத்தில் நடைபெற்றது.

## காவிரி–வைகை–குண்டாறு நதிகள் இணைப்புத் திட்டம் துரிதப்படுத்தப்படுமா?

- காவிரியின் நீர்பிடிப்புப் பகுதியின் பலத்த மழை பெய்யும் காலங்களில், கர்நாடகாவின் கபினி உள்ளிட்ட அணைகள் நிரம்பி வழிகின்றபோது மட்டுமே காவிரி ஆற்றில் பல லட்சம் கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. மழை இல்லாத காலங்களில் ஆறு பெரும்பாலும் வறண்டே காணப்படுகிறது.
- மழை பெய்யும்போது வெளியேற்றப்படும் தண்ணீரை சேமிக்க தமிழகத்தில் மேட்டூர் அணையைத் தவிர பெரிய அளவிலான நீர்த்தேக்கம் இல்லை. மேலும் சமவெளியைக் கொண்ட தமிழகத்தில் பெரிய அளவிலான நீர்த்தேக்கம் கட்ட இயலாததால் ஆண்டுக்கு சுமார் 300–350 டிஎம்சி வரை கடலில் கலந்து வீணாகும் நீரை சேமிக்கும் வகையிலும், அந்த நீரை வாய்க்கால் மூலம் திசை திருப்பி அவற்றை தென் தமிழகப் பகுதிகள் வறட்சியில் இருந்து மீளவும் கடந்த 2008–இல் அப்போதைய முதல்வர் கலைஞர் கருணாநிதியால் உருவாக்கப்பட்டது. தான் காவிரி–வைகை–குண்டாறு நதிகள் இணைப்புத் திட்டம்.
- இந்த திட்டம் இரு திட்டங்களாக உருவாக்கப்பட்டது. முதல் திட்டமாக கதவணைக்கட்டுவது, இரண்டாவது திட்டமாக கதவணையில் இருந்து வாய்க்கால் வெட்டி நதிகளை இணைப்பது என திட்டம் தீட்டப்பட்டது.

## ஆக்சிஜன் வாகனம் நன்கொடை

- கரோனா தொற்றால் தீவிரமாகப் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு முதலுதவி அளிக்கும் வகையில், சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவமனைக்கு ஆக்சிஜன் வசதியுள்ள வாகனங்களை வழங்கிய ஜெயின் வர்த்தகக் கூட்டமைப்பினர்.

## 41 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் பொதுப்பணித் துறை இரண்டாகப் பிரிப்பு

- தமிழகத்தில் 41 ஆண்டுகளுக்குப் பிறகு பொதுப்பணித்துறை மீண்டும் பிரிக்கப்பட்டுள்ளது.
- நீர்வள ஆதாரத் துறை தனியாகவும், பொதுப்பணியின் கட்டடங்கள் துறை வேறாகவும்

வெற்றி I.A.S. கல்வி மையம்

பிரிக்கப்பட்டு, அந்தத் துறைகளுக்கு முறையே துரைமுருகனும், எ.வ.வேலுவும் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

- தமிழகத்தில் மிகவும் பழைமையான பாரம்பரியத் துறையாக இருக்கும் பொதுப்பணித்துறைக்கு 163 ஆண்டு கால வரலாறு உள்ளது. 1858–ஆம் ஆண்டு மெட்ராஸ் பொதுப்பணித்துறை என பெயர் பெற்று விளங்கியது. இந்தப் பெயர் வைப்பதற்கு முன்பாகவே பொதுப்பணித்துறை செயல்படத் தொடங்கியது.

## அமைச்சகங்கள், துறைகளின் பெயர்கள் மாற்றம்

- நீர்வளத் துறை: தமிழகத்தின் நீர்த்தேவையை நிறைவு செய்யும் பொருட்டு உண்டாக்கப்படும் தனி அமைச்சகம் "நீர்வளத் துறை" என்று அழைக்கப்படும். இத்துறை தமிழகத்தில் தங்குதடையின்றி உழவர்களுக்கு நீர் கிடைப்பதற்கும், நிலத்தடி நீரை விருத்தி செய்வதற்கும், நீர்நிலைகளைத் தூர்வாரி பராமரிப்பதற்கும், அவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கும் முக்கியத் துறையாகச் செயல்படும். மற்ற துறைகளை ஒருங்கிணைக்கும் மையப்புள்ளியாக இது இருக்கும்.
- வேளாண்மைத் துறை என்கிற அமைச்சகம் "வேளாண்மை–உழவர் நலத்துறை" என்று பெயர் மாற்றம் செய்யப்படுகிறது. இந்த அரசின் நோக்கம் சாகுபடியைப் பெருக்குவது மட்டும் அல்ல. நெற்றி வியர்வையை நிலத்தில் சிந்தி நெற்கதிர்களை அறுவடை செய்யும் உழவர்களுடைய தொலைநோக்குப் பார்வையையும், திட்டங்களையும் உள்ளடக்கியதாக இத்துறை செயல்படும்.
- சுற்றுச்சூழல் துறை என்கிற அமைச்சகம் "சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றத்துறை" என்று பெயர்மாற்றம் செய்யப்படுகிறது.
- காலநிலை மாற்றத்தினால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் தொடர்பான எச்சரிக்கைகளையும், ஆயத்த நடவடிக்கைகளையும், விழிப்புணர்வு பரப்புரைகளையும், கட்டமைப்புகளையும் இந்த அமைச்சகம் செயல்படுத்தும்.
- மக்கள் நல்வாழ்வுத் துறை என்பது மருத்துவத்தையும் உள்ளடக்கியது என்பதாலும், சுகாதாரம் என்பது துப்புரவை மட்டுமே குறிப்பது என்பதாலும் அத்துறைக்குப் பரந்துபட்ட நோக்கத்திலும் "மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத் துறை" என்று பெயர் சூட்டப்படுகிறது.
- மீனவர் நலத்துறை: மீனவர்கள் நலமில்லாமல் மீன்வளத்தைப் பெருக்கி பயனில்லை என்பதாலும், மீனவர்களுடைய நல வாழ்விற்கான திட்டங்களை வடிவமைத்துச் செயல்படுத்த வேண்டும் என்கிற அடிப்படையாலும் மீன்வளத்துறை "மீன்வளம் –மீனவர் நலத்துறை" என்று அழைக்கப்படுகிறது.

## கரோனா முதல் கட்ட நிவாரணம் ரூ.2,000

- கரோனா நிவாரணத் தொகை 2 தவணைகளாக தலா ரூ.2,000. செலவு: ரூ.4,153.39 கோடி, பயனாளிகள்: 2 கோடியே 7 லட்சத்து 67 ஆயிரம் பேர். இந்த மாதமே முதல் தவணை கிடைக்கும்.
- தமிழக முதல்வராகப் பதவியேற்றுக் கொண்ட மு.க.ஸ்டாலின், தலைமைச் செயலகத்தில் பொறுப்புகளை ஏற்றார். கரோனா நிவாரணம் தொகை வழங்குவது உள்பட ஐந்து முக்கியத் திட்டங்களில் கையெழுத்திட்டார்.
- ஆவின் பால் விலை லிட்டருக்கு ரூ.3 வீதம் குறைத்து, வரும் 16–ஆம் தேதி முதல் விற்பனை செய்யப்படும்.
- தமிழகம் முழுவதும் உள்ள அரசுப் போக்குவரத்துக் கழக சாதாரணக் கட்டண நகரப் பேருந்துகளில் மே 8 முதல் கட்டணம் இல்லாமல் பயணிக்காலாம். பணிபுரியும் மகளிர், உயர்கல்வி பயிலும் மாணவியர் உள்ளிட்ட அனைத்து மகளிரும் கட்டணம் இல்லாமலும், பேருந்துப் பயண அட்டை இல்லாமலும் பயணம் செய்யலாம்.
- "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" என்ற திட்டத்தைச் செயல்படுத்த ஒரு புதிய துறை உருவாக்கப்படும். இந்தத் துறையை உருவாக்கி அதற்கு ஐ.ஏ.எஸ். நிலையிலான அலுவலர் ஒருவர் நியமிக்கப்படுவார். இதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒப்புதல் அளித்துள்ளார்.
- முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், அனைத்து வகையான கரோனா நோய் சிகிச்சை செலவுகளையும் தனியார் மருத்துவமனைகளுக்கு அரசு வழங்கும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

## மருத்துவமனை படுக்கை விவரங்களை இணையத்தில் அறியலாம்: தமிழக அரசு

- தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கரோனா சிகிச்சைக்கான காலிப்படுக்கைகளின் விவரங்களை இணையதளத்தின் (www.tncovidbeds.tnega.org)

மூலம் அறியலாம். பிராண வாயு வசதியில்லாத சாதாரண படுக்கைகள், பிராண வாயு வசதியுடன் கூடிய தீவிர சிகிச்சைப் பிரிவு சாராத படுக்கைகள், தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள படுக்கைகள் ஆகியவற்றின் நிலவரங்களை பொது மக்கள் அறிந்து கொள்ளலாம் என்று தமிழக அரசு தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

## ஒருங்கிணைந்த கரோனா கட்டளை மையம்: 5 ஐஏஎஸ் அதிகாரிகள் நியமனம்

- கரோனா பேரிடர் சூழலை எதிர்கொள்வதற்காக அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டளை மையத்தை நிர்வகிக்க 5 ஐஏஎஸ் அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- மையமானது கரோனா சிகிச்சை அளித்து வரும் தனியார் மருத்துவமனைகளையும், பிற அரசு துறைகளையும் ஒருங்கிணைந்து சிகிச்சைக்கான கட்டமைப்பை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அதுமட்டுமல்லாது அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் படுக்கை வசதி மற்றும் ஆக்சிஜன் தேவைகளை நிர்வகிப்பதற்கான அதிகார அமைப்பாகவும் இது செயல்படும்.

## எதிர்க்கட்சித் தலைவராக எடப்பாடி கே.பழனிசாமி தேர்வு

- சென்னையில் நடைபெற்ற அதிமுக எம். எல்.ஏ.க்கள் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவராக எடப்பாடி கே.பழனிசாமி தேர்வு செய்யப்பட்டார்.

## தனியார் மருத்துவமனைகளில் முதல்வர் காப்பீட்டில் கரோனா சிகிச்சை

- முதல்வர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவதற்கான அரசாணை வெளியிடப்பட்டது. அதன்படி மருத்துவக் காப்பீடு வைத்துள்ளவர்கள் அதனை தனியார் மருத்துவமனைகளில் கரோனா சிகிச்சைக்காகப் பயன்படுத்தலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- அதே வேளையில், தனியார் மருத்துவமனைகளில் வசூலிக்கப்படும் அதீத கட்டணங்கள் முழுவதையும் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பெற இயலாது. மாறாக அரசு நிர்ணயித்துள்ள கட்டண வரம்புக்குட்பட்டே காப்பீட்டு பலன்களை பெற முடியும் எனவும் சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## ஸ்டெர்லைட் சம்பவம்

- ஸ்டெர்லைட் வன்முறை குறித்த இடைக்கால அறிக்கையை சமர்ப்பித்தார். அரசால் அமைக்கப்பட்ட விசாரணை ஆணையத்தின் தலைவர் நீதிபதி அருணா ஜெகதீசன்.

## படுக்கை நிலவரம் பற்றிய அறிய

- தற்போதைய மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகள் இருப்பு நிலவரத்தை https://tncovidbeds.tnega.org இணையதளத்தைப் பார்த்து தெரிந்து கொள்ளலாம் அல்லது 104 எண்ணை அழைத்து விபரம் அறியலாம். இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை அப்போதைய நிலவரம் பதிவேற்றம் செய்யப்படுகிறது. மேலும் கூடுதல் விபரம் அறிந்து கொள்ள மருத்துவமனையை தொலைபேசியில் அழைக்கலாம். மருத்துவமனையின் தொலைபேசி எண் மற்றும் கூகுள் வரைபட இருப்பிட விபரங்கள் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

**தொலைபேசி வழியாகவே ஒரு மருத்துவரின் ஆலோசனை உங்களுக்கு தேவைப்படுகிறதா?**

- https://esanjeevaniopd.in என்ற இணையதளம் வாயிலாக தொலைபேசி மூலம் இலவச மருத்துவ ஆலோசனை பெறலாம். தமிழ்நாடு அரசால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மருத்துவ குழுவிலிருந்து ஒரு மருத்துவர் உங்களுக்குத் தேவையான மருத்துவ ஆலோசனையை வழங்குவார். இந்த வசதி முற்றிலும் இலவசமாக தினமும் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை வாரம் முழுவதும் வழங்கப்படுகிறது.

**தடுப்பூசி பற்றி நீங்கள் அறிந்து கொள்ள**

- உங்கள் மாவட்டங்களில் / பகுதிகளில் கோவிட் தடுப்பூசி செலுத்தப்படும் விவரத்தினை https://stopcorona.tn.gov.in என்ற இணையதளத்தில் "Vaccine Centre" என்ற இணைப்பில் தெரிந்து கொள்ளலாம்.

## 'உங்கள் தொகுதியில் முதல்வர்" திட்டம் தொடங்கியது

- உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டம் செயல்பாட்டுக்கு வந்துள்ளது. ஆறு மாவட்டங்களில் பெறப்பட்ட 549 மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதில், பயனாளிகளுக்கு நலத் திட்டங்களையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.
- மனுதாரருக்கு குறுஞ்செய்தி: ஒவ்வொரு

மனுவும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டவுடன், தனித்தன்மையுடன் கூடிய அடையாள எண் அளிக்கப்பட்டு, அதனுடன் குறுஞ்செய்தி அனுப்பப்படுகிறது. மனுக்களில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள், தகுதியான ஒவ்வொரு மனுவும் கள ஆய்வு செய்யப்பட்டு உடனடியாகத் தீர்வு காண அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.

## கருப்புப் பூஞ்சைக்கான மருந்து: 5,000 குப்பிகள் கொள்முதல்

- கருப்புப் பூஞ்சை பாதிப்புக்குள்ளான மருந்துகளுக்கு தட்டுப்பாடு எழுந்துள்ள நிலையில், அதனை குணப்படுத்தும் ஆம்போடெரிசின்–பி மருந்தை கொள்முதல் செய்யும் நடவடிக்கைகளை தமிழக அரசு தீவிரப்படுத்தியுள்ளது.
- சம்பந்தப்பட்ட நோயாளிகள் ஏற்கெனவே நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவராகவும், சர்க்கரை நோய் போன்ற பாதிப்புடையவராகவும் இருக்கும்பட்சத்தில் ஸ்டீராய்டு மருந்தின் எதிர்விளைவும் சேர்ந்து அவர்களுக்கு பூஞ்சை தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் கண் மற்றும் மூளை நரம்புகள் பாதிக்கப்பட அதிக வாய்ப்புள்ளது.
- கருப்புப் பூஞ்சை பாதிப்பை தமிழகத்தில் அறிவிக்கை செய்யப்பட்ட நோயாக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் அறிவித்தார்.
- இதற்கிடையே, அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கருப்புப் பூஞ்சை பாதிப்பைக் குணப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் ஆம்போடெரிசின்–பி மருந்துக்கு கடும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

## தோட்டக்கலைத் துறை சார்பில் சொட்டுநீர் பாசனம் 100% மானியத்தில் அமைக்க ரூ.20 கோடி ஒதுக்கீடு

- சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கும் திட்டத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதத்திலும் செயல்படுத்தப்படுகிறது. இதேபோல் கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்பு சொட்டு நீர்ப்பாசனம் அமைத்த வவிசாயிகளும் இந்த மானியத்தில் குழாய்களை புதுப்பித்துக் கொள்ளலாம். மேலும், சொட்டுநீர் பாசனம் அமைக்கும் விவசாயிகளுக்கு துணை நிலை நீர் மேலாண்மை திட்டம் மூலம் பலவித உபகரணங்களுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. இதன் அடிப்படையில், ஆழ்துறைக் கிணறு அமைக்க ஒரு விவசாயிக்கு ரூ.25 ஆயிரமும், டீசல் பம்ப் செட் அல்லது மின்மோட்டார் அமைக்க ரூ.15 ஆயிரமும், ஆழ்துளைக் கிணற்றில் இருந்து நீரை எடுத்து வருவதற்கு குழாய்கள் அமைக்க ஒரு விவசாயிக்கு ரூ.10 ஆயிரமும், தரைநிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட ரூ.40 ஆயிரமும் மானியம் வழங்கப்படுகிறது.

## மீனவர்களுக்கு உதவித்தொகை

- 1.72 லட்சம் மீனவர்களுக்கு மீன்பிடி தடைகாலம் நிவாரணமாக 86 கோடி ரூபாய் வழங்குவதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

## சரக்குப் பெட்டகங்களை கையாளுவதில் சென்னை துறைமுகம் புதிய சாதனை

- ஏற்றுமதி இறக்குமதிக்கான சரக்கு பெட்டகங்களை கையாளுவதில் சென்னை துறைமுகம் புதிய சாதனையை படைத்துள்ளது.
- சென்னை துறைமுகத்தில் உள்ள சிங்கப்பூர் துறைமுகத்திற்கு சொந்தமான சிஜடிபிஎல் சரக்குப் பெட்டக முனையத்திற்கு வந்த சிஎம்ஏ சிஜிஎம் பேர்லிஓஸ் என்ற கப்பல் வந்தது. இக்கப்பலில் வந்த 4,645 இற்குமதிக்கான சரக்குப் பெட்டகங்களையும், இதே கப்பலில் ஏற்றிச் செல்லிவிருந்த 4,174 ஏற்றுமதிக்கான சரக்குப் பெட்டகங்களுடன் மொத்தம் 8,719 பெட்டகங்களை கையாண்டு சென்னை துறைமுகம் புதிய சாதனையைப் புரிந்துள்ளது.

## மேக்கேதாட்டு அணை கட்டுமான விதிமீறல் விவகாரம் அறிக்கை தாக்கல் செய்ய குழுவை அமைத்தது என்ஜிடி

- கர்நாடக மாநிலத்தில், மேக்கேதாட்டு பகுதியில் காவிரியின் குறுக்கே அணை கட்டுமானத்தில் விதிகள் மீறப்பட்டதாகக் கூறப்படும் விவகாரத்தில் ஆய்வு அறிக்கையை சமர்ப்பிக்க ஒரு குழுவை அமைத்து தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (என்ஜிடி) உத்தரவிட்டுள்ளது.
- இந்த விவகாரத்தில் பசுமைத் தீர்ப்பாயத்தின் தலையீடு தேவைப்படுவதற்கான போதிய கேள்வி எழுவதாக நாங்கள் கருதுகிறோம். ஆகவே, இந்த விவகாரம் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இந்த விவகாரம் தொடரை்பாக எதிர் தரப்பினருக்க நோட்டீஸ் அளிக்கப்பட வேண்டும். அதில், செய்தித்தாளில் வெளிவந்த செய்தியின் பிரதியும் அளிக்கப்பட வேண்டும். இந்த

விவகாரம் தொடர்பாக ஆய்வு செய்து அறிக்கை அளிக்க குழு அமைக்கப்படுகிறது.

- இந்தக் குழுவில் பெங்களூரில் உள்ள மத்திய சுற்றுச்சூழல், வன அமைச்சகத்தின் ஒருங்கிணைந்த பிராந்தி அலுவலகத்தில் இருந்து மூத்த உறுப்பினர், காவிரி நீர் மேலாண்மை ஆணையம், காவிரி நீராவாரி நிறுவனம் ஆகியவற்றிலிருந்து மூத்த உறுப்பினர்கள், கர்நாடக வனத்துறையின் கூடுதல் வனப் பாதுகாவலர் அந்தஸ்துக்கு குறையாத உறுப்பினர் இடம் பெற வேண்டும்.

## தன்னார்வ நிறுவனங்கள் பதிவிட தனி வசதி

- தன்னார்வ நிறுவனங்கள் தங்களது பெயர்களைப் பதிவு செய்து தொண்டுப் பணிகளை மேற்கொள்ளலாம் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.
- கரோனா நோய்த் தொற்றை ஒழிக்க தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து செயல்பட, மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டது.
- தன்னார்வ தொண்டு நிறுவனனங்கள், தனிநபர்கள் மற்றும் பெருந்தொழில் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் பெயர்களைப் பதிவிடலாம். இதற்கான இணையதளத்தில் (www.ugc.uhcitp.in/ingoregistration) பதிவு செய்து மக்களுக்கு உதவும் பணியில் ஈடுபடலாம். மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவால் www.facebook.com/tnngocoordination என்ற முகநூல் கணக்கு தொடங்கப்பட்டுள்ளது. மேலும், 87544 91300 என்ற செல்லிடப்பேசி மூலமாகவும் tnngocoordination@gmail.com என்ற மின்னஞ்சல் வாயிலாகவும் மாநில ஒருங்கிணைப்புக் குழுவைத் தொடர்பு கொள்ளலாம்.

## உயர் கல்வித் துறைக்கு புதிய முதன்மைச் செயலர்

- சிவதாஸ்மீனா–நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் (மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத் தலைவர், தமிழகப் பிரிவு அதிகாரியான இவர், மத்திய அரசுப் பணிக்குச் சென்று மீண்டும் மாநில பணிக்குத் திரும்புகிறார்).
- தீரஜ்குமார்–நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை முதன்மைச் செயலாளர் (உயர்கல்வித்துறை முதன்மைச் செயலாளர்).
- டி.கார்த்திகேயன்–உயர்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் (நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை முதன்மைச் செயலாளர்).
- எஸ்.ஜவஹர்–கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் (போக்குவரத்துத் துறை ஆணையர்).
- ஹர்மந்தர் சிங்–சர்க்கரைத்துறை ஆணையர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை கூடுதல் தலைமைச் செயலாளர்).

## தமிழ்நாட்டில் நிதி பற்றாக்குறை அனுமதிக்கப்பட்ட அளவிலேயே உள்ளது

- தமிழ்நாடு அரசின் நிதி பற்றாக்குறை அனுமதிக்கப்பட்ட அளவில் கடைப்பிடிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மின்சார துறையின் 22,815 கோடி நிதி சுமையை உதய் திட்டத்தின் கீழ் செலுத்துவதையும் சேர்த்து இது கட்டுக்குள் உள்ளதாக நிதியமைச்சக குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் ரூ.5 லட்சம்: முதல்வர் மு.க.ஸ்டாலின்

- கரோனா நோய்த் தொற்றால் பெற்றோர்களை இழந்து வாடும் குழந்தைகளின் பெயரில் ரூ.5 லட்சம் வைப்பீடு செய்யப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். மேலும், பட்டப்படிப்பு வரை அவர்களின் கல்விக் செலவை அரசே ஏற்கும் எனவும் அறிவிப்பு செய்துள்ளார்.

## 4.5 மெட்ரிக் டன் கும்பகோணம் "கிராம அரிசி" கானா, ஏமனுக்கு ஏற்றுமதி

- தஞ்சை மாவட்டம், கும்பகோணத்தில் சாகுபடி செய்யப்படும் 4.5 மெட்ரிக் டன் "கிராம அரிசி" கானா மற்றும் ஏமன் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாக மத்திய வர்த்தக, தொழில்துறை அமைச்சகம் தெரிவித்தது.
- காப்புரிமை பெறப்பட்டுள்ள இந்த பாஸ்மதி அல்லாத அரிசி ஏற்றுமதி திறனுக்கு எடுத்துக்காட்டாகவும் விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இதுகுறித்து மத்திய வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: புரதம், நார்ச்சத்து மற்றும்

பலவிதமான தாதுக்கள் உள்ள அரிசியாக உள்ள இந்த கும்பகோணம் "கிராம அரிசி"–க்கு (வில்லேஜ் ரைஸ்) காப்புரிமை பெறப்பட்டுள்ளது. கும்பகோணம் பகுதியிலுள்ள விவசாயிகளிடம் நேரடியாக இவை கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

## "நியாய விலைக் கடைகள் மூலம் நிவாரண நிதிக்குப் பாராட்டு"

- ஏழை, எளிய மக்கள் உடனடியாகப் பயன்பெறும் வகையில் நியாய விலைக் கடைகள் மூலம் நிவாரண நிதி அளிப்பது பாராட்டத்தக்க முயற்சி என்று பொருளாதார அறிஞர் அபிஜித் பானர்ஜி தெரிவித்துள்ளார்.